


## கலாசார விழா - 2009 / 2010

# பசுமை

கலாசார பேரவை

பிரதேச செயலகம்,

நாவிதன்வெளி.

தொகுப்பாசிரியர்:

சு.ருபேஷன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவிதன்வெளி பிரதேச செயலகம்

# கலாசார விழா

# சிறப்பு மலர்

## 2009/2010

# பசுமை

வெளியீடு:

கலாசார பேரவை
பிரதேச செயலகம்,
நாவிதன்வெளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுமை

## கலாசார விழா

# சிறப்பு மலர்

**மலர்க்குழு**

திருமதி. அ. பாக்கியராஜா
திரு. சு. ருபேஷன்
திரு . இ . குணசீலன்
திரு . க . பொன்னம்பலம்
திரு . சி . குணரெட்ணம்
திரு . சா . பகீரதன்
திரு . எ . பிள்ளையான்தம்பி

**தொகுப்பாசிரியர்**

திரு. சு. ருபேஷன்
(கலாசார உத்தியோகத்தர்)

**வெளியீடு:**

கலாசார பேரவை
பிரதேச செயலகம்,
நாவிதன்வெளி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


❋ நாவிதன் வெளி பிரதேசமக்களின் சமூக பண்பாட்டு அம்சங்கள் நாட்டார் பாடல்களை அடிப்படையாகக் கொண்ட சிறப்பாய்வு.

❋ நாவிதன்வெளி பிரதேசமக்களின் இடப்பெயர்வுக்கான காரணங்கள் பொதுவான நோக்கு.

❋ பாரம்பரிய நாட்டு வைத்திய முறைகள்.

❋ நான் விரும்பும் இலக்கிய நூல் - சிலப்பதிகாரம்.

❋ திருக்குறள் ஒரு பொதுமறை.

❋ தென் மோடி, வடமோடி கூத்துகளுக்கிடையேயான வேறுபாடுகள்.

❋ திருமணத்தடையும் செவ்வாய் தோஷமும்.

❋ கலாசாரமும் குழந்தைகளும்

❋ பாடசாலை மாணவர்களது கையெழுத்துப் பிரதிகளில் இருந்து பெறப்பட்ட ஆக்கங்கள்.

- ❋ *கல்வியின் சிறப்பு*
- ❋ *இளமையிற் கல்வி.*
- ❋ *மனிதனை உருவாக்குவதில் விளையாட்டின் பங்கு.*
- ❋ *வெற்றி பெற்ற தேசத்தை சிறுவர்களுக்காக கட்டியெழுப்புவோம்.*
- ❋ *வேண்டாம் வேற்றுமை*
- ❋ *சேர்ந்து வாழ்வோம்.*
- ❋ *போரின் கைத்தடி.*

❋ நாடகம்

- ❋ *வாசிப்பும் நவீன தொழில் நுட்பமும்*

❋ கவிதைகள்

- ❋ *நலங்கொழிக்கும் நாவிதன்வெளி*
- ❋ *இலங்கைதேசம்*

❋ நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவின் அபிவிருத்தியில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பு

❋ சேவை நலன் பாராட்டு பெறுவோர் விபரம்

❋ தேசிய கலை இலக்கிய போட்டி முடிவுகள் - 2009 , 2010

❋ நன்றியுரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாசார பேரவை உறுப்பினர்கள்

| | | | |
|---|---|---|---|
| தலைவர் | - | Dr. மு. கோபாலரத்தினம் | (பிரதேச செயலாளர்) |
| உபதலைவர் | - | திரு. சு. கரன் | (உதவி பிரதேச செயலாளர்) |
| செயலாளர் | - | திரு. சு. ருபேஷன் | (கலாசார உத்தியோகத்தர்) |
| உபசெயலாளர் | - | திரு. இ. குணசீலன் | (ஆசிரியர்) |
| பொருளாளர் | - | ஜனாப். பு. ஹபீபுல்லா | (கணக்காளர்) |
| உபபொருளாளர் | - | திரு. எஸ். யோகலிங்கம் | (அரச முகாமைத்துவ உதவியாளர்) |

## பேரவை உறுப்பினர்கள்

1) திரு. கி. அன்ரனி
2) திரு. த. அழகையா
3) ஜனாப் ஏ.எம். அஷ்வர்
4) ஜனாப் எம். எம். கலீல்
5) திரு. சி. குணரெட்ணம்
6) ஜனாப் எம்.எம். ஹசன்
7) திரு. க. குமாரசாமி
8) திரு. கே. மதியழகன்
9) திரு. ரீ. தற்பரன்
10) ஜனாப். எம்.எவ்.எம். நதீர்
11) திரு. ஆர். குணசீலன்
12) திரு. கே. நாகராஜா
13) திரு. கே. பொன்னம்பலம்
14) திரு. வி. அரிகரன்

## மலர் வெளியீட்டுக் குழு:

1) திருமதி. அ. பாக்கியராஜா (உதவி திட்டப்பணிப்பாளர்)
2) திரு. சு. ருபேசன் (கலாசார உத்தியோகத்தர்)
3) திரு. க. பொன்னம்பலம் (நிருவாக உத்தியோகத்தர் கிராம சேவை)
4) திரு. சி. குணரெட்ணம் (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்)
5) திரு. சா. பகீரதன் (பதவிநிலை உதவியாளர்)
6) திரு. ஏ. பிள்ளையான் தம்பி (ஓய்வு பெற்ற ஆசிரியர்)

## விழா குழு

1) திரு. மா. இராமக்குட்டி (நிருவாக உத்தியோகத்தர்)
2) திரு. கி. அன்ரனி (ஓய்வு பெற்ற ஆசிரியர்)
3) திரு. த. அழகையா (அண்ணாவியார்)
4) திரு. கே. சுந்தரலிங்கம் (இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர்)
5) திரு. தெ. நவநாயகம் (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்)
6) திரு. இரா. கிருபாகரன் (சமூக சேவை உத்தியோகத்தர்)
7) திரு. கே. மதியழகன் (சமூர்த்தி முகாமையாளர்)

## நிதிக்குழு

1) ஜனாப். பு. ஹபீபுல்லா (கணக்காளர்)
2) திரு. கி. நாகராஜா (நிதி உதவியாளர்)
3) திரு. வி. அரிகரன் (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்)
4) திரு. கே. இதயராஜா (சமூர்த்தி முகாமையாளர்)
5) ஜனாப். ஏ.எம். அஷ்வர்
6) ஜனாப் எம்.எம். ஹசன் (அரச முகாமைத்துவ உதவியாளர்)
7) ஜனாப். எம்.எவ்.எம். நதீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our Divisional Secretary




**Dr.M.Gopalaratnam**
(B.A, M.A, (Pub.Ad, 2nd Class, SLAS. I)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார பேரவை உறுப்பினர்கள்




இடமிருந்து வலமாக:
முன்வரிசை: திரு.கே.சுந்தரலிங்கம் (இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர்), திரு.சு.கரன் (உதவி பிரதேச செயலாளர்), திரு.மா.இராமக்குட்டி (நிருவாக உத்தியோகத்தர்), Dr.மு.கோபாலரெத்தினம் (பிரதேச செயலாளர்), திரு.க.பொன்னம்பலம், (நிருவாக உத்தியோகத்தர் கிராம சேவை) திரு.கே.மதியழகன் (சமுர்த்தி தலைமை முகாமையாளர்), ஜனாப்.எம்.ஆதம்லெவ்வை (கிராம சேவை உத்தியோகத்தர்), பின்வரிசை: திரு.வி.அரிகரன் (நிகழ்ச்சி திட்ட உதவியாளர்), திரு.தெ.நவநாயகம் (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்), திரு.கே.குணசீலன் (நிகழ்ச்சி திட்ட உதவியாளர்) திரு.கே.திருநாவுக்கரசு (அரச முகாமைத்துவ உதவியாளர்), திரு.சா.பகீரதன் (பதவிநிலை உதவியாளர்) திரு.சு.குபேஷன் (கலாசார உத்தியோகத்தர்), திரு.த.அழகையா (அண்ணாவியார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம சேவை உத்தியோகத்தர்கள்



# சமுர்த்தி உத்தியோகத்தர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலுவலக உத்தியோகத்தர்கள்



## களவேலை உத்தியோகத்தர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கௌரவ இராமகிருஷ்ண மிஷன் சுவாமி அவர்களின் ஆசிச்செய்தி

நாவிதன்வெளி பிரதேச செயலகத்தினால் நடாத்தவிருக்கும் கலாசார விழா தொடர்பாக, சிறப்பிதழ் வெளியிட தீர்மானித்திருப்பதை அறிய மகிழ்ச்சி இத்தகைய நிகழ்வுகள் மக்களின் கலை கலாசாரம் விழிப்புற்று விளங்க தூண்டுகோலாய் அமையும் ஒரு சமுதாயத்தின் பெருமையை எடுத்துக் கூறும் முக்கிய அடையாளங்களாக விளங்குவது அச் சமுதாயத்தின் கலாசார விழுமியங்களாகும்.

நமது கலாசாரத்தில் உயர் மனித விழுமியங்கள் புதைந்து கிடக்கின்றன அவற்றை நம் இளம் சந்ததியினருக்கு அறிமுகப்படுத்துவது கலாசார பேரவை போன்ற அமைப்புக்களின் தலையாய கடமையாகும் இது போன்ற நிறுவனங்கள் இத்தகைய விழாக்களை ஏற்பாடு செய்வதன் மூலம் கலாசார விழுமியங்கள் புதிய உத்வேகத்தை பெறுகின்றன.

பிரதேசத்தின் கலை,கலாசார பாரம்பரியங்கள் சார்ந்ததாகவும் கலைஞர்கள்,எழுத்தாளர்கள் பற்றிய விபரங்கள் கொண்டதாகவும் மூவின கலை கலாசாரங்களை பிரதிபலிக்கும் வகையில் ஆக்கங்கள் பலவற்றையும் மற்றும் பல்வேறு புதிய கலை பண்பாட்டம்சங்களை இந்நூல் தாங்கி வருவது சிறப்பம்சமாகும்.

இதற்கமைய எமது நாவிதன்வெளி பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கலாசார விழாவும் பசுமை சிறப்பு மலர் வெளியீடும் வெற்றிகரமாக நடந்தேற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.


**சுவாமி அஜராத்மானந்தா**

இராமகிருஸ்ண மிஷன்,

இராமகிருஸ்ணபுரம்,

மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதேச செயலாளரிடமிருந்து......

கவினூறு கலைகள் படைத்து, கலை , கலாசாரம் காத்து எமது மற்றைய சந்ததிக்கு அதை சேர்ப்பிக்க பலவகைகளிலும் இன்றைய உலகம் அரும்பாடுபட்டுக்கொண்டிருக்கின்றது. அந்த முயற்சியின் ஒரு அங்கமாக நாவிதன்வெளி பிரதேச கலாசார பேரவையால் தொகுக்கப்பட்டு வெளியிடப்படும் " பசுமை " எனும் இந்நூலானது தனது இரண்டாவது குழவியை இவ்வுலகிற்கு ஈன்றளிக்கின்றது. இவ்விரண்டாவது பிரசவம் எமது பிரதேசசெயலகத்திற்கும் இப்பிரதேசவாழ் மூவினத்திற்கும் பெருமைசேர்க்கின்றது.

பசுமையின் உவகையில் இன்றய உலகம் இன்புற்றிருக்கின்றது. அவ்வின்பம் எமது பிரதேசத்திலும் என்றென்றும் ஊற்றெடுத்து எல்லோர் மனதிலும் நீங்கா செழிப்போடு நாற்காலி போட்டு உட்கார வேண்டும் என்பதுவே எனதும் எமது கலாசார பேரவையினதும் அவா. அவ்வகையில் இம்மலர் தாங்கி வரும் படைப்புக்கள் யாவும் கோர்த்தெடுக்கப்பட்ட இரத்தினக் கோர்வையாக அனைவராலும் சுவைக்கப்படும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

பசுமையினை அச்சுவடிவாக்கி வெளியிடுவதற்கு வேண்டிய முழு அச்சு செலவீனத்தையும் பொறுப்பேற்றுக்கொண்ட உலகதரிசன நிறுவனத்தாருக்கும், குறிப்பாக முகாமையாளர் திரு.இ.மைக்கல் அவர்களுக்கும் இந்நேரத்தில் எமது நன்றியினை தெரிவிக்கவேண்டிய கடப்பாடு எமக்கு உள்ளது.

மேலும் இம்மலர் வெளியீடு பிரசுரமாவதற்கு பெரும்பாடுபட்ட எமது கலாசார பேரவை அங்கத்தவர்களுக்கும் விசேடமாக அல்லும் பகலும் உழைத்த எமது அலுவலக கலாசார உத்தியோகத்தர் திரு.எஸ்.ருபேசன் அவர்களது பங்களிப்பும் திரு.எஸ்.பகீரதன் பதவியணி உதவியாளர் அவர்களது பங்களிப்பும் பெரிதும் பாராட்டப்படவேண்டியதொன்றாகும்.

இக்கலாசார பேரவை மேலும் வலுப்பெற்று எதிர்வருங்காலங்களில் மேலும் பல தரமான படைப்புகளை தாங்கி இப்பகுதி கலைஞர்களை வெளியுலகிற்கு அறிமுகப்படுத்தும் தனது பணியை தொடர்ந்தும் முன்னெடுக்கவேண்டும் எனவும், அதற்கு என்றென்றும் உலக தரிசன நிறுவனம் தனது பூரண பங்களிப்பை நல்கவேண்டும் என கோருவதுடன் இம்மலர் சிறப்புற எனது நல்வாழ்த்துக்களையும் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**Dr.M.கோபாலரெத்தினம்**

பிரதேச செயலாளர்,

பிரதேச செயலகம்,

நாவிதனவெளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கௌரவ கிழக்கு மாகாண முதலமைச்சர் அவர்களின் ஆசிச்செய்தி

நாவிதன்வெளி பிரதேச செயலக கலாசார பேரவையினால் வெளியிடப்படுகின்ற இந்த மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் அளவில்லா ஆனந்தமடைகின்றேன். இந்த நாவிதன்வெளிப் பிரதேசமானது தேசிய ஒற்றுமையை பிரதிபலிக்கும் வகையில் மூவின கலை,கலாசாரங்களை பிரதிபலிக்கும் ஒரு நூலாக இச்சிறப்பு மலர் வெளியிடுவதையிட்டு நான் மிகவும் பெருமிதமடைகின்றேன்.

ஒரு பிரதேசத்தின் கலாசாரமானது அப்பகுதி மக்களின் வாழ்வியலுடன் இரண்டறக் கலந்ததொன்றாகும். எனவேதான் ஒவ்வாரு பிரதேசத்தினது கலாசாரத்தினை அதன் தனித்துவமும்,மூலவடிவமும் கெடாமல் பாதுகாப்பதுடன்,வளர்த்தெடுப்பதும் இன்றியமையாததொன்றாகும். இவ்வகையில் இச்சிறப்பு மலரானது நாவிதன்வெளிப் பிரதேசத்திற்குரிய கலை,கலாசாரங்களை உள்ளங்கை நெல்லிக்கனியாக தெள்ளத்தெளிவாக எமக்கு எடுத்துக் காட்டும் ஒரு காலத்தின் கண்ணாடியாகும் என்பது ஐயமில்லை. அத்துடன் கலாசாரத்தின் காவலனாகவும், அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாகவும் இருக்கும் என்பதில் எனக்கு மாற்றுக்கருத்து எதுவுமில்லை.

இந்நூலின் சிறப்பம்சமாகக் குறிப்பிடக்கூடிய மற்றுமொரு விடயம் யாதெனில் இப்பிரதேச கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்கள் பற்றிய விடயங்கள் பலவற்றையும் இந்நூல் விரிவாக எடுத்தியம்புகின்றது. இது வரலாற்றை அறியவிழையும் எதிர்கால சந்ததியினருக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைவதுடன் கலை மற்றும் கலாசாரம் தொடர்பான ஆய்வாளர்களுக்கு மிகவும் பயனுடைய ஒன்றாகவும் காணப்படுகிறது. ஒட்டுமொத்தமாக நோக்குமிடத்து இவ்வெளியீடானது பாராட்டப்படவேண்டியதும்,வரவேற்கப்படவேண்டியதுமாகும். இதன் உருவாக்கத்திற்காகத் தமது சிந்தனைகளுக்கு செயலுருவம் கொடுத்த அனைவருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவிப்பதுடன் பிரதேச செயலாளர் மற்றும் கலாசார பிரிவுக்கும் எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சி. சந்திரகாந்தன்**
முதலமைச்சர், கிழக்கு மாகாணம்.
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

நாவிதன்வெளி பிரதேச கலாசர விழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

இரண்டு மொழி பேசுகின்ற மூவின மக்கள் வாழ்கின்ற பிரதேசம் நாவிதன்வெளி. உண்மையில் தேசியம் வாழுகின்ற சமாதானம் நிலவுகின்ற ஒற்றுமை பிரதேசம் நாவிதன்வெளிதான் இங்கு வாழ்கின்ற வெவ்வேறான கலை,கலாசார பண்புகளை கொண்டவர்கள் அவைகளை பேணுவதிலும்,ஆளுவதிலும் இங்கு நடைபெறும் கலாசார விழாவின் வெளிப்பாடு "பசுமை" சிறப்பு மலரில் ஆவணமாக பதியப்பட்டு வரலாறு படைக்கும் எனும் எதிர்பார்ப்பு எனக்கிருக்கிறது.

தளர்ந்துபோன நமது பண்பாடு,பாரம்பரியம், பழக்கவழக்கங்களையும், கலாசார விழுமியங்களையும் மீண்டும் உயிர்ப்பிக்கும் நோக்கு இப்படியான கலாசார விழாக்களுக்கு இருக்கிறது.அந்த பொறுப்பை முற்றுமுழுதாக உணர்ந்து நாவிதன்வெளி பிரதேசத்தின் கலையுணர்வை கடந்த கால நினைவுகளை, சுவடுகளை கோவைப்படுத்தும் ஒரு முயற்சியாக முளைவிட்டுள்ள உங்கள் "பசுமை" முயற்சி ஜெயம் பெற வாழ்த்துகின்றேன்.

இக்கலாசார முயற்சியில் தன்னை முழுமையாக உட்புகுத்தி செயற்பட்டுவரும் பிரதேச செயலாளர் எம்.கோபாலரெத்தினம் அவரோடிணைந்து செயற்படும் கலாசார பேரவையினர் மற்றும் கலாசார உத்தியோகத்தர் மற்றும் அனைவரையும் இச்சந்தர்ப்பத்தில் உளமார பாராட்டுவதுடன் விழா சிறப்புற அமைய மும்மணிகளின் ஆசிகள் எல்லோருக்கும் கிடைக்க பிரார்த்திக்கின்றேன்.

**சுனில் கன்னங்கர**
அரசாங்க அதிபர்.மாவட்ட செயலகம்,
அம்பாறை .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

நாவிதன்வெளி பிரதேச செயலகத்தினால் இவ்வாண்டு நடாத்தப்படுகின்ற கலாசார விழாவின் சிறப்பு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமை அடைகின்றேன்

ஒரு பிரதேசத்தில் காணப்படுகின்ற கலை,கலாசார பண்பாட்டு விழுமியங்களை வெளி உலகிற்கு காட்டுவதற்கான களமாக இவ்வாறான பிரதேச கலாசார விழாக்கள் திகழ்கின்றன. அந்த வகையில் பல்லின மக்கள் வாழ்கின்ற பல கிராமங்களை உள்ளடக்கிய நாவிதனவெளி பிரதேச செயலகப்பிரிவில் இவ்வாறானதொரு நிகழ்வு இடம் பெறுவது பரஸ்பர நல்லுறவையும்,சகோதரத்துவத்தையும், இனங்களுக்கிடையே மேலும் பலப்படுத்திகின்றதொரு செயற்பாடாகும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

அந்த வகையில் இவ்விழாவின் முக்கியத்துவத்தினை உணர்ந்து வருடம் தோறும் நடாத்தி வருகின்ற பிரதேச செயலாளரதும் அவரோடிணைந்து செயற்படும் கலாசார குழுவினரதும் முயற்சியானது எல்லோராலும் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். அத்துடன் விழா சிறப்பு மலர் என்பதோடு நின்று விடாமல் கடந்த காலங்களில் கலை கலாசார துறைக்கும் பெரும் பங்காற்றியவர்களை செம்மையாக தேர்ந்தெடுத்து பாராட்டுகின்ற கலைஞர் கௌரவிப்பு நிகழ்வும் இவ் விழாவின் மேலும் ஒரு சிறப்பம்சமாகும் .

எனவே இப்பாரிய செயற்பாட்டினை முன்னின்று எடுத்துச் செல்லும் பிரதேச செயலாளர் எம். கோபாலரெத்தினம் மற்றும் உதவி பிரதேச செயலாளர், காலாசார உத்தியோகத்தர், மேலும் கலாசாரப் பேரவையின் உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்கள். இவ்விழா சிறப்புற நடந்தேற எனது பிராத்தனைகள்.

**J.S.D.M. அசங்கஅபேவர்த்தன**

மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர்.மாவட்ட செயலகம்.

அம்பாறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உதவிப் பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி

நாவிதன்வெளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட மக்களின் கலைகலாசார விழுமியங்கள், மரபுகள், வழக்காறுகள் நடைமுறைக் கோட்பாடுகளை தொகுத்து ஆவணமாக்கும் இக் கடின பணிக்கு என் ஆசிச்செய்தியை வழங்குவதில் மனநிறைவடைகின்றேன். ஒவ்வொரு சமூகமும் தோன்றியது முதல் அச்சமூகத்திற்கு என தனித்தன்மையான இயல்புகளைக் கொண்டிருக்கும். அதுவே அவர்களின் கலையாக கலாசாரமாக மரபாக வழமையாக மாறிவிடும். இதனை அச்சமூகம் காலமாற்றங்கள், நாகரீக கோலங்கள் உலக மாற்றங்களுக்கு ஏற்ப மாற்றுடைமையாக உருவாக்கிக் கொள்கின்றது. கால மாற்றங்களை அனுமதிப்பதனால் எமது பண்புகள் மலினப்பட்டு விடுகின்றதுடன் தடயங்கள், தடங்கள் மறக்கப்பட்டும் விடுகின்றன. இது பாரிய கொடுமை. இதனை தடுத்து எமது மூதாதையர்கள் கட்டிக்காத்த எமது கலை உணர்வு பொக்கிஷங்களை நாம் எம் எதிர்கால சந்ததியினர் பழைமையை எண்ணியெண்ணி வாசித்து உணரவும் அறியவும்,சுவைபடவும் எமது பாரம்பரியத்தை அறியவும் எமது பாரம்பரியத்தை ஆவணமாக்குவது தற்போதய சந்ததியினரின் தலையாய கடமையாகும். அப்பேர்ப்பட்ட உயரிய பணியை பிரதேச செயலகம் முன்னெடுத்திருப்பது பாராட்டுக்குரியதும் நன்றிக்குரியதும் ஆகும்.

வாழ்க்கை வாழ்வதற்கு என்ற அத்தியாயத்தில் உலகம் நாள் கழிகிறது. அதுபோல் வாழ வந்தவர்கள் "வெந்ததை திண்டு விதிவந்தால் போவம்" என வாழ்வதும் ஒரு வாழ்க்கையா? வாழ்க்கை என்பது கோட்பாடுகள் கொள்கையுடன் நவீனத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து பழமையைப் போற்றி மதித்து வாழ வேண்டுமென இவ் ஆவணவாக்கம் எமது சமூகத்திற்கு ஒரு பாடமாக, வேதமாக அமைய வேண்டும். எமது இதிகாச, புராணங்கள், திருக்குறள் போன்றவை கூறிய வாழ்க்கைப் பாடங்களை பிரதிபலித்து நல்லொழுக்கம், நாவடக்கம், கற்கட்டு ஒழுங்கு, மதம் போற்றும் தன்மை, பொறுமை, முதுமை, மதிப்பு, நீதி, தர்மம், தார்மீகம் போற்றி வாழும் சமூகமாக இவ் நாவிதன்வெளி மக்கள் வாழ இவ் பசுமை நூல் மறந்துபோன எமது மக்களின் பழமை, பண்பு, கலைக்கு, முதுமை எனும் போர்வை போர்த்துவதாக அமைய வேண்டும். இம்முறைமை அமையாவிடினும் சமூகத்தில் தோன்றியுள்ள பழைமை, புதுமை, என்கிற ஏற்ற இறக்க இடைவெளியை நிவர்த்திக்க இப் பசுமை முயற்சிக்க வேண்டும். நாவிதன்வெளி மக்களின் கலை இலக்கிய கலாசார தேடலுக்கும் சரி, ஆக்கத்திற்கும் சரி, முறையான களமாக இப் பசுமை விளங்க வேண்டும். இப்பகுதி மக்களின் கலாசார வெளிப்பாட்டு நூலாகவும் நன்நெறிக்கும் நற்பண்புக்கும் நானிலம் போற்றும் முதுகெலும்பு நூலாக திகழ மனம் நிறைந்த வாழ்த்துக்களை அள்ளி வழங்குவதில் மனம் குளிர்வடைகின்றேன்.

இந்நூல் வெளியீட்டுக்கு பாடுபட்ட விழாக்குழுவினர்கள் எமது உத்தியோகத்தர்கள், நிதி உதவி செய்தவர்கள் அனைவரையும் பாராட்டி மன மகிழ்ச்சி அடைகின்றேன்.

**திரு. சுப்பிரமணியம் கரன்**

[BECon(Hons)spcial, MA (Public Administrion) SLAS]

உதவி பிரதேச செயலாளர்

பிரதேச செயலகம்

நாவிதன்வெளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டலுவல்கள் திணைக்கள
# பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

கலை கலாசார விழுமியங்கள் ஒவ்வொரு மனிதனுடைய வாழ்வோடும் பின்னிப் பிணைந்ததொன்றாகும். ஒவ்வொரு இன மக்களுக்கும் அவரவர்களுக்கென தனித்துவமான கலாசாரம் காணப்படுகின்றது. ஒவ்வொரு நாட்டிற்கும் ஒவ்வொரு பிரதேசத்திற்கும் மொழி, மதம், நடையுடைபாவனை, உணவுப் பழக்கவழக்கங்கள் என்பன அவர்களின் கலாசாரத்தை மையமாக கொண்டு திகழ்கின்றது.

அந்தவகையில் நாவிதன்வெளிப் பிரதேசசெயலகப் பிரிவும் மூவின மக்களினதும் கலைப்பாரம்பரியத்தை மையமாகக் கொண்டு காணப்படுவது மிகவும் சிறப்பு வாய்ந்ததொன்றாகும். அப்பிரதேசத்தில் வாழ்கின்ற மூவின மக்களுக்கிடையிலான இலக்கிய ஆர்வத்தை மேம்படுத்தும் முகமாகவும் இலைமறை காயாக காணப்படுகின்ற கலைகளை வெளிக் கொணரும் வகையிலும் ஒவ்வொரு வருடமும் இப்பிரதேசசெயலகத்தினால் கலாசார விழா நடாத்தப்பட்டு வருகின்றது. எனவே இப் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களின் கலைகலாசாரத்தினை வெளிப்படுத்தும் நோக்கில் 2009/2010ம் ஆண்டுக்கான கலாசார விழாவானது இவ்வருடம் நடாத்தப்பட இருப்பது மகிழ்ச்சிக்குரியதொன்றாகும்.

இவ்விழாவை முன்னிட்டு சிறப்பு மலர் ஒன்றும் வெளியீடு செய்ய உள்ளதால் மேலும் அப்பிரதேச மக்களின் கலைப்பாரம்பரியங்களை வெளிக்கொணர ஒருவாய்ப்பாக அமைகின்றது. இவ்விழா சிறப்புற அமையவும் சிறப்பு மலர் சிறந்த முறையில் வெளிவரவும் எனது நல்லாசிகளை தெரிவிப்பதோடு இதற்கு முன்னின்று நடாத்துகின்ற பிரதேசசெயலாளர், கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலக ஊழியர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

**DWU. வெலிகள**

பணிப்பாளர்

பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வி அமைச்சு

கிழக்கு மாகாணம்,திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவ அம்பாறை மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தரின் வாழ்த்துச் செய்தி

நாவிதன்வெளி பிரதேச செயலகத்தினால் இவ்வருடம் நடைபெறவுள்ள பிரதேச கலாசார விழாவின் போது வெளியிடப்படவுள்ள "பசுமை" எனும் பல்லம்சம் நிறைந்த சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றேன்.

அம்பாறை மாவட்ட நாவிதன்வெளிப் பிரதேசம் மூவின மக்களும் இணைந்து வாழ்கின்ற வயற்பாங்கான பிரதேசம், சிறந்த கலைஞர்கள், கவிஞர்கள், நிறைந்த கலைப் பிரதேசம் நாகரீகம் - பண்பாடு மேலான விழுமியங்கள் நிறைந்த இயற்கை வளம் கொண்ட இவ்வினிய பிரதேசம் இருபது கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்டது.

தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர் என மூவின மக்களும் இங்கே தொடர் சங்கிலிபோல் இணைந்து வாழ்வது இன ஒற்றுமைக்கு எடுத்துக் காட்டாகும். இதனடிப்படையில் இப்பிரதேசத்தில் சாகித்திய விழாக்கள் தோன்றுவது சாத்தியமே. எங்கே மகிழ்ச்சியும் மலர்ச்சியும் இருக்கின்றதோ அங்கே விழாக்களும் கால்கொள்வது உண்மையே! மனித வாழ்க்கையில் கலையும் கலாசாரமும் பின்னிப் பிணைந்தவை. வாழ்வின்றி கலையுமில்லை கலையின்றி வாழ்வுமில்லை. மானுடத் தொடர்ச்சியில் முன்னோர்கள் எமக்கு விட்டுச் சென்ற முதுசொம்கள், பொக்கிஷங்கள் எத்தனையோ! எத்தனை இவற்றில் ஆவணப்படுத்தப்படாமல் அழிந்தவையும் அதிகம்.

நவீன யுகத்தில் நல்ல கலைகளை, கலைஞர்களை நாம் கௌரவிக்காமல் வெளிக்கொணராமல் இருந்தால் அது கலைக்கு நாம் செய்யும் கேடாகும். முன்னோர் முதுசொம்களையும் வாழ்வோர் கலைவிருட்ஷங்களையும் எதிர்கால சந்ததியினருக்கு விளங்கிக் கொள்ள ஒரு சிறப்பு மலரை வெளியிட்டு ஆவணப்படுத்துவது பெரும் சிரமமான செயலாகும். அப்படியிருந்தும் கலாசார விழாவும் நடாத்தி சிறப்பு மலரும் வெளியிட்டு கலைஞர்களை கௌரவிப்பதும் பொற்குடத்துக்கு மேலும் பொட்டிடுவது போலாகும்.

அந்த வகையில் பல்வேறு காரியாலய வேலைப்பழுக்களுக்கும் மத்தியில் கலையோடு தொடர்பான இச்செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்கின்ற அன்பிற்குரிய பிரதேச செயலாளர் எம். கோபாலரெத்தினம், அவரை பின் தொடர்ந்து செல்லும் எமது திணைக்கள கலாசார உத்தியோகத்தர், இவ்விழாவுக்காக உழைக்கின்ற அன்பர்கள், அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள். கலைஞர் கௌரவிப்பு, சிறப்பு மலர் வெளியீடு, சாகித்திய விழா, ஆகியவை மலர்ந்து மணம் பரப்ப வேண்டுமென இறைவனை பிராத்திக்கின்றேன்.

**A.L.தௌபீக்**

மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்,

மாவட்ட செயலகம்,அம்பாறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவிதன்வெளி பிரதேச சபை தவிசாளரின் வாழ்த்துச் செய்தி

நாவிதன்வெளி பிரதேசமானது இருண்ட யுகத்தில் இருந்து படிப்படியாக கல்வி,வேலைவாய்ப்பு, பொருளாதாரம் என்பவற்றுடன் பௌதீக அபிவிருத்தியிலும்,பிறந்த சிசு ஒன்று பருவவளர்ச்சி அடைவதைப்போல் வளர்ந்துவரும் இச்சந்தர்ப்பத்தில் நடைபெறும் கலாசார விழா மிகவும் பொருத்தமானதாகும்.

இப்பிரதேசத்தில் இலைமறை காய்களாக உள்ள கலாசார ஆர்வலர்களும், கலைஞர்களும் இனங்காணப்பட்டு மூவின கலை,கலாசாரங்களும் சிறப்பாக பேணப்பட்டு அதற்கான கலாசார விழாவும் விழாவிற்கான சிறப்பு மலரும் மலர்வதையிட்டு இப்பிரதேச தவிசாளர் என்ற வகையில் எனது நிறைவான ஆசியை வழங்கி பெருமிதமடைகின்றேன்.

**திரு. த.கலையரசன்**

தவிசாளர்,

பிரதேச சபை,

நாவிதன்வெளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாவிதன்வெளி வேல்ட்விஷன் லங்கா பிராந்திய அபிவிருத்தித்திட்ட முகாமையாளரின் வாழ்த்துச் செய்தி

ஒரு சமூகத்தை நெறிப்படுத்துவதிலும் உருவாக்குவதிலும், அச் சமூகத்தின் சாகித்தியக் கலைகள் பெரும் பங்காற்றுகின்றன. கலாசாரம் என்கின்ற பெயரில், நமது இளையோர் மத்தியில் மேலை நாட்டு கலாசாரங்கள் செலுத்தும் ஆதிக்கமானது, அண்மைக் காலமாக எல்லை கடந்து செல்வதை பார்க்கும் போது சற்று வேதனையாகத்தான் உள்ளது. இந்நிலையை மாற்றி அமைப்பதற்கென்றும் மருவிக்கிடக்கின்ற எமது சமூகத்தின் கலை, கலாசார, பண்பாட்டு சமூக விழுமியங்களை உயிரூட்டுவதற்கென்றும், சமூக விழிப்புணர்ச்சியை தட்டியெழுப்புவதற்கென்றும் முன்னெடுக்கப்படுகின்ற இவ்வாறான சமூக வலுவூட்டல் விழாவிற்கு சிறப்பு மலர் ஒன்றை வெளியிடுவதில் பங்காற்றுவதையிட்டு இம்மண்ணில் பணிபுரிபவன் என்ற பெயரில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த காலங்களில் இச்சமூகம் அனுபவித்த கசப்பான அனுபவங்களின் வாயிலாக இறுகிப் போன மனித மனங்களில் அன்பு, சகோதரத்துவம், ஒற்றுமை, விட்டுக்கொடுப்பு, மனிதநேயம், மதிப்பு, மரியாதை போன்ற நற்பண்புகள் துளிர்விட, சமூகத்தின் சாகித்தியக் கலைகள் உயிரூட்டமளிக்கப்படல் வேண்டும். வாழும் இக்கலைகளுக்கு மதிப்பளித்து, இம் மூவின சமூகமதில் புரிந்துணர்வும், மன்னிப்பும், அமைதியும் பெருகி, தமிழ் தாய் மடிதனில் அன்பினைப் பருகுகின்ற மழலைகளாக நாமனைவரும் மாறிட, எமது மனங்களை, அறிவனைத்தையும் கடந்த அந்த இறையருள் ஆட்கொள்ள வேண்டிப் பிரார்த்திப்பதோடு நன்றியும் வாழ்த்தும் கூறி நிற்கின்றேன்.

நன்றி

**திரு. இருதயம் மைக்கல்**
முகாமையாளர்.
பிராந்திய அபிவிருத்தித் திட்டம் வேல்ட்விஷன் லங்கா
நாவிதன்வெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்பத் தமிழ்

தமிழுக்கு அமுதென்று பேர் – அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்!
தமிழுக்கு நிலவென்று பேர் – இன்பத்
தமிழ் எங்கள் சமுகத்தின் விளைவுக்கு நீர்!
தமிழுக்கு மணமென்றுபேர்! – இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!
தமிழுக்கு மதுவென்றுபேர் – இன்பத்
தமிழ் எங்கள்உரிமைச்செம் பயிருக்கு வேர்!
தமிழ் எங்கள் இளமைக்கு பால் – இன்பத்
தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்!
தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்! இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்!
தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள்! இன்பத்
தமிழ் எங்கள் கவிதைக்கு வரத்தின் வாள்!
தமிழ் எங்கள் பிறவிக்கு தாய்! இன்பத்
தமிழ் எங்கள் வலமிக்க உளமுற்ற தீ!

(பாரதிதாசன் கவிதைகளில் இருந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவிதன்வெளிப் பிரதேச மக்களின் சமூக பண்பாட்டு அம்சங்கள்



## (நாட்டார் பாடல்களை அடிப்படையாகக் கொண்ட சிறப்பாய்வு)

நாவிதன்வெளி பிரதேசத்தில் தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள், கிறிஸ்த்தவர்கள் என நான்கு இனமக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இப்பிரதேசத்தில் காணப்படும் நாட்டார் பாடல்களினூடாக அப்பிரதேச மக்களின் சமூக பண்பாட்டம்சங்களான திருமணம் குடும்ப உறவுகள், சாதிகள், பண்பாடு, பழக்கவழக்கங்கள், இனநம்பிக்கைகள், பாலியல் சார்ந்த விடயம், திருவிழாக்கள், தொழில்கள், சமயம், கல்வி, என்பன வெளிப்படுத்தப்படுகின்றன.

ஒரு மனிதன் பிறந்தது முதல் இறுதிவரை தான் பிறந்த சாதிக்கு கட்டுப்பட்டவன். திருமணம் , வாழ்க்கை, பிறப்பு, இறப்பு, பாவம், புண்ணியம், சடங்குகள் என அனைத்திலும் எவ்வெவ்வகையில் செயற்படவேண்டும் என சாதியே வழிகாட்டி விடுகின்றது. இவை அந்தந்த சாதிக்குரிய சமூகத்துக்குரிய பழக்கவழக்கங்களாக உருவாகி எழுதாச் சட்டங்களாக நிலைத்து நின்று விடுகின்றன.

நாகரீக வாழ்க்கையை சமுதாயம் பெற்றிருந்தாலும் அவர்களின் வாழ்க்கை முறையில் பணத்தின் காரணமாக ஏழை பணக்காரன் என்ற ஏற்றத் தாழ்வு உருவாயிற்று. சமுதாயத்தில் ஏற்பட்ட இந்த ஏற்றத் தாழ்வு காரணமாக வசதி படைத்தோரின் வாழ்க்கை முறை ஏழைகளுக்கு ஏணி வைத்தாலும் எட்டாத தூரத்திலே இருக்கின்றது. இந்த ஏற்றத்தாழ்வு நாட்டார் பாடல்களில் பிரதி பலிப்பதைக் காணலாம்.

### பண்பாடு பற்றிய விளக்கம்

பண்பாடு பற்றிய விளக்கங்களை விளங்கிக் கொள்ள ஆய்வாளர்களின் கருத்துக்கள் முதலிடம் பெறுகின்றன. ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் மொத்த வாழ்க்கை முறையே பண்பாடு எனப்படுகிறது. மக்கள் தலைமுறை தலை முறையாக குழுவினரோடு சேர்ந்து கற்ற நடத்தை முறைகளும் பழக்க வழக்கங்களும் மரபுகளும் சேர்ந்த தொகுதியே பண்பாடு ஆகும். என்றும், அனைவராலும் பகிர்ந்து கொள்ளப்பட்ட கருத்துக்களும் சமுதாய மரபுரிமையாக பெறப்பட்ட நம்பிக்கைகளும், பழக்கவழக்கங்களும் அடங்கிய தொகுப்பை பண்பாடு என்றும் பொதுவாக வரையறை செய்யலாம். “அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள், சட்டம், வழக்கம், முதலானவையும் மனிதன் சமுதாயத்தில் ஒரு உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும் பழக்கவழக்கங்களும் அடங்கிய முழுத்தொகுதியே பண்பாடு” என மானிடவியலாளரான எட்வர்ட் பர்னெட் டைலர் (Tylor) விளக்குகின்றார்.

“பண்பாடு கருத்துருவ நிலைப்பட்டதாகவும் பௌதீக நிலைப்பட்டதாகவும் காணப்படுகின்றது. கருத்துருவ நிலை என்பது விழுமியங்கள், உயர்வழக்குகள் ஆகியவற்றைக் குறிக்கும். பௌதீக நிலைப்பட்டவை நடைமுறைக் கோட்பாடு ஆகும். பண்பாடு என்பது குறிப்பிட்ட மக்கள் கூட்டம் தனது சமூக வரலாற்று வளர்ச்சியின் ஊடாகத் தோற்றுவித்துக் கொண்ட பௌதீகப் பொருட்கள், ஆத்மார்த்தக் கருத்துக்கள், மதநடைமுறைகள், சமூகப் பெறுமானங்கள் ஆகியவற்றினதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுதியாகும்." என பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் கூறுகின்றார்.
(றமீஸ் அப்துல்லா - 2001 - 32)

ஒரு நாட்டின் உண்மையான பண்பாட்டை அதன் அகத்தே தான் காணமுடியும். நகரங்களில் அல்ல. உட்பகுதியின் சூழல்கள், இயற்கை நியதிகள், பாட்டு, கதை, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றில் மக்களின் உண்மை வாழ்க்கை நெறியினை அறியலாம். என அ.மு.பரமசிவானந்தம் குறிப்பிடுகின்றார். (றமீஸ் அப்துல்லா - 2001 - 31)

பெரும்பாலும் சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்ற உளப்பாங்கின் வெளிப்பாட்டையே பண்பாடு என்கின்றார். மக்களின் பழைய வரலாற்றில் அவர்கள் இயற்றிக் கொண்ட கருவிகள், சமூகப் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் முதலானவற்றையும் பண்பாடு என்ற சொல் குறிக்கின்றது.

மக்களின் அறிவு, நலம், ஒழுக்க உயர்வு, கொள்கை நலம், பண்பு, வாழ்க்கை, ஆகியன மென்மேலும் திருந்திய நிலையே பண்பாடு எனலாம். இத்தகைய கருத்தில் நோக்கப்படுகின்ற பண்பாடு கிராமிய இலக்கிய வடிவங்களின் ஊடாக மக்கள் வாழ்க்கையில் கலந்திருப்பதனை மிகத் தெளிவாக உணர்ந்து கொள்ள முடிகின்றது.

எனவே பண்பாடு தொடர்பான விடயங்கள் நாவிதன்வெளிப் பிரதேச நாட்டார் பாடல்களுடன் எவ்வாறு தொடர்புபட்டுள்ளது என்பதை பின்வருமாறு அறிந்து கொள்ளலாம்.

## பழக்க வழக்கங்கள்

நாட்டார் பாடல்களினூடாக வெளிப்படும் பழக்கவழக்கங்களாக திருமணம், சாதி ஏற்றத் தாழ்வு, உணவு, தின்பண்டங்கள், உறவுமுறைகள், விழுமியங்களைப் பயிற்றுவித்தல் என்பண அடங்குகின்றன. கிராமங்களில் கற்காத பாமர மக்கள் தங்களுக்கு குழந்தைப்பேறு இல்லையென்றால் நிவர்த்திக்கடன் கொடுப்பர். வயல்வெளிகளில் நாகப் பாம்புகளைக் கண்டால் அது இனிமேல் எங்கள் கண்களில் படாமல் இருக்க கோழியைப் பலிகொடுப்பதாகவும், தங்களின் உடல்களுக்கு நோய் ஏற்பட்டு உயிருக்கு ஆபத்தான நிலையில் அது குணமானால் கடவுளுக்கு காவு கொடுத்து பூசை செய்வதாயும் வேண்டிக் கொள்கின்றனர். இந்தப் பழக்கவழக்கங்கள் சிறுவர் விளையாட்டுக்களில் தேர் விளையாட்டில் சிறுவர்களால் தட்டானைப் பிடித்து பலியிட்டு விளையாடப்படுகிறது. உணவு தின்பண்டங்கள் என்பன இவர்களது விளையாட்டுப் பாடல்களில் வெளிப்படுகின்றன. அனைத்து உயிர்களும் உயிர் வாழ்வதற்கு உணவு மிக முக்கியமானது. இவர்களது விளையாட்டுப் பாடல்களில் சோறு, மீன், பழங்கள், பலகாரங்கள், நண்டு, பால், ஐஸ்பழம், இடியப்பம், தோசை, போன்றவற்றை அறியலாம்.

உதாரணமாக பின்வரும் பாடல்களைப் பார்ப்போம்.
மௌலானா வாப்பா வந்தாருஹா
வாழச் சொல்லிச் சொன்னாருஹா
அரிசி, கறி தந்தாருஹா
ஆக்கச் சொல்லி சொன்னாருஹா
உப்புக் கூட என்று சொல்லி
உட்டுப்போட்டுப் பெய்த்தாருஹா
(சிப்னா.அ, வயது - 09, 6ம் கொலனி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொட்டத் தலைக்காக்கா
புட்டுத்தின்ன வாடா
நண்டு சுட்டுத்தாரன்
இண்டைக்கு வாடா
இடியப்பம் தாறேன்
சாப்புட்டுத்துப் போடா
(ரெனிஷா, வயது - 09, நாவிதன் வெளி - 02)

இவ்வாறு பல பாடல்களைக் காணலாம் இது ஒரு விவசாயக் கிராமம் என்பதனால் மக்கள் பெரிதும் நெல் அரிசி சோற்றினையே பிரதான உணவாக உட்கொள்கின்றனர்.

**சாதி, தொழில் :-**

கிராமங்களில் பல்வேறு தொழில்களைப் புரியும் பல சாதியமைப்புக்கள் காணப்படுகின்றன. கிராமங்களின் பல சாதியமைப்புக்களையும் அதனோடு தொடர்புடைய தொழில்களைப் பற்றியும் நாட்டார் பாடல்கள் தெரியப்படுத்துகின்றன.

யாரடா.................?
இந்த ஐயங்கோயிலுக்குள்ளாலே
நாங்கதான்
ரெண்டு தட்டாரப்பிள்ளைகள்.............

என்ற பாடலில் தட்டாரரப்பிள்ளைகள் என்னும் பதம் அணிகலன் செய்யும் குடியைச் சேரந்த மக்களைக் குறிக்கின்றது. தொடர்ந்து சாதியை வெளிப்படுத்தும் பாடல்களை நோக்குவோமெனில்

அரிமிளகு திரிமிளகு
அண்டம் பிலாக்காய்
அம்புட்ட வண்ணானைக்
கும்பிட்டழைத்து
ஆறுமுகச் சாமியை
கயிறாகத் திரித்து
போகுதாம் கப்பல்
பெரிய துறை பார்க்க
பெரிய துறை பாரக்க
(வேலுப்பிள்ளை, வயது - 50, காரைக்குடா)

இந்தப் பாடல் வரும் "வண்ணான்" என்ற சொல் சலவைத் தொழிலாளி பற்றி கூறுகின்றது. இது சமூகத்தில் தாழ்ந்த சாதி உயர்ந்த சாதி என்ற நிலையை ஏற்படுத்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமணம், வாழ்க்கைமுறை:-**

நாவிதன்வெளி பிரதேச நாட்டார் பாடல்களில் திருமணமும், வாழ்க்கை முறையும் பின்வருமாறு வெளிப்படுகின்றது இவ்வகைப்பாடல்கள் இன்று மறைந்தும் அருகியும் போயுள்ளது. இருந்தாலும் பெரும்பாலும் பெண்பிள்ளைகளே விளையாடுகின்றனர். வழக்கில் இருக்கும் சில பாடல்களைப் பார்க்கலாம். இவ்விடயம் தொடர்பான பாடல்கள் முஸ்லிம்களிடையே வழக்கில் இருப்பதைக் காணலாம்.

தாலி பீலி பொண்ணுண்டு
தாமரையாரே பொண்ணுண்டு
வண்ணக்கிண்ணப் பொண்ணுண்டு
இந்த வன்னியனார்க்கு பொண்ணுண்டு

இது பெண்பிள்ளை வீட்டுக்காரர் மாப்பிள்ளை வீட்டுக்கார தாயிடம், மாப்பிள்ளை கேட்டுப் பாடுகின்ற தன்மையினையும் இதற்குப் பதிலாக மாப்பிள்ளை வீட்டுக்காரி பின்வருமாறு பாடுகின்றாள்.



தாலி பீலி வந்தென்ன
தாமரையாரே வந்தென்ன
வண்ணக்கிண்ண வந்தென்ன

இதற்குப் பெண்பிள்ளையின் தாய் பின்வருமாறு பதில் இறுப்பாள்.

தாலி பீலி சீதனமென்ன
தாமரையாரே சீதனமென்ன
வண்ணக்கிண்ண சீதனமென்ன

இப் பாடல்களினூடாக இன்றைய காலத்தில் பெரும் செல்வாக்கு பெற்று விளங்கும் "சீதனம்" என்ற விடயம் சிறுவர் விளையாட்டுப் பாடல்களினூடாகப் வெளிப்படுத்தப்படுகின்றன. மீண்டும் மாப்பிள்ளை தரப்பிலிருந்து மாப்பிள்ளைக்கு இவ்வளவு சீதனம் தரவேண்டும் என்று பாடல்களினூடாகக் கேட்டுப் பாடுவார்கள்.

தாலி பீலி அஞ்சேக்கர்
தாமரையாரே அஞ்சேக்கர்
வண்ணக்கிணனண அஞ்சேக்கர்
இந்த வன்னியனார்க்கு அஞ்சேக்கர்
(பிர்தௌஸ், வயது - 42, மத்திய முகாம்)

இப்படி கல்யாணம் பேசி, நாள்குறித்து, சீதனம் கொடுத்து திருமணம் நடைபெறும். பின் திருமணம் செய்து கொண்ட தம்பதியினருக்கு பிள்ளைகள் பெற்று விளையாடுவதாக கற்பனையில் விளையாடி மகிழ்வர். பிள்ளை - பெற்று விளையாடுவதில் சிறுகல்லு, சிறியதடி, குச்சி போன்றவற்றை தங்களுக்கு பிறக்கும் பிள்ளைகளாக உருவகிப்பர்.

இதனைவிட மாமியார், பாட்டன், பாட்டி, போன்றோர் பிள்ளைகள் பிறந்தவுடன் தூக்கி கொஞ்சி மகிழ்ந்து குரவையிட்டு வெடிக்கொழுத்தி பக்கத்து வீட்டாரும் சேரந்து வந்து அவர்களுக்கு உடை, தேன், சவர்க்காரம் என்பவற்றைக் கொடுத்து கொண்டாடிய பின்னர் கல்யாணப் பேச்சு இடம்பெறும். பெண்பிள்ளை பிறந்தால் ஆண்பிள்ளைகளை வைத்திருக்கும் மாமி முறையானவள் தனது மகனுக்கு அப்பிள்ளையைத் தர வேண்டுமென்று சாணைக்குறி போடும் பழக்கம் பல்வேறு சமூகங்களிலும் காணப்படுகின்றன. இவை தொடர்பான விடயங்கள் இன்று அருகி போயியுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருவிழாக்கள்:-**

கிராமங்களில் நடைபெறும் கோவில்களின் திருவிழாக்கள் மக்களின் பண்பாட்டை எடுத்துக்காட்டுகின்றன. ஊர்த்திருவிழா என்றதும் பெரியவர்களைவிட சிறியவர்களே அதிகம் மகிழ்ச்சியில் மூழ்குகின்றனர். தனிப்பட்டவர்களின் மகிழ்ச்சி, குடும்பத்தில் சந்தோஷம், சமூதாயத்தில் ஒற்றுமை, இவைதான் திருவிழாக்களின் நோக்கம் ஆகும். பொங்கல் பொங்கி கடவுளுக்கு படைத்து தேர் இழுப்பதனையும் இதன்போது காணலாம். தேரத்திருவிழாவில் அதிக மக்கள் கலந்து கொள்வர். திருவிழாக்கள் ஒரு சமூகத்தின் பண்பாட்டையும் கலையையும் வளர்த்துச் செல்கின்றன.

முஸ்லிம் சமுகத்தின் பண்பாட்டை எடுத்துக் கூறும் நிகழ்வுகளில் பிரதானமானவை நோன்புப் பெருநாள், ஹஜ்ஜிப் பெருநாள் ஆகும். பெருநாள் வருவதை நினைத்தாலே சிறுவர்களுக்கு ஒரே கொண்டாட்டம்தான் இந்த சந்தோசத்தில் அதிகமான விளையாட்டுக்களை விளையாடி இன்புறுவர்.

நாளைக்குப் பெருநாள்
எங்க வாப்பா வருவா
எங்க உம்மா சுடுவா
எனக்கென்ன ஆசை
தும்புக்கட்டுப் பூசை
(எ.பி.ஒபாயா, வயது-15, 6ம் கிராமம்)

எங்க உம்மா சுடுவா என்பது பலகாரம் சுடுதலைக் குறிக்கும். இவ்விளையாட்டுப்பாடல் பண்பாட்டை வெளிப்படுத்துவதை காணலாம். இதேபோன்று இறைநம்பிக்கையை வெளிப்படுத்தும் பாடல்களும் உள்ளன. தொடர்ந்து இப்பிரதேசத்தில் காணப்படும் கோயில்கள் மக்களின் வாழ்க்கையோடும் பண்பாட்டோடும் தொடர்புபட்டுக் காணப்படுகின்றன. இவை திருமணம், மரணம், போன்ற நிகழ்வுகளிலும் செல்வாக்கு செலுத்துகின்றன. அத்துடன் சடங்குகள், விரதங்கள், பண்டிகைகள், ஆகியவற்றோடும் பின்னிப் பிணைந்து காணப்படுகின்றன.

**குடும்ப உறவுகள் :-**

குடும்ப உறவுகளை வெளிப்படுத்தும் விளையாட்டுப் பாடல்களும் உள்ளன. "இரத்தக்கலப்பாலும் பெற்றோர் கால் வழியாலும் மண உறவினாலும் ஒரே குழுவினர் ஒரே இடத்தில் வாழும் தன்மையினாலும் உறவுமுறை அமைகின்றது" என்று கோ.சுப்பையா 1971.427. கூறுகின்றார்.

குடும்ப உறவு முறைகள் குறித்து இங்கு விரிவாக ஆராய வேண்டியதில்லை. உறவுப் பெயர்களை சிறுவர்கள் எப்படி எந்தச் சூழலில் தங்கள் பாடல்களில் பயன்படுத்துகின்றனர். என்பதை பின்வரும் பாடல் மூலம் விளங்கிக் கொள்ளலாம். அம்மா, அப்பா, தம்பி, தங்கை, தாத்தா, பாட்டி, என்ற உறவுகளை அறியலாம். சங்கு விளையாட்டுப் பாடலில் பின்வரும் குடும்ப உறவு முறைகளைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணம்.

இது யாரு சங்கு ...........

அம்மா சங்கு

இது யாரு சங்கு ...........

அப்பா சங்கு

இது யாரு சங்கு ...........

அண்ணா சங்கு

இது யாரு சங்கு ...........

அக்கா சங்கு

இது யாரு சங்கு ...........

தம்பி சங்கு

இது யாரு சங்கு ...........

தங்கை சங்கு

இது யாரு சங்கு ...........

பாட்டி சங்கு

இது யாரு சங்கு ...........

பாட்டன் சங்கு.

(யோகேஸ்வரி, வயது - 20, 13ம் கிராமம்)



இவ்வாறாக இந்த உறவுமுறைகளுடன் மாமா, மாமி, மச்சான், மச்சாள், போன்ற உறவு முறைகளும் விரவி வருவதைக் காணலாம்.

விழுமியங்களைப் பயிற்றுவித்தலும் சிறுவர் விளையாட்டுப் பாடல்களினூடாக வெளிப்படுகின்றன. ஒற்றுமை, சகோதரத்துவம், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, போன்ற நல்ல பண்புகள் சிறுவர்களிடையே வளர்க்கப்படுகின்றன. உதாரணம்.

ஒரு கொத்து ஈச்சங் கொட்ட
வறுத்துக் குத்தி
ஒன்பது பேரும் சேர்ந்து குத்தி
கல்லடி மீனாட்சிக்கு கல்யாணமாம் ..........

என்ற பாடலில் "ஒன்பது பேர் சேர்ந்து குத்தி .........." என்ற வரி சிறுவரிடையே ஒற்றுமையை வளர்க்க உதவும் பாடல்களில் ஒன்றாகும். அறிவுரைகளினூடாக செய்திகளை வெளிப்படுத்தும் பாடல்களும் சிறுவர் விளையாட்டுப் பாடல்களில் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. உதாரணம்.

மாமி மாமி பன்னாட
மாமிர ஊட்ட போகாத
தும்பங்காயை தின்னாத
சூத்தடைச்சிச் சாகாத ..........
(ஜனனி, வயது - 10, 15ம்கிராமம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி செய்தல் என்னும் நல்ல மனப்பான்மை இவர்களின் விளையாட்டுப் பாடல்களின் வாயிலாக வெளிப்படுவதைக் காணலாம்.

**பாலியல் சார்ந்த விடயங்கள் :-**

நாவிதன்வெளிப் பிரதேச நாட்டார் பாடல்களினூடாகப் பாலியல் சார்ந்த விடயங்கள் வெளிப்படுவதையும் காணலாம். இவற்றுக்கு முன்னர் பாலியல் உணர்வு என்றால் என்ன? என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். நாட்டார் இலக்கியங்களான நாட்டார் பாடல்கள், நாட்டார் கதைகள், கதைப் பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள், போன்றவற்றில் பாலியல் உணர்வு சாரந்த விடயங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இருந்தாலும் இவற்றைப்பற்றி வெளிப்படையாக பேசுவதையோ, ஆய்வு செய்வதையோ நாகரீகக் குறைவான செயல் எனக் கருதுகின்றனர். இவ் விடயம் தொடர்பாக சமூகவியல், மானிடவியல், பெண்ணியம், எனப்பல துறைகளின் அடிப்படையில் பலரும் பல விளக்கங்களைக் கொடுப்பதன் மூலம் சிக்கல் நிறைந்த மனிதனையும் அவன் வாழ்க்கையையும் மேலான முறையில் புரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகின்றது. (ராஜநாராயணன். கி,1992, முன்னுரை)

உயிரினங்கள் அனைத்தும் பசியுணர்வும் பாலுணர்வும் கொண்டவைதான். மனித சமூகத்தின் தொடக்க காலத்தில் பாலுணர்வு சிக்கலுடையதாக இல்லை. மனித சமூதாயம் வளர்ச்சியடைந்து நாகரீகப் படியில் காலடி வைத்த பின்னர் பாலுறவினை இன்னாரிடையேதான் வைத்துக் கொள்ள வேண்டும். இன்னாரிடையே வைத்துக் கொள்ளக் கூடாது என்ற வரன்முறை தோன்றியது. அதன் பின்னர் பாலுறவும் (Sexual intercourse) பாலுணர்வும் (Sex feeling) சிக்கல் கொண்டதாக மாறியது. (ராஜநாராயணன், கி, 1991, 85)

மனிதனுக்கு நனவுமனம், நனவிலிமனம், என இரண்டு மனங்கள் உள்ளன. சமூக ஒழுங்கமைப்புடன் ஒத்துப் போகாத மனிதனின் இயல்பூக்கங்கள் அவனது நனவிலி மனத்தில் படிந்துள்ளன. மூளையின் பெரும் பகுதியினை இதுவே ஆக்கிரமித்துள்ளது. இந்த விருப்பங்கள் நனவுமனத்தின் மூலம் "நடைமுறைப்படுத்தப்பட இயலாத காலங்களில் நனவிலி மனத்தின் செயற்பாட்டின் மூலம் கனவுகளாக வெளிப்படுகின்றன." என ராஜநாராயணன், 1991,86 இல் குறிப்பிடுகின்றார்.

மனிதன் சமூக ஒழுங்கிற்கு அடங்கி தன் அடிமனத்துப் பாலியல் உணர்வுகளை அடக்கிக் கொண்டாலும் அது அவனையும் மீறி அவனது வார்த்தைகளிலும் செயல்களிலும் ஒழுக ஆரம்பித்து விடுகின்றன. இதனை நாம் பேச்சு, உரையாடல், கதை, நகைச்சுவை, துணுக்குகள், பாடல்கள், பழமொழி, படம் வரைதல், போன்றவற்றில் காணலாம். இன்று இவ்வகைப் பாடல்கள் மிகமிகக் குறைவு எனலாம். பாலுணர்வுச் செய்திகள் குறயீட்டு முறையில் அமைந்திருப்பதையும் காணலாம். இச் செய்திகள் பாடுவோருக்கும் கேட்போருக்கும் வெளிப்படையாக தெரியாது.

அடியே புள்ள ராமாயி
அரிசிக்காரன் வாறன்டி
சின்ன வீட்டில ஒளிஞ்சிக்க
சிலுக்கு சட்டையை போட்டுக்க
சின்னக் கதவெப் மூடிக்கோ ..........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பாடலில் "சிலுக்குச்சட்டையைப் போட்டுக்க சின்னக் கதவமூடிக்கோ ........." என்ற வரி பாலியல் பண்பு கொண்டு விளங்கும் தன்மையைக் காணலாம். இதே போன்று பல பாடல்களில் பாலியல் குறியீட்டுப் பொருள் மறைந்திருப்பதைக் காணலாம். இத்தகைய மனவியல் நுட்பங்களை கொண்ட பாடல்கள் பெரியோர்களிடத்தில் வழக்கில் இருப்பதைக் காணலாம். அவர்கள் இவற்றை சந்தோஷத்திற்காகவும், பொழுதுபோக்கிற்காகவும் பாடுகின்றனர். இருந்தாலும் இவை சமூதாயம் பற்றிய பல செய்திகளை எமக்கு எடுத்துக் கூறுகின்றன.

எனவே தொகுத்து நோக்குமிடத்து நாட்டார் பாடல்கள் உயிர்த்துடிப்புள்ளவை, உண்மையான செய்திகளை எடுத்துரைப்பவை. அந்தவகையில் நாவிதன்வெளி பிரதேச மக்களின் பண்பாடு மற்றும் கலாசார அம்சங்கள் என்பன இப்பாலகளினூடாக வெளிப்படுவதைக் காணலாம்.

**உசாத்துணை நூல்கள்**

1. பக்தவத்சலபாரதி, 1990, பண்பாட்டுமானிடவியல், மணிவாசகர் பதிப்பகம்.
2. றமீஸ் அப்துல்லா, 2001, கிழக்கிலங்கைக் கிராமியம், மல்லிகைப் பந்தல்.
3. முத்துமீரான், எஸ், 1997, கிழக்கிலங்கை முஸ்லிம்களின் நாட்டார் பாடல்கள் மீரா உம்மா நூல் வெளியீட்டகம், நிந்தவூர்.
4. கள ஆய்வில் கிடைத்த பாடல்கள் (50க்கு மேற்பட்டோர்)



**செல்வி சி. பேரின்பராணி**
15/156, நாவிதன் வெளி, 02
கல்முனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவிதன்வெளி பிரதேச மக்களின் இடப்பெயர்விற்கான காரணங்கள் (பொதுவான நோக்கு)

இடப்பெயர்வு என்பது மக்கள் தாங்கள் வாழ்கின்ற இடத்திலிருந்து வேறு ஒரு இடத்திற்கு இடம் பெயர்வதைக் குறிக்கின்றது. சமூகவியலாளர்கள் கிராமத்திலிருந்து நகரத்திற்கு இடம்பெயர்கின்ற செயல்பாங்கினை நான்கு அம்சங்களாக வகைப்படுத்துகின்றனர்.

**01. கிராமத்திலிருந்து கிராமத்திற்கு இடம்பெயர்தல்.**

**02. கிராமத்திலிருந்து நகரத்திற்கு இடம்பெயர்தல்.**

**03. நகரத்திலிருந்து நகரத்திற்கு இடம்பெயர்தல்.**

**04. நகரத்திலிருந்து கிராமத்திற்கு இடம்பெயர்தல்.**

நாவிதன்வெளி பிரதேசமக்களின் இடப்பெயர்வை பின்வருமாறு நான்கு அம்சங்களாக வகைப்படுத்தலாம்.

**01. கிராமத்திலிருந்து அதே பிரதேச வேறு கிராமங்களுக்கு இடம்பெயர்தல் :-**

அதாவது நாவிதன்வெளி பிரதேச எல்லைக்குட்பட்ட ஒரு கிராமத்தில் வாழ்கின்ற மக்கள் தாங்கள் வாழ்கின்ற கிராமத்திலிருந்து நாவிதன்வெளி பிரதேசஎல்லைக்குட்பட்ட வேறு கிராமங்களுக்கு இடம்பெயர்ந்து செல்வதைக் குறிக்கின்றது.

**02.கிராமத்திலிருந்து அயல் பிரதேச கிராமங்களுக்கு இடம்பெயர்தல் :-**

அதாவது நாவிதன்வெளி பிரதேச எல்லைக்குட்பட்ட ஒரு கிராமத்தில் வாழ்கின்ற மக்கள் இந்த மாவட்டத்திலுள்ள அயல் பிரதேச கிராமங்களுக்கு இடம்பெயர்ந்து செல்வதைக் குறிக்கின்றது.

**03. கிராமத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்கு இடம்பெயர்தல் :-**

அதாவது நாவிதன்வெளி பிரதேச எல்லைக்குட்பட்ட ஒரு கிராமத்தில் வாழ்கின்ற மக்கள் வேறு மாவட்டத்திலுள்ள கிராமங்களில் இடம்பெயர்ந்து சென்று குடியேறுவதனைக் குறிக்கின்றது.

**04. கிராமத்திலிருந்து வெளி நாட்டுக்கு இடம்பெயர்தல் :-**

அதாவது நாவிதன்வெளி பிரதேச எல்லைக்குட்பட்ட ஒரு கிராமத்தில் வாழ்கின்ற மக்கள் வெளிநாடுகளுக்கு சென்று குடியேறுவதனைக் குறிக்கின்றது.

இவ்வாறான இடப்பெயர்வானது தற்காலிகமானதாகவோ, நிரந்தரமானதாகவோ அமையலாம். இடப்பெயர்வு ஏற்படுவதற்கு பல்வேறுபட்ட காரணங்கள் உள்ளன அவை ஒவ்வொன்றையும் வரிவாக நோக்குவோமெனில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 01. உள்நாட்டு யுத்தமும் அதனால் ஏற்பட்ட பயமும்



நாவிதன்வெளி பிரதேசத்தில் 1990ம் ஆண்டுமுதல் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தம் காரணமாக மக்களது மனதில் பயமும், பீதியும் நிறைந்து காணப்பட்டது. இதன்காரணமாக இப்பிரதேசத்தில் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வாழ்ந்தனர். இவர்களில் விசேடமாக 4ம் கிராம மக்கள், 6ம் கிராம மக்கள் சொறிக்கல்முனை மக்கள் அதிகம் இடம்பெயர்ந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு இடம்பெயர்ந்தவர்கள் மீண்டும் குடியேறுவதும், மீண்டும் இடம்பெயர்வதும் போன்ற செயற்பாடு பல தடவைகள் ஏற்பட்டதன் காரணமாக மக்கள் மனங்களில் வெறுப்புத்தன்மை ஏற்படவே இடம்பெயர்ந்து தற்காலிகமாக குடியேறிய கிராமங்களில் நிரந்தரமாகவே குடியிருந்து விட்டனர். இவ்வாறு குடியிருப்பவர்கள் அயல் பிரதேச கிராமங்களில் அதிகமாக காணப்படுகின்றனர். உதாரணமாக நற்பிட்டிமுனை, கல்முனை, நீலாவணை, சேனைக்குடியிருப்பு, பாண்டிருப்பு போன்ற கிராமங்களை குறிப்பிடலாம். அதே போல் சொறிக்கல்முனை போன்ற கிராமமக்கள் வெளி மாவட்டமான மட்டக்களப்பிலும் இடம்பெயர்ந்து வாழ்கின்றார்கள்.

## 02. தொழில்வாய்ப்பு

தொழில்வாய்ப்பு என்று சொல்கின்ற போது நாவிதன்வெளிபிரதேசத்தில் அதிகமாக வேளாண்மையும் அதனுடன் சார்ந்த தொழிலிலும் அதிகமாக ஈடுபடுகின்றனர். இதனை விட வேறு தொழில்களில் ஈடுபட வேண்டும் என்ற ஆர்வம் காரணமாகவும் இவ்வாறானவர்கள் தற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ தங்களுக்கு பொருத்தமான இடங்களுக்கு இடம்பெயர்ந்து செல்கின்றனர்.

## 03. சுகாதார வசதிகள் இன்மை

நாவிதன்வெளி பிரதேசமானது அதி கஷ்டபிரதேசமாக காணப்படுகின்றது. எனவே சுகாதார நல வசதிகளை நோக்கும்போது அனைத்து வசதிகளுடன் கூடிய ஒரு வைத்தியசாலை இப்பிரதேசத்தில் இல்லை எனவே உடல் நலம் பாதிக்கப்பட்டவர்களும், சுகாதார வசதிகள் சிறப்பாக காணப்படுகின்ற பகுதியில் வாழ வேண்டும் என நினைப்பவர்களும் அப்பிரதேசத்திலிருந்து தற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ இடம்பெயர்ந்து தங்களது சுகாதாரத் தேவைகளை நிவர்த்தி செய்யக் கூடிய பிரதேசங்களில் குடியேறுகின்றனர்.

## 04. சிறந்த கல்வி வசதி இன்மை.

நாவிதன்வெளி பிரதேச மக்கள் முன்னைய காலங்களைவிட இன்று கல்வித்துறையில் சிறந்து விளங்குகின்றனர். இவர்களது கல்வி முன்னேற்றமானது நகர்ப்பகுதியிலேயே அதிகம் தங்கி இருக்கின்றது. எனவே ஒரு குடும்பத்தின் பிள்ளைகள் தரமான கல்வியினைப் பெற வேண்டும், அவர்கள் சமூகத்தில் உயர்ந்த இடத்திற்கு செல்ல வேண்டும் அரச உத்தியோகத்தினை பெற்றுக் கொள்ள வேண்டும், என்பதற்காக சில குடும்பங்கள் நகர்ப்பகுதிகளில் அல்லது நகரை அண்டிய பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து செல்கின்றார்கள் அவர்கள் நிரந்தரமாகவே நகர வாழ்க்கைக்கு பழக்கப்பட்ட பின்னர் மீண்டும் கிராமத்திற்கு வருவதற்கு தயங்குகின்றனர். இந்த இடப் பெயர்வு தற்காலிகமாகவும், நிரந்தரமாகவும் அமைகின்றமையினை காணமுடிகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 05. சிறந்த போக்குவரத்து இன்மை.

நாவிதன்வெளி பிரதேச மக்கள் 20 கிராம சேவகர் பிரிவுகளில் வாழ்கின்றனர். இங்குள்ள ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவுகளுக்கும் போக்குவரத்து மேற்கொள்ளப்படுவதில்லை. அத்துடன் போக்குவரத்து சேவையானது குறிப்பிட்ட நேர அட்டவணையின் படி மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. இதற்கு காரணம் இக்கிராமங்களை அண்டிய நகர்ப்பிரதேசத்திற்கும் (கல்முனை) இக்கிராமங்களிற்கும் இடையிலான போக்குவரத்து வசதிகள் மற்றும் ஏனைய அடிப்படை வசதிகளில் காணப்படுகின்ற குறைபாடே ஆகும். இதனால் கல்வி தொழில் நடவடிக்கைகளுக்காக நகர்நோக்கிச் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இவர்கள் தினமும் சென்றுவருவதற்கு செலவாகின்ற பணத்தினை காட்டிலும் அந்த பிரதேசங்களில் குடியேறுகின்ற போது போக்குவரத்து செலவு மிகுதியாவதுடன் தமது நோக்கத்தினை திறம்பட உரிய நேரத்திற்கு மேற்கொள்ள முடிகின்றது. எனவே இவ்வாறான அசௌகரீயத்தினை தவிர்க்கும் முகமாக நகர்ப்பகுதிகளில் அல்லது நகரை அண்டிய பகுதிகளில் மக்கள் தங்களது வாழ்க்கையினை சௌகரியமாக கொண்டு நடத்துவதற்கு இடம்பெயர்ந்து செல்கின்றார்கள்.

## 06. கூலி வேறுபாடு

கிராமங்களில், சாதாரணமாக நகரத்தில் கொடுக்கப்படுகின்ற கூலியைவிட குறைவாகவே கூலி கொடுக்கப்படுகின்றது. எனவே கிராமத்தில் இருந்து உழைப்பதைவிட நகர்ப்புறங்களில் அதிகமான கூலியினை பெறலாம் எனும் எண்ணம் மக்கள் மனங்களில் பரவலாக காணப்படுகின்றது. இதனால் இன்று அதிகமான தொழிலாளிகள் கிராமங்களில் இருந்து நகராங்களிற்கு இடம்பெயர்ந்து செல்கின்ற நிலை காணப்படுகின்றது.

## 07. ஆடம்பர வாழ்க்கைக்கு பழக்கப்பட்டமை.

தொழில், கல்வி, சுகாதார, போக்குவரத்து, கூலி வேறுபாடு போன்ற மேற்கூறப்பட்ட காரணங்களுக்காக கிராமங்களிலிருந்து சென்ற மக்கள் மீண்டும் கிராமங்களுக்கு வருகின்ற பொழுது இங்குள்ள வாழ்க்கை திருப்திகரமாக இன்மையால் மிகவும் சிரமப்படுகின்றனர். இதனால் மீண்டும் நகர ஆடம்பர வாழ்க்கைக்காக இடம்பெயர்ந்து செல்கின்றனர். இதில் அதிகமாக நகரங்களில் படித்த இளைஞர், யுவதிகள் தங்களது உறவினர், நண்பர்கள் வீடுகளில் இடம்பெயர்ந்து வாழ்வதுடன் நகரங்களிலே திருமணம் முடித்து நிரந்தரமாகவே நகரங்களில் வாழ்க்கையினை அமைத்துக் கொள்கின்ற நிலையும் காணப்படுகின்றது. அது மட்டுமன்றி 1990ம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தமும், அதனால் ஏற்பட்ட பயமும் காரணமாக அதிகமான மக்கள் இடம்பெயர்ந்து வேறு பிரதேசங்களில் வாழ்ந்து வருகின்றனர். இதனால் அங்கு வாழ்க்கையினை நடத்தியவர்களுக்கு கிராமங்களில் மீண்டும் வந்து தமது பிள்ளைகளின் படிப்பு போன்றவற்றை தொடர்வது சிரமமாகவே காணப்பட்டது. எனவே நகரங்களிலேயே நிரந்தரமாக வாழ்க்கையினை நடத்துகின்றனர்.

## 08. கூடி வாழ்வதற்காக இடம்பெயர்கின்றனர்

நாவிதன்வெளி பிரதேசத்தில் சாதிவேறுபாடு என்பது குறைவாகவே காணப்படுகின்ற போதிலும் ஒரு சில சாதியினர் ஒரு கிராமத்தில் குறைவாக காணப்படுகின்ற போதிலும் தமது சாதிக்காரர்கள் அதிகமாக செறிந்து வாழ்கின்ற இடங்களுக்கு தாங்களும் இடம்பெயர்ந்து சென்று அவர்களுடன் சந்தோஷமாக வாழ்கின்ற நிலையினைக்கான முடிகின்றது. உதாரணமாக 6ம் கிராமத்தில் வாழ்ந்த சலவைத் தொழில் செய்கின்ற குடும்பங்கள் இடம்பெயர்ந்து உறவினர்களுடன், தமது சாதியினர் செறிந்து வாழ்கின்ற பகுதிகளில் வாழ்கின்றமையினைக் காண முடிகின்றது. இதுவும் இடப்பெயர்விற்கான காரணங்களில் ஒன்றாக நோக்க கூடியதாக காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 09. திருமணம் காரணமாக இடப்பெயர்வு

நாவிதன்வெளி கிராமங்களில் இருந்து நகரங்களில் கல்விகற்றவர்கள் நகர வாழ்க்கைக்கு பழக்கப்பட்டவர்களாகவும், நவநாகரிகத்தினை விரும்புபவர்களாகவும் காணப்படுகின்றார்கள் அதே போன்று நகரங்களில் தொழில் வாய்ப்பு பெற்றவர்களும் இதே நிலையினராகவே காணப்படுகின்றனர். சில பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு நகர்ப்புறங்களில் திருமணம் முடித்து கொடுக்க வேண்டும் என விரும்புவதாலும் நகர் நோக்கிய இடப்பெயர்வு ஏற்படுகின்றது.

## 10. வறட்சியும், நீர்ப்பற்றாக்குறையும்

நாவிதன்வெளி பிரதேசமானது மிகவும் வறட்சியினை எதிர்கொண்டு குடிநீர் பற்றாக்குறையினால் பல்வேறு பிரச்சினைகளை சந்திக்கின்றது. அந்த வகையில் சுத்தமான குடிநீர் இன்மை, சுகாதார சீர்கேடுகள், உடல்நலப் பாதிப்பு, பயிர்ச் செய்கை பண்ண முடியாமை, கால்நடைகளுக்கு குடிநீர் இன்மை, மக்களின் அன்றாட பாவனைக்கு நீர் இன்மை போன்றவைகளாகும். இதன் காரணமாக படித்த செல்வந்தர்கள் நகரங்களில் வாழ்க்கை நடத்தக் கூடிய வசதி வாய்ப்புக்கள் உள்ளவர்கள் இவ்வாறு கிராமங்களில் இருந்து இடம்பெயர்ந்து நகரங்களிற்கு செல்கின்றனர். உதாரணமாக சொறிக்கல்முனை கிராமத்திலிருந்து அதிகமான மக்கள் இடம்பெயர்ந்து சென்று மட்டக்களப்பில் வாழ்கின்றமையினை குறிப்பிடலாம்.

## 11. அச்சுறுத்தல் காரணமாக இடப்பெயர்வு

இப்பிரதேச மக்களின் பிரதான தொழில் விவசாயமாகும். எனவே சில குடும்பங்கள் செல்வந்தர்களாகவும், போடிமார்களாகவும் காணப்படுகின்றனர். அவர்கள் இங்கு வசதியாக வாழ்கின்ற போது பல்வேறு வகைகளில் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர்.எனவே சிலர் இப்பிரதேசத்தினை விட்டு வேறு பிரதேசங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றுள்ளனர்.

## 12. வாழ்க்கையில் ஆதரவு அற்று இருப்பவர்கள் இடம்பெயர்வு

தாய், தந்தையரை இழந்த குழந்தைகள் தமக்கு உதவி செய்கின்ற ஆசிரமத்திலோ அல்லது உதவி செய்கின்ற வேறு தூரத்து உறவினர்களிடமோ இடம்பெயரந்து வாழ்கின்றமையை காணமுடிகின்றது. அதே போல் வறுமையினால் வாடுகின்ற குடும்பங்கள், ஆதரவற்ற குடும்பங்கள் தமக்கு ஆதரவு அளிக்கக் கூடிய ஏனைய தூரத்து உறவினர்களின் உதவியுடன் வாழ்வதற்கு இடம்பெயர்கின்ற நிலையும் காணப்படுகின்றது. அதேபோல் வயோதிப நிலையில் அநாதையாக காணப்படுகின்ற முதியவர்கள் போன்றவர்கள் வயோதிப மடங்களிலோ உதவி செய்யக் கூடிய மனம் படைத்தவர்களின் குடும்பங்களுடன் சேர்ந்து தமது இறுதிக் காலத்தினை கழிப்பதும் ஓர் இடப்பெயர்வாகவே காணப்படுகின்றது.

## 13. திருமண முறிவும் இடப்பெயர்வும்.

திருமண முறிவு ஆணுக்கோ அல்லது பெண்ணுக்கோ ஏற்படலாம். இவ்வாறான நிலையில் சமூகத்தில் தான் எப்படி வாழ்வது என்ற எண்ணம் மனதில் எழுகின்ற போது தனது பிள்ளைகளுடனோ அல்லது தனிமனிதனாக இருப்பின் தனியாகவோ இக்கிராமத்தினை விட்டு வேறு தூர கிராமத்தில் சென்று வாழ்க்கையினை நடத்துகின்றமையும் இடப்பெயர்விற்கான காரணங்களில் ஒன்றாக காணப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 14. சமூக கட்டுப்பாடும் இடப்பெயர்வும்

ஒவ்வொரு சமூகத்திற்கும் சமூக கட்டுப்பாடுகள் காணப்படுகின்றன. அதனை ஏற்று நடக்கின்றவர்களும் உள்ளனர். அதனை ஏற்காதவர்களும் உள்ளனர். ஏற்று நடக்காதவர்கள் சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்படுகின்றனர். எனவே அவர்கள் வேறு இடத்திற்கு இடம்பெயர்வது தவிர்க்க முடியாததாக காணப்படுகின்றது. அதேபோல் சமூக கட்டுப்பாடுகளை எதிர்ப்பவர்களும் உள்ளனர். இவர்கள் தாமாகவே தனது சமூகத்தினை விட்டு ஒதுங்கிக் கொண்டு தனக்கு பிடித்த சமூகத்தின் கட்டுப்பாடுகளை பின்பற்றுவதற்கு இடம்பெயர்ந்து செல்கின்றனர்.

## 15. வெள்ளப்பெருக்கும் இடப்பெயர்வும்

நாவிதன்வெளி பிரதேச மக்களின் பிரதான போக்குவரத்து பாதையானது கிட்டங்கி பாலத்தினை ஊடறுத்தே செல்ல வேண்டி உள்ளது. எனவே வெள்ளம் ஏற்படும் காலங்களில் இப்பாலத்தினூடாக போக்குவரத்து செய்வது மிகவும் சிரமமான ஒன்றாகவே காணப்படுகின்றது. எனவே கல்வி, கற்கும் மாணவர்கள் தினமும் போக்குவரத்து மேற்கொண்டு செல்லவேண்டியவர்களாகவும்,மற்றும் தொழிலுக்கு செல்ல வேண்டியவர்களும் வெள்ளம் ஏற்படும் சமயங்களில் தற்காலிகமாக இடம் பெயர்ந்து வேறு இடங்களில் வாழ்கின்ற நிலை காணப்படுகின்றது. அதே போல் வெள்ளத்தினால் ஏற்படும் சிரமங்களை தவிர்க்கும் பொருட்டு மேற்கூறிய சில குடும்பங்கள் நிரந்தரமாகவே இடம்பெயர்ந்து அயல் கிராமங்களில் வாழ்கின்ற நிலையும் காணப்படுகின்றது.

மேற்கூறப்பட்ட பல்வேறு காரணங்களாலும் நாவிதன்வெளி பிரதேச மக்கள் தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ இடம்பெயர்ந்துள்ளனர். 2004ம் ஆண்டு எற்பட்ட சுனாமியின் பின்னர் நாவிதன்வெளியை விட்டு வெளியேறி சென்றவர்களும் கல்முனை போன்ற அயல் பிரதேச மக்களும் நாவிதன்வெளி பிரதேசத்தில் காணிகளை கொள்வனவு செய்வதும், வீடுகளை கட்டி குடியேறுவதும் தற்போது காணக்கூடியதாக இருக்கின்றது. இது எவ்வாறாக இருக்கின்ற போதிலும் இடப் பெயர்வு என்பது மேற்கூறப்பட்ட காரணங்களின் அடிப்படையில் தவிர்க்க முடியாத பல சந்தர்ப்ப சூழ்நிலைகளினால் ஏற்படுகின்றன என்பதை நோக்க முடிகின்றது.

**திரு. கு. குணரெட்ணம்**
நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் திட்டமிடல் பிரிவு
பிரதேச செயலகம்
நாவிதன்வெளி.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரம் பரிய நாட்டு வைத்திய முறைகள்

சித்த ஆயுர்வேத மருத்துவம் பல வைத்திய துறைகளை உள்ளடக்கியுள்ளது. இம் மருத்துவம் ஆதிகாலத்தில் இருந்து முனிவர்களின் அருளினால் பாரம்பரிய நாட்டு வைத்தியமாக மலர்ந்தது. இவ் வைத்தியம் ஏட்டு வடிவில் உருவாக்கப்பட்டு மக்களிடம் பரம்பரையாக அறிமுகம் செய்யப்பட்டு வந்தது. இவ் ஆயுர் வேத மருத்துவம் என்பது தனியே மனித உடலையும் மருந்துகளையும் இணைப்பது மட்டுமல்ல அது ஒரு வாழும் கலையாகும். மனித வாழ்வில் சகல அம்சங்களுடனும் தொடர்புடைய அறிவாகும். இந்த ஆயுர்வேத மருந்துகள் நோயை நீக்குவது மட்டுமல்லாமல் அம்மருந்துகள் உடலின் நன்மைக்கும் உடலை ஊட்டி வளர்ப்பதற்கும் உடல் பாதுகாப்புக்கும் என ஆழ்ந்து நோக்கப்படுகிறது. "உணவே மருந்து மருந்தே உணவு" என்பது ஒரு சாதாரண வாக்கியமல்ல அது பல பொருள் விளக்கங்களை அளிக்க வல்ல தத்துவமாகும். இந்த ஆயுர்வேத வைத்தியத்தில் விஷ வைத்தியம் எமது மக்களின் பாரம்பரிய வைத்தியத்தில் அரியதொன்றாக உள்ளது. எமது பகுதியில் பற்றைகளும், வயல்வெளிகளும், புற்றரைகளும் உள்ளன. இவற்றில் விஷ ஜந்துகள் ஒழிந்திருந்து மனிதர்களை வளர்ப்பு மிருகங்கள், பறவைகள் போன்றவற்றை தாக்கி விஷங்களை பாய்ச்சுகின்றன. இதனால் பல இறப்புகள் நேரிடுகின்றன.

இவ்வுயிர்களை காப்பாற்றுவதற்கு எமது நிலப்பரப்பில் இறைவன் அருளினால் தேவையான அளவு அரிய மூலிகை மருந்துகள் உள்ளன. இவற்றை இனங்கண்டு விஷ மருத்துவத்திற்கு மருந்துகளாக சேர்க்கப்பட்டு விஷம் தீண்டிய உயிர்களை காப்பாற்றுவதில் அரிய செயற்பாடுகளை இம் மூலிகைகள் செய்கின்றன. இதன் நற்செயற்பாடுகள் தெரியாமல் இம்மூலிகைகளை இரசாயன மருந்துகள் மூலம் அழிக்கின்றனர். இதனால் உரிய வேளைக்கு மூலிகைகள் கிடைக்கப் பெறுவதில் சிரமங்கள் ஏற்படுகின்றன. சில மூலிகைகளை கையாளுகின்ற பொழுது சுத்திகரிப்பு முறைகள் நன்கு செய்யப்படாமல் விட்டால் தீவிர நச்சுக் குணங்குறிகள் ஏற்படுவதை நாம் தடுக்க முடியாது. சில மூலிகைகளை சுத்திகரிப்பு செய்யாமலும் பாவிக்கலாம்.

விஷ வைத்தியத்தில் விஷம் பட்டு வருபவரை காலம் நேரம், தூதன் குறி, குணங்குறிகள் சர்ப்பசாஸ்த்திர வகைகள் மூலம் விஷம் அறிந்து தெய்வ அருள் கொண்டு சமூக சேவையாக செய்கின்ற வைத்தியமாகும்.வைத்தியம் செய்கின்ற போது குழையடி, குடிமருந்து, நசியம், துவாலை, கலிங்கம், ஒத்து, பூசுமருந்து அடக்கம் எழுப்பல் போன்ற வைத்தியங்கள் அடங்கும். இது விஷ தேவைகளை அறிந்து உரிய வைத்தியங்கள் செய்து உயிர்களை காப்பாற்றும் வைத்தியமாகும். உரிய நேரத்தில் உரிய வைத்தியங்கள் செய்யப்படாமல் பொடுபோக்காக இருந்தால் உயிர்கள் இறக்கவும் நேரிடும். இதில் சந்தேகம் இல்லை.

விஷம்பட்டு வருபவர்களுக்கு முதலுதவியாக வாழைக்குருத்துச்சாறு அதிலும் இதரை வாழைக் குருத்துச்சாறு ஒரு கிளாஸ் அளவு உள் கொடுத்து விட்டு வைத்தியரிடம் கொண்டு செல்வது சிறந்தது. அத்துடன் கடித்த இடத்தின் மேல் நூலால் கட்டுவது நடந்து வருவது தவிர்க்கப்படல் வேண்டும். பெரும்பாலும் விஷம் பட்டவரை அசையாமல் நீர்படாமல் சாக்கில் தூக்கிக் கொண்டு வைத்தியரிடம் செல்ல வேண்டும்.பாம்பு வகைகளில் 64 வகைப்பாம்புகள் உள்ளன. இதில் எமது பிரதேசத்தில் கூடுதலான விஷ பாம்புகளாக நாகபாம்பு, புடையன், விரியன், வளலை, போன்ற இன விஷப்பாம்புகளும் தேள், பூரான், சிலந்தி, பூச்சி, குளவி, புளு, வண்டு, போன்றனவும் நாய், பூனை, எலி போன்றனவும் கூடுதலாக மக்களைத் தாக்குகின்றன. விஷங்களிலே 18 வகை விஷத்திற்கும் குடி மருந்தாக நீல அவுரி வேர் அரிய மருந்தாக உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்து இருக்க வேண்டிய மருந்து விபரம்

1. பாம்பு விஷத்திற்கு பொதுவாக குடிமருந்தாக வட்டத்துத்தி இலை, நறுந்தாளி இலை, வசம்பு, உள்ளி, துவைத்து சுடுநீர் சேர்த்து வடித்து 1/2 கிளால் அளவு குடிக்க கொடுக்கவும். பின்பு மருந்தை உடல் முழுவதும் துவாலையிடவும்.
2. தேள், பூரான், கடிக்கு கத்தரிக்காயை சுடுசாம்பலில் அவித்து பிசைந்து கொட்டிய இடத்தில் கட்டவும்.
3. சிலந்தி, பூச்சி, குளவி கடிக்கு பழப்புளி சுண்ணாம்பு சேர்த்து பூசவும்.
4. புளு பட்டால் கெந்தகம் அரைத்து பூசவும்.
5. வண்டு கடிக்கு கடிவாயில் வெள்ளைக் காக்கணம் இலை ,மஞ்சள், உப்பு சேர்த்து இடித்து கட்டவும்.
6. நாய், பூனை கடிக்கு கடித்த இடத்தில் கற்றாளை உப்பு சேரத்து அரைத்துக் கட்டவும். நீல அவுரி வேர் அரைத்து கொட்டப்பாக்களவு எடுத்து 1/2கிளாஸ் சூடாக்கிய பசுப்பாலில்


7 நாட்கள் கொடுக்கவும் புளி, இறைச்சி, எண்ணெய் தவிர்க்கவும்.

8. எலிக் கடிக்கு கொவ்வை இலை துவைத்து கடிவாயில் பூசவும் நீல அவுரி வேர் அரைத்து பசுப்பாலில் 7 நாட்கள் குடிக்க கொடுக்கவும்.

மேற்கூறிய விஷங்களுக்கு இலகுவாக முறையான பரிகாரம் செய்து சுகம் காணலாம். அத்துடன் உரிய வைத்தியரிடம் காண்பிபபது நன்மை பயக்கும்.

விஷங்கள் உடலுக்குள் பாய்ந்தவுடன் முறையாக சிகிச்சை செய்ய வேண்டும். இல்லையேல் அது கபத்தைப் பற்றி ஏறும் பல நிறமான மலம் இறங்கும். இதற்கு தகுந்த சிகிச்சை செய்யாவிடின் அது தனது பரி பந்தத்தை உண்டாக்கி ஒரு வருடம் சரீரத்தினுள்ளடங்கி சரீரம் பலமிழக்கும்.

வாயினால் இரத்தம் வருதல், தாகம், தலையிடி, வாந்தி, கண்எரிவு, மயக்கம், ஈனத்தொனி, என்னும் குணங்களை உண்டாக்கும். அதன் பின் மர்மஸ்தானத்தைப் பற்றி ஏறும். இதனால் சிலேஷ்த்தும வாத ரோகங்கள் பிறக்கும், தலைமயிர் உதிரும். மேலும் பல விளைவுகளை உண்டாக்கும். எனவே அற்ப விஷத்துக்கும் மகா விஷ சிகிச்சைகளைச் செய்ய வேண்டும்.




எம். எச். எம். இதரீஸ்
சித்த ஆயுள் வேத விசேட விஷ வைத்தியர்
5/89 மருதபுரம்.
சவளக்கடை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் விரும்பும் இலக்கிய நூல் - சிலப்பதிகாரம்




ஐம்பெருங்காப்பியங்களில் முதன்மையானது சிலப்பதிகாரம். அது முத்தமிழ், மூவேந்தர், முந்நகரம், முத்தெய்வம், மும்மக்கள், மும்நீதி என்றெல்லாம் பல மூன்றுகளைக் கொண்ட சிறப்பிற்குரியது."நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்"என சிறப்பிக்கப்படும். ஒப்பற்ற குடிமக்கள் காப்பியம் இதுவாகும்.

சிலப்பதிகாரம் தமிழிலுள்ள ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்று. காவிரிப்பூம்பட்டினத்தில் பெருங்குடி வணிகர் மரபில் உதித்த கற்பிற் சிறந்த கண்ணகி, அவள் கணவனாகிய கோவலன் என்பவர்களுடைய வரலாற்றைக் கூறுகின்றது. முத்தமிழ்ப் புலமையும் வித்தகக் கவித்திறனும் வாய்ந்த சேர முனிவனாகிய இளங்கோவடிகளால் இயற்றப் பெற்றது.

சிலம்பு + அதிகாரம் = சிலப்பதிகாரம் என்பர் சிலம்பின் செயலை மையமாகக் கொண்ட கதையைக் கூறுவதால் இந்நூல் சிலப்பதிகாரம் எனப்பெயர் பெற்றது என்பர்.

கற்பவர் நெஞ்சினை கவர்ந்திழுக்கும் சொற்சுவை பொருட்சுவை சார்ந்தது. "வண்புகழ் மூவர் தண் பொழில் வரைப்பின்" எனப்படும். தமிழகத்தின் பகுதிகளாகிய சேர, சோழ, பாண்டிய நாடு என்பவற்றின் இயல்புகளையும் எழில் கொஞ்சும் வனப்புகளையும் அந் நாட்டின் சிறப்புக்களையும் முறையே அவற்றின் தலைமைப் பகுதிகளாகிய புகார், மதுரை, வஞ்சி என்பவற்றின் பெருமைகளையும் அந்தக் தலைநகரங்களிலிருந்து செங்கோல் கோணாது நல்லாட்சி புரிந்த சேர, சோழ பாண்டிய மன்னர்களின் அறம், மறம், ஆற்றல், ஆணை, முறைமை என்பவற்றையும் அவர்களால் ஆட்சி செய்யப்பட்ட குடிமக்களின் ஒழுக்கம், ஊக்கம், உலகத்தோடு ஒத்துப்போய் வாழுகின்ற ஒப்புரவாண்மை முதலியவற்றையும் நன்கு புலப்படுகின்றது. அதுமட்டுமல்லாமல் அக்காலத்தைய உழவு, வாணிகங்களின் மேம்பாடு, தொழிறபெருக்கம் மன்பதைகளின் கூட்டுறவியல், அரசியல், கல்விநிலை, சமயநிலை, என்பவற்றை அறிவதற்கு ஒருகருவியாய் துணை நிற்கின்றது.

கண்ணகியின் வரலாற்றுக் கதையை இதயத்தைத் தொடும் வகையில் இளங்கோவடிகள் இயற்றியுள்ளதால் "நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்" எனப் பாரதியார் கூறியிருக்கலாம். இந்நூல் சொல்நயம், பொருள்நயம், வாய்ந்தது. கற்போர் நெஞ்சைக் கவரும் சிறப்பிற்குரியதாய் விளங்குவதால் "நெஞ்சையள்ளும்" நூல் என நாமும் துணிந்து கூறலாம்.

சிலப்பதிகாரம் "நாடகக் காப்பியம் " எனவும் "இயல், இசை, நாடகப் பொருள் தொடர் செய்யுள்" எனவும், "உரையிடையிட்ட பாட்டிடைச் செய்யுள்" எனவும் போற்றப்படுகிறது. தமிழில் தோன்றிய முதற்காப்பியம் இதுவாகும். இந்நூல் புகார் காண்டம், மதுரைகாண்டம், வஞ்சிக் காண்டம், எனும் மூன்று பெரும் பிரிவுகளாக அமைந்துள்ளது. புகார் கண்டத்தில் பத்துக் கதைகளும், மதுரைக் காண்டத்தில் பதின்மூன்று கதைகளும், வஞ்சிக் காண்டத்தில் ஏழு கதைகளுமாக முப்பது கதைகள் இந்நூலில் அமைந்துள்ளன. காண்டத்தின் உட்பிரிவினை காதை என்று கூறுவர். அணிவளங்களும், கூத்தும் பாட்டும் முதலிய இன்ப நுகர்ச்சித் திறன்களை இன்நூல் மக்கள் மனங்களில் தோற்றுவிக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியலின் முறைமை தவறிய வேந்தரை அறக் கடவுள் நின்று கொல்லுமென்பதும் சீரும் சிறப்பும் புகழும் பொருந்திய பத்தினியை வானவரும் ஏத்துவர் என்பதும் இருவினையும், செய்தோனை நாடிவந்து தம்பயனை நுகர்விக்கும் என்பதுமாகிய மூன்று உண்மைகளும் சிலம்பு காரணமாக தோன்றியமையால் அவற்றை முதன்மையான உட்பொருளாகக் கொண்டு இக்காப்பியம் சிலப்பதிகாரம் எனும் பெயரால் இயற்றி நிலை பெற்றது.

இந்நூல் மூன்று அறநெறிகளை உலகுக்கு உணர்த்துகின்றது. அறநெறிகளுக்காகவே இக்காப்பியத்தைப் படைப்பதாக இளங்கோ அடிகள் கூறுகின்றார். அவை.

1. அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாகும்.
2. உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்.
3. ஊழ்வினை ஊருத்து வந்தூட்டும்.


என்பனவாகும். இம் மூன்று அறநெறிகளை வலியுறுத்தும் வகையிலேயே இக்காப்பியம் அமைந்துள்ளது. சிலப்பதிகாரக் காப்பியத்தின் தலைவியாகக் கண்ணகி விளங்குகின்றாள். அவளைக் கற்பின் சின்னமாகவும் தியாகத்தின் இருப்பிடமாகவும் காப்பியம் எடுத்தியம்புகிறது. கோவலன் பெருஞ்செல்வந்தனாகவும் வணிகனாகவும் விளங்கினான். கலையார் வம்மிக்கோனாகவும் காப்பியம் அவனைக் காட்டுகின்றது. ஆடற்கலையின் சிகரமாக தேர்ச்சி பெற்று விளங்கும் மாதவியோ நடனமாடி மயக்கும் ஆடும் மயிலாகவும் இனிய பண்பாடும் மதுரகீதமிசைக்கும் குயிலாகவும் வாழ்ந்தமையைக் காப்பியத்தில் நாம் காணமுடிகின்றது. இத்தகு சிறப்புமிகு காப்பிய மாந்தர்களுக்கு முக்கியத்துவமளித்த இளங்கோவடிகள் அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாகும் என்ற உண்மையை பாண்டிய மன்னனின் உயிர்த்துறப்பின் மூலம் நமக்கும் புலப்படுத்திக் காட்டியுள்ளார். இந்நூல் ஆசிரியப்பா, கலிப்பா,மற்றும் ஆற்றுவரி,ஊசல்வரி, இவற்றைவிட ஊரையிட்ட செய்யுள் போன்ற பாவினங்களை கையாண்டு அமைக்கப்பட்டுள்ளது.புகார்காண்டத்திலே "அறங்கேற்றுக்காதையில் ஆடலாசிரியன், இசையாசிரியன், கவிஞன், குழலாசிரியன், யாழாசிரியன், என்போர் இயல்புகள் அழகாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன. அதுமட்டுமல்லாமல் அரங்கின் அமைப்பு அரங்கில் புகுந்து ஆடுகின்ற இயல்பு என்பனவும் கூறுப்படுகின்ற முறைகளினூடாக இசை, நாடகங்களின் இலக்கணங்கள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இதனைவிட இந்திர விழாவூரெடுத்த காதை, கானல்வரி, வேட்டுவவரி, ஆய்ச்சியர்குரவை, குன்றக்குரவை, எனும் பகுதிகளில் முறையே மருதம், நெய்தல், பாலை, முல்லை, குறிஞ்சி, எனும் திணைக்களுக்குரிய விழா, பாட்டு, கூத்து, என்பனவும் காணப்படுகின்றன. இந்திர விழாவூரெடுத்த காதையிலும், ஊர்காண் காதையிலும், முறையே புகார் மதுரையெனும் நகரங்களின் அமைப்பும் வாணிகப் பெருக்கமும் செல்வச்சிறப்பும் புலனாகின்றன. வஞ்சிக்காண்டத்தில் சேரன் செங்குட்டுவன் வடநாடு சென்று ஆரிய மன்னர்களை வென்று கண்ணகிக்கு சிலை கொண்டுவந்த செய்தி கூறப்படுகின்றது.

மேலும்,"உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்" என்பதற்கு எடுத்துக்காட்டாக சாதாரண குடிமகளான கண்ணகியைத் தெய்வத்தின் நிலைக்கு உயர்த்திக் காட்டுகிறார். இது வரை காலமும் விண்ணிலிருந்தே தெய்வம் மண்ணகம் வந்ததாகவே நூல்கள் கூறும். ஆனால் இளங்கோ அடிகளோ மண்ணிலிருந்து தெய்வம் ஒன்று விண்ணகம் சென்றதாக விளம்புகின்றார். இது இளங்கோ அடிகளார் செய்த காப்பிய புரட்சி என்றே கூறலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஊழ்வினை உருந்து வந்து ஊட்டும்" என்பதைக் கண்ணகி கோவலன் வாழ்க்கை மூலம் புலப்படுத்துகின்றார். சிலம்பு கூறும் இச் செய்திகள் எக்காலத்திற்கும் பொதுவான உண்மைகளாகவும். இவற்றை இன்றும் கூட நாம் வாழ்க்கையில் நிதர்சனமாகக் காணமுடிகின்றது. இக்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள பாத்திரங்கள் அனைத்தும் இளங்கோவடிகளால் சிறப்பாக உருவாக்கப்பட்டுள்ளன. இவ்வாறாக,பல சிறப்புக்களைக் கொண்ட சிலப்பதிகாரம் சங்கமருவிய காலத்திலெழுந்த ஒப்பற்ற காப்பியமாகும். காவிரிப்பூம்பட்டினத்திலே வாழ்ந்த பெருங்குடி வணிகர் மரபிலே தோன்றிய கண்ணகி அவளது கணவன் கோவலன் எனும் குடிமக்கள் கதையை விரித்துக் கூறும் இயல்பினது அதனால் ஒப்புயர்வு அற்ற குடிமக்கள் காப்பியம் எனப் பாராட்டப்படுகிறது. இது சாதாரண குடிமக்கள் கதையைப் பொருளாகக் கொண்டு தமிழர்தம் பண்பாட்டை விளக்கி அமையும் சிறப்பையும் கொண்டது.

தமிழின் முக்கூறுகளான இயல், இசை, நாடகம், என்பவை விரவப் பெற்று விளங்குவதால் முத்தமிழ் காப்பியமென்றும், நாடகவுறுப்புக்கள் பலவும் கொண்டுள்ளதால் நாடக காப்பியமெனவும் உரைப்பாட்டும், இசைப்பாட்டும் இடையிடையே கலந்துள்ளமையினால் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் எனவும் சிறப்பிக்கப்படுகின்றது. இக்காலத்தில் வேறொரு வகையாலும் அறிய முடியாத இசை இலக்கண வகை, நாடக இலக்கணம், நாட்டிய இலக்கணம் முதலியவற்றையும் அக்காலத் தமிழர்தம்பண்பாடு, ஆட்சி, நகரஅமைப்பு, கோவிலமைப்பு, தொழில்வகை முதலியவற்றையும் அறிவதற்கு இது சிறந்த கருவியாய் விளங்குகின்றது. அதுமட்டுமன்றி எவ்வகைப் பொருளைக் கூறினும் அவ்வகைப் பொருளை நேரிற் கண்டார் போன்ற தோற்றத்தை கற்போர் மனதில் உண்டாக்கும் தெள்ளிய இனிய நன்னடையுடையது. மேலும் சிலப்பதிகார நூலானது பல படிப்பினைகளை நமக்கு புகட்டி நிற்கின்றது. இளங்கோவடிகள் இக்காப்பயத்தினை முத்தமிழ் நாடக காப்பியமாகவே உருவாக்கியுள்ளார். என்பதை இதைப் படிப்போர் இலகுவில் புரிந்து கொள்வர். மேற்கண்ட காரணங்களாலே என் சிந்தை கவர்ந்த நூலாகச் சிலப்பதிகாரத்தை கருதுகின்றேன்.



**M.H.M. நௌஸாத்**
சது/சென்றல் கேம்ப் வித்தியாலயம்
நாவிதன்வெளி.
அம்பாறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள் ஒரு பொதுமறை

எந்த ஒரு சமயத்திற்குள்ளேயும் தன்னை உட்படுத்தி கொள்ளாதவர் வள்ளுவர்.எந்த ஒரு இனத்தின் பிரதிநிதியாகவும் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளாதவர் வள்ளுவர்.எனவே மனித குலம் முழுமைக்கும் காலம்,இடம்,சூழல்,என்னும் எல்லைகளைக் கடந்த பொதுத்தன்மை வாய்ந்த உயர்ந்த சிந்தனைகளை வழங்கியவர். கற்க என்று கூறும் பொழுது கற்க வேண்டுவனவற்றைக் கற்க என்று சொல்கின்றாரே தவிர இதைத்தான் கற்க வேண்டும் என்று கூறவில்லை.

உலகிலுள்ள அற நூல்கள் எல்லாம் ஒழுக்கம் பற்றிப் பேசுகின்றன வள்ளுவரும் ஒழுக்கம் பற்றி பேசுகின்றார். உலகம் எதை சிறந்த ஒழுக்கம் என்று ஏற்றுக் கொள்கின்றதோ அதன் வழி செயற்படுவதுதான் சிறந்த ஒழுக்கம் என்று கூறுகின்றார்.அத்தகைய ஒழுக்கம் உடையார், யாராக இருந்தாலும் அவர்களுடைய ஒழுக்கத்தால் அவர்கள் சிறப்படைவர். எனவே ஒருவன் ஒழுக்கத்தை உயிரைவிட மேலானதாக கருதி பேணிப்பாதுகாக்க வேண்டும் என்கின்றார்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும் ( குறள் 131)"

ஒருவன் தன் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து முயற்சித்து வெற்றி பெறாது போயின் தனக்கு கொடுத்து வைத்தது அவ்வளவுதான், நாம் எவ்வளவு முறன்றாலும் வெற்றி கிட்டாது, எல்லாம் விதிப்படிதான் நடைபெறும். என அப்படியே சோம்பி விடுவான். வாழ்க்கையில் பலரும் அவ்வாறுதான், இத்தகையோர்க்கு வள்ளுவர் தொடர்ந்து முயற்சி செய் உழைப்புக்கு தக்க பலன் கிடைக்கும் என்கின்றார். இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வள்ளுவர் வாழ்ந்த காலம் ஊழ் நம்பிக்கை மிகுந்த காலம் எனவே ஊழ் என்று ஓர் அதிகாரத்திற்கு தலைப்புக் கொடுத்துள்ளார், ஊழை விட வலிமை உடையது வேறு ஒன்றும் இல்லை என்கின்றார்.

"ஊழின் பெரும் வலி யா உள மற்று ஒன்று
சூழினும் தான் முந்துறும்"

பிற உயிர்களுக்கு எத்தகைய சூழலிலும் தீங்கு விளை விக்கக் கூடாது என்ற கொள்கை வள்ளுவருக்கு உண்டு. புலால் உண்ணாமை என்ற அதிகாரம் அமைந்ததற்கு அடிப்படை வள்ளுவரின் இத்தகைய உணர்வே என்பர். பிறருக்குக் கெட்டதைத் தருகின்ற தீமையான செயல்களை ஒருவன் மறந்தும் மனத்தளவில் கூட எண்ணக் கூடாது.

"மறந்தும் பிறன் கேடு சூழற்க சூழின்
அறஞ் சூழுஞ் சூழ்ந்தவன் கேடு" (குறள்: 204)

ஒருவனது எண்ணமே அவனது செயலுக்கு காரணமாக அமையும். நல்லதை எண்ணினால் நல்ல செயல்களை செய்வான் தீயவற்றை எண்ணுபவன் தீமையையே செய்வான். எனவே ஒருவன் தன் மறதியில் கூட தீயவற்றை எண்ணக் கூடாது என்று குறிப்பிடுகின்றார். நம் மனம் நடுநிலையானது அறவயப்பட்டது. நன்மை எது, தீயது எது, என்பதை அறியும் ஆற்றல் வாய்ந்த ஒன்று அதற்கு மாறுபட்டு நடக்கின்ற பொழுதுதான் அடிக்கடி மனச்சாட்சியைப் பற்றி குறிப்பிடுகின்றோம். எனவேதான் வள்ளுவர் மறந்தும் பிறருக்கு தீங்கு நினைக்காதே. அவ்வாறு நினைத்தால் அறவயப்பட்ட மனச்சாட்சி உனக்கு தீங்கு கொடுக்கும் என்று எச்சரிக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல" (குறள்: 4)

விருப்பு உடையவன் வேண்டியவர்களுக்கு சலுகை காட்டுவான். வெறுப்பு உடையவன் வேண்டாதவர்களைப் பழிவாங்குவான் அவன் மனிதன். ஆனால் இந்த இரண்டும் இல்லாதவன் இறைவன். எனவே அவனிடம் நம் குறைகளை துன்பங்களை வெளியிட்டால் விருப்பு வெறுப்பு இல்லாமல் நமக்கு நன்மை விளைவிப்பான் என்று இறைமைக்கு விளக்கம் தருகின்றார்.

"அகன் அமர்ந்து ஈதலின் நன்றே முகன் அமர்ந்து
இன் சொலான் ஆகப் பெறின்" (குறள் 92)


ஒருவனைக் கண்ட பொழுதே முக மலர்ந்து இனிய சொற்களைச் சொல்லும் இயல்புடையவனாக இருந்தால் அது மனம் உவந்து ஒரு பொருளை ஈவதை விடச் சிறந்தது என்கின்றார் வள்ளுவர். உள்ளத்தில் உள்ளதுதான் சொற்களாக வெளிவரும் என்பார்கள். பிறர் மீது அன்புடையார் உள்ளமே இனிய சொற்களை உதிர்க்கும் என்கின்றார்

"சமன் செய்து சீர் தூக்கும் கோல் போல் அமைந்து ஒரு பால்
கோடாமை சான்றோர்க்கு அணி (குறள் 118)"

தராசு எடை போடுவதற்கு பயன்படுத்தும் ஒன்று அதற்கு விருப்பு வெறுப்பு கிடையாது.எடை சரியாக இருந்தால் அது தன் கடமையைச் செய்யும். பொருள் பொன்னா, இரும்பா அதைப்பற்றி கவலையில்லை. அதன் எடைதான் முக்கியம். நபர் முக்கியமில்லை. அவரது செயல் அல்லது பண்புதான் முக்கியம் அதன் அடிப்படையில் நீதி வழங்கப்படும். இல் வாழ்க்கையிலும் இத்தகைய நடுநிலைமை என்ற கொள்கை பின்பற்றப்படுமாயின் குடும்பம், மற்றும் குடும்பத்தோடு தொடர்புடைய பிறரும் நன்மையடைவர் என்கின்றார்.

திருக் குறளில் மூழ்கி முத்தெடுத்து எழுதிக் கொண்டே செல்லலாம். திருக்குறளின் பொதுத்தன்மையும் சிறப்புத்தன்மையும் அறிந்த இத்தாலி நாட்டு கிறிஸ்தவ பாதிரியார் யோசப் பெஸ்கி எனும் வீரமா முனிவர் திருக்குறளை முதன் முதலில் 1730 ஆம் ஆண்டு இலத்தீன் மொழியில் மொழி பெயர்த்தார். அதனை தொடர்ந்து பலரும் ஐரோப்பிய மொழிகளிலும், பிற இந்திய மொழிகளிலும் திருக்குறளை மொழி பெயர்த்தனர்.கிறிஸ்த்தவர்களின் விவிலியத்திற்கு அடுத்த நிலையில் உலகில் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்ட நீதி நூல் என்ற பெருமை திருக்குறளுக்கு உண்டு.

**செல்வி. இரா.கமலவாணி**
04/16,மத்தியமுகாம் - 01.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமோடி தென்மோடி கூத்துகளுக்கடையிலான வேறுபாடு

## தென்மோடி:

காதல் சார்ந்த கதை போர் இடம் பெறினும் அது காதலுக்காகவே அமையும்

நாட்டார் கதை, கற்பனைக் கதை என்பன அதிகம் இடம்பெறும்.

சங்கமருவியகால இலக்கியச் சொற்களே அதிகம்

நுணுக்கமானதும் மென்மையானதுமான ஆட்டம்.

வரவு ஆட்டம் நாலுபக்கமும் வட்டக்களரியில் பார்வையாளருக்கு ஏற்ப ஆடப்படும்

ஒவ்வொரு திசைக்கும் தாளம் தீர்க்கப்பட்டு நாலுபக்கத்துக்கும் வரவாட்டம் தொடரும்

கூத்து நடிகர் இடப்புறமாக சுற்றி ஆடுவர்

பாதத்தின் முழுப்பகுதியும் நிலத்தில் படாத ஆட்டம்

ஆட்டத்துக்கு தெய்யத்தாக சந்தத்துமி என்ற தாளம் அடிப்படையானது.

காலமேற்றுதல் தென்மோடிக் கூத்தில் இல்லை.

சபையோரே வரவுப்பாடலைப் பாடி நடிகரை அறிமுகம் செய்வர்



விருத்தங்கள் இழுத்துப் பாடப்படும்

தமிழிசை, உலா, கலித்துறை, போன்ற பாவினங்கள் பயன்படுத்தப்படும்.

தரு தொடங்குமுன் னன்னன்ன.. என்ற சொற்கட்டு பாடப்படும்

கூத்தர் ஒரு பாடலை ஆரம்பிக்க அப்பாட்டின் கடைசிப் பகுதியை

மட்டும் பிற்பாட்டுக்காரர் படிப்பார்.

சபையோர் எனப்படும் பிற்பாட்டுக்காரர் அல்லது அண்ணாவியாரே

நாடகத்தை நகர்த்திச் செல்வார்

கூத்தரின் உடை மணிகள், பூக்கள் பொருந்திய பாரம் குறைந்த உடை (மரவுரி)

நடிகர் பாரம் குறைந்த பூமுடி அணிந்திருப்பார்

பெரும்பாலும் வாள் ஆயுதமாக பயன்படுத்தப்படும்.


திரு. கோ. மகேஸ்வரன்

ஆசிரியர்- ராணமடு

இந்து மகா வித்தியாலயம்


## வடமோடி:

கதை போர் செய்து வெற்றி பெறல் துன்பியல் தன்மை கொண்டது.

மகாபாரத இராமாயணக் கதைகள் அதிகம் இடம்பெறும்.

இலகு நடைச் சொற்கள் தென்மோடியை விட அதிகமாக உள்ளது.

நுணுக்கம் குறைந்த விரைவான அசைவுகள் கொண்ட ஆட்டம் அமைந்திருக்கும்.

வரவு ஆட்டம் ஒரு பக்கம் பார்வையாளரை நோக்கி நேர்முகமாக மட்டும் அமைந்திருக்கும்

ஒருமுறை தாளம் தீர்த்ததும் வரவு ஆட்டம் முடிவடையும்

கூத்து நடிகர் வலப்புறமாக சுற்றி ஆடுவர்

பாதத்தின் முழுப்பகுதியும் நிலத்தில் படும் ஆட்டம்

ஆட்டத்துக்கு தித்தித்தா என்ற தாளம் அடிப்படையானது.

களரியை விட்டுப்போகும் போது துரித ஆட்டம் ஆடப்படும் (காலமேற்றுதல்)

நடிகரே வரவுப்பாடலை பாடி தன்னை அறிமுகம் செய்வார்.

விருத்தங்கள் இழுத்துப் பாடும் முறையில்லை

கந்தார்த்தம் என்ற பாவகையில் பாடுவர். தென்மோடியில் இவ்வாறு இல்லை.



கூத்தர் ஒரு பாடலைப்படிக்க பக்கப்பாட்டுக்காரர் தொடர்ந்து அப்பாடலை

முழுமையாகப்படிப்பார்.

கூத்தரின் உரையாடல் பாங்கான பாடல் (தரு) மூலம் கூத்து நகர்த்தப்படும்.

பாரமான கன்னாடி, சருகை, மணிகள் பதிக்கப்பட்ட கரப்புடுப்பு, வில்லுடுப்பு அணிவர்

நடிகர் பாரம் கூடிய கிரீடம் அணிந்திருப்பர்

வில், அம்பு, தண்டாயுதம், கட்டாரி போன்றன ஆயுதங்களாகப் பயன்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமணத் தடையும் செவ்வாய் தோஷமும்

திருமணம் என்பது சொர்க்கத்தில் மட்டுமல்லாமல் நரகத்திலும் தீர்மானிக்கப்பட்டதென கூறலாம். ஆனால் மரணத்தைப் போல் திருமணமும் ஏற்கனவே மறுக்கொணா உண்மையாகும். ஒத்த அன்பான ஒருவனும் ஒருத்தியும் கூடி வாழும் இல்வாழ்வினைத் தீர்மானிக்கும் ஒரு சம்பிரதாய நிகழ்வு என்று கூடச் சொல்லலாம். உண்மையில் திருமணம் என்பது பிறவிப் பேற்றைத் தரும் சம்பிரதாய ஒன்று கூடல் எனவும் கூறலாம். இதனை இருவேறுபட்ட கருத்துக்களில் நோக்கலாம். ஒன்று திருமண பந்தத்தால் ஒருவனும் ஒருத்தியும் இவ்வுலகில் பிறவி எடுத்ததன் பயனை அனுபவிக்கின்றனர் என்பது, மற்றையது மக்கட் பரப்பின் தோற்றத்திற்கும் காரணமாக அமைந்துள்ளது எனவும் துணியலாம். இவ்வுண்மைக்கு ஆதாரமாகப் பேரறிஞர் திரு.வி.கல்யாண சுந்தர முதலியார் அவர்களும் "திருமணப் பேறு பெறாதவர் பிறவிப் பேற்றை இழந்தவராவார்" என அறுதியிட்டு கூறுகின்றார்.

இம்மைக்கும் மறுமைக்கும் வழிவகுக்கும் திருமணமானது சிலருக்கு உரிய காலத்திலும், மற்றும் சிலருக்கு காலம் கடந்தும், வேறு சிலருக்கு காலம் கடந்தேனும் நடைபெறும், சிலருக்கு நடைபெறாது, தடைப்பட்ட வண்ணம் இருக்கும். இங்ஙனம் திருமண பந்தத்தில் தம்மை இணைத்துக் கொள்ள இயலாது விரக்தியுற்று நிற்கும் ஆண் - பெண் இருபாலாரும் கூறும் சமாதானங்கள் உண்மைக்கு முரண்பட்டதாகவே அமைகின்றன. மனித வாழ்க்கையின் செயற்பாடுகள் மட்டுமல்லாது உலகின் இயக்கத்திற்கு தானும் கிரகங்களே மூல காரணமாக உள்ளன. என்பதை அவர்கள் முற்றாகவே மறந்து விடுகின்றனர். பள்ளிப்படிப்போடு மட்டும் நின்று விடாது பல்கலைக்கழக கல்வியைத் தொடர்ந்ததனால்தான் என் திருமணம் இவ்வளவு காலத்திற்கு பின் தள்ளப்பட்டது என்பர் சிலர், குடும்பத்தில் மூத்த பிள்ளையாகப் பிறந்த காரணத்தால் ஓடியோடி உழைத்து எல்லோரது சுமைகளையும் தாங்கிக் கொள்ளவேண்டி ஏற்பட்டதனால் வந்த வினை, தண்டனைதான் என் திருமணத்தடைக்கு காரணம் என்பர் மற்றொரு சாரார். பிறிதொரு சாரார் அந்தஸ்த்து கௌரவம் என்பவற்றுக்குப் பொருத்தமான களத்திரம் - துணை கிடைக்கும் என இலவு காத்த கிளி போல் இருந்து ஏமாற்றம் அடைந்ததுதான் மிச்சம் என்பர். இக்காரணங்கள் ஏதோ ஒரு வகையில் ஏற்றுக் கொள்ளக் கூடியனவாக இருப்பினும் உண்மையில் அவைதாம் சரியான திட்டவட்டமானவை எனத் துணியவியலாது. ஒருவரின் திருமணம் தடைப்பட்டுச் செல்வதற்கான உண்மைக் காரணத்தை சோதிட ரீதியாக அன்றி வேறு எவற்றாலும் அறிய முடியாது என துணிவாக கூறலாம்.

ஜாதகம் என்பது ஒருவர் பிறந்த நேரத்தில் உதயமாகிய இராசி - லக்கினத்தையும் அதன் அதிபனையும் அவ்வமயம் கிரக மண்டலத்தில் நிலை கொண்டிருந்த ஏனைய கிரகங்கள், நட்சத்திரங்கள், என்பவற்றின் இயல்பையும் எடுத்துக் கூறும் ஓர் அமைப்பு - படம் எனலாம். இதற்கு ஏற்பவே அவரது வாழ்க்கையும் எதிர்காலமும் அமைந்திருக்கும். அதாவது ஒரு ஜென்ம குண்டலி (இராசி) நவாம்சை ஆகியவற்றைக் கொண்டு அவரின் தேகநலம், கல்வி, தொழில், திருமணம், பிற்கால வாழ்வு, ஆயுள் என்பவற்றை ஓரளவு ஊகித்து அறிந்து கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ஜாதகத்தின் பலம் - பெறுமானம் இலக்கினம், இலக்கினாதிபன் ஆகிய இரண்டிலுமே தங்கியுள்ளது. இலக்கினாதிப தன்மையையும் தீர்மானித்து விடலாம். அவர் பகை, கீசம், மறைவு, அஸ்தமனம் ஆகிய பலவீனங்களைப் பெற்றுவிடாது கேந்திர (1-4-7-10) கோணங்களில் (5-9ம் இடங்களில்) பலம் பொருந்தி நிற்பது அவசியம். அப்பொழுதுதான் ஜாதகர் ஒருவருக்குச் சகல சம்பத்துக்களோடு கூடிய பெருவாழ்வும் போக - போக்கியங்களும் வந்தெய்தப் பெறும். மாறாக அவர் முன்சொல்லப்பட்ட பகை முதலிய பலவீனங்களைப் பெற்று வலுவிழந்து நிற்குமிடத்து அந்த ஜாதகத்தின் வாழ்க்கை பெரும் புயலுக்கு இலக்காகி விடும். கல்வி, தெய்வம், புகழ், இல்வாழ்க்கை அனைத்திலும் பலன் பூஜ்ஜியம்தான். திருமணம் தடைப்படுவது மட்டுமல்லாது வாழ்க்கையில் விரக்தியும் அமைதியின்மையும் ஏற்பட்ட வண்ணம் இருக்கும்.

இனி திருமணம் தடைப்படுவதற்கு காரணமான ஏனைய கிரக அமைப்புக்களை நோக்குவோம். ஒரு ஜாதகத்தில் இலக்கினம், இலக்கினாதிபன், இராசி (சந்திர லக்கினம் அல்லது சந்திரன் நின்ற வீடு) நவாம்சம், சுக்கிரன், சூரியன், என்பவற்றுக்கு 7ம் இடத்தைக் கொண்டே ஒருவரின் திருமணம் தீர்மானிக்கப்படுகின்றது. கணவன் அல்லது மனைவிக்குரிய களத்திரத்தானம் என்பதும் இந்த 7ம் வீடேயாம். முன்சொல்லப்பட்ட இலக்கினம் முதலிய ஒவ்வொன்றுக்கும் 7ம் வீட்டில் பாபக்கிரகங்கள் (சூரியன், செவ்வாய், சனி, ராகு, கேது) வீட்டில் பாபக்கிரகங்கள் மட்டுமல்லாது வளர்பிறைச் சந்திரன் வியாழன், வெள்ளி ஆகிய சுபக்கிரகங்களும் தோஷம் செய்வர். 7ம் வீட்டுக் கிரகம் 6 அல்லது, 8ம் இடங்களில் நிற்குமிடத்தும் திருமணம் தடைப்படும். 8ம் வீடும் கவனத்தில் கொள்ள வேண்டிய தொன்றாம். இதில் செவ்வாய் நிற்பது தோஷமாகும்.

திருமணம் தடைப்படுவதற்கு செவ்வாய் கிரகமும் முக்கிய காரணமாக கருதப்படுகின்றது. இவர் 2-4-7-8-12 ஆகிய இடங்களில் (முற்கூறிய இலக்கினம் சந்திரன், சுக்கிரன், ஆகியவற்றுக்கு) நிற்குமிடத்துத் திருமணம் தடைப்படும். இதற்குச் சில விதிவிலக்குகளும் சொல்லப்படுகின்றன. 2ம் இடம் புதன் வீடாக அமையுமிடத்துத் தோஷம் இல்லை. 4ம் இடம் செவ்வாயின் சுய வீடாக (மேடம், விருட்சிகம்) அமையுமிடத்துத் தோஷம் இல்லை. 7ம் இடம் கடகம் அல்லது மகரமாக அமையுமிடத்துத் தோஷம் இல்லை. 8ம் இடம் வியாழனுடைய தனு, மீனம் இராசிகளாக அமையுமிடத்துத் தோஷம் இல்லை. 12ம் இடம் சுக்கிரனுடைய (இடபம், துலாம்) வீடுகளாக அமையுமிடத்துத் தோஷம் செய்யாது என்பர். செவ்வாய், சிங்கம், கும்ப இராசிகளில் நிற்குமிடத்துத் தோஷம் செய்வதில்லை. வியாழன் அல்லது சந்திரனோடு சேர்ந்த செவ்வாய், தோஷம் செய்வதில்லை. மிதுன லக்கின ஜாதகர்களுக்கு 2-8-12ம் வீடுகளில் செவ்வாய் தோஷம் செய்வதில்லை. விருச்சிக லக்கினத்திற்கு 2-8-11ம் வீடுகளில் நின்ற செவ்வாய் தோஷம் செய்வதில்லை. கும்ப லக்கினத்திற்கு 2,8,12ம் வீடுகளில் செவ்வாய் நிற்குமிடத்துத் தோஷம் செய்வதில்லை. கன்னி இலக்கினமாகிய 2,8,12ம் இடங்களில் நின்ற செவ்வாய் தோஷம் செய்வதில்லை.

செவ்வாய் தோஷத்திற்கு இங்கு கூறப்பட்ட விதிவிலக்குகள் அனுபவத்திற்குப் பொருந்துவதாக இல்லை. திருமதி இந்திரா காந்தியின் ஜாதகத்தில் 2ல் - சிங்கராசியில், சந்திரனுக்கு 8ல் செவ்வாய் சிங்கராசியில், நின்ற செவ்வாய், அவரது கணவரைக் காப்பாற்றவில்லையே இயல்பாகவே செவ்வாய் 7 அல்லது 8 நிற்குமிடத்து மரணம் அல்லது பிரிவையும் 4ல் மகிழ்ச்சிக் குறைவையும் ஏற்படுத்துவர். சுக்கிரனோடு சேர்ந்த செவ்வாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்பலன்களைத் தர ஏதுவில்லை என்கிறார் ஜெய்மினி முனிவர். செவ்வாய் தோஷமுள்ள ஒருவர் அதே தோஷமுள்ள மற்றொருவரை மணந்து கொள்வதால் தோஷம் சமநிலை அடையுமே தவிர நிவர்த்தியடையாது என அவர் மேலும் கூறுகின்றார்.

நாம் இங்கு சில ஜாதகங்களை நோக்குமிடத்து செவ்வாய் தோஷத்திற்கு சொல்லப்பட்ட விதிவிலக்குகள் எத்துணைப் பொருத்தமற்றவை என்பது தெரிய வரும்.

| | | | |
|---|---|---|---|
| சந் | 6 | சனி | 8 |
| கேது | இராசி | | குரு |
| 3 | | | ராகு |
| 2 | ல | சூரி.சுக் | செவ்.புத |

இது ஒரு பெண் டாக்டரின் ஜாதகமாம். இதில் சந்திரனுக்கு (இராசி) 7ல் செவ்வாய், புதன் இலக்கினத்திற்கு 7ல் சனி கணவரோடு 12 வருடங்களைக் கடத்தி விட்டு வெள்ளி திசை இறுதியில் விவாகரத்து வாங்கிக் கொண்டார். பாருங்கள் செவ்வாய் புதன் வீட்டில் புதனோடு சேர்ந்திருந்தும் பயனில்லாது போயிற்று செவ்வாய் தோஷத்திற்கு சொல்லப்பட்ட விதிவிலக்கு எங்கே? ஆனால் இலக்கினத்திற்கு 7ல் சனி 7னுடைய சுக்கிரன் 12ல் மறைவு. இதனால் அந்த ஜாதாகத்திற்கு மறுமணம் என்ற பேச்சுக்கே இடமில்லை. துறவு நிலைதான்!

| | | | |
|---|---|---|---|
| கேது | 4 | 5 | சந் |
| 2 | இராசி | | 7 |
| ல | | | செவ் |
| 12 | 11 | சூரி.புத | குரு சுக் சனி ராகு |

இந்த ஜாதகத்தில் ஓர் அரச உயர் அதிகாரி உடையதாம் இவர் ஜாதகத்தில் 8ல் செவ்வாய் சுக்கிரனுக்கு 12ல் சூரியனுக்கு 12ல் சுக்கிரன் முதலியோர் 1949ல் விவாகம் செய்த இவர் 1950ல் மனைவியை இழந்து விட்டார். சிங்க ராசியில் நின்ற செவ்வாய் தோஷம் செய்வதில்லை என்ற விதிவிலக்கு இங்கு விலகி நிற்பதை வாசகர்கள் கவனத்தில் கொள்வார்களாக.

| | | | |
|---|---|---|---|
| கேது | 4 | 5 | சந் |
| 2 | இராசி | | 7 |
| ல | | | செவ் |
| 12 | 11 | சூரி.புத | குரு சுக் சனி ராகு |

இந்த ஜாதகி தனியார் நிறுவனம் ஒன்றில் உயர் பதவி வகிப்பவர். இவர் ஜாதகத்தில் இலக்கினத்திற்கு 4ல் சந்திரனுக்கு 2ல் செவ்வாய் வியாழனுடைய வீட்டில் நிற்பதைக் காணலாம். செவ்வாய் 3 - 8க்குடையவராகிக் களத்திர (கணவன்) காரகனாகிய (காரணமாக இருப்பவர்) சுக்கிரனுடன் சம்பந்தம் பெற்றுள்ளார். செவ்வாய் - சுக்கிரன் இருவரும் பாபக்கிரகங்களுக்கு இடையில் பாப கர்த்தாரி யோகம் பெற்றுள்ளதையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த உத்தம ஜாதகி கேது மகாதிசை சூரிய புத்தியில் விவாகம் செய்து கொண்டார். கேது திசை, சனி புத்தியில் இவரது தவறான செய்கையால் கணவர் தீராத மன நோய்க்கு ஆளாகி விட்டார். செவ்வாய், சனி இருவரும் கணவருக்கு நோய்க்கு ஆளாகி விட்டார். செவ்வாய், சனி இருவரும் கணவருக்கு உரிய 7ம் இடத்தை நோக்குவதால் இழப்பிற்கு இடம் இல்லை எனத் துணியலாம். இங்கனம் நூற்றுக் கணக்கான ஜாதக நகல்களை உதாரணமாகக் காட்டலாம். விரிவஞ்சி அவற்றை விடுத்து இக்கட்டுரையை நிறைவு செய்யலாம் என நினைக்கிறேன்.

பெண்களைப் பொறுத்தவரையில் ஜனன ஜாதகத்தை விடவும் சரியான - திட்டவட்டமான நேரத்தைக் கொண்டு கணிக்கப்பட்ட ருது ஜாதகமே பிரதானமானதாகக் கருதப்படுகின்றது. இது மிகச் சிரமமானதொன்றாம். எவ்வாறாயினும் செவ்வாய் தோஷத்திற்கு இங்கு கூறப்பட்டுள்ள விதிவிலக்குகளால் பயனில்லை என்பது தெளிவாகின்றது. தோஷம் தோஸம்தான் ஆகையால் சோதிடக் கிரகங்கள் கூறும் கிரக தோஷ நிவர்த்தி கருமங்களை அந்த ஜாதகர்கள் பக்தி சிரத்தையுடன் கிரமமாகச் செய்து வரத் தோஷம் - குற்றம் சமநிலை பெறலாம். பொதுவாகச் செவ்வாய் தோஷத்திற்கு பவள சுப்ரமணியர் வழிபாடு, வைரவர், பத்திரகாளி அம்மாள் ஆகியோரைப் பூசித்தல், சிவந்த வஸ்திரம் தரித்தல், பவள ரத்தினம் அணிதல், எருது தானங்கொடுத்தல் என்பன நிவர்த்தி தரும் மார்க்கமாகும்.

**குறிப்பு :- இக்கட்டுரையை வாசகர்கள் இலகுவாக விளங்கிக் கொள்ள வேண்டி இயன்றவரை சோதிடப் பதங்களைத் தவிர்த்துள்ளேன்.**

**வி. எஸ். வேலாயுதம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசாரமும் குழந்தைகளும்



இன்றைய மக்களும் அவர்களின் செயல்களுமே பிற்கால உலகத்தையும் அதன் நடத்தையையும், வாழ்க்கை வரலாற்றையும் அமைத்துக் கொடுக்கின்றன. இன்றைய காலத்தில் இருக்கின்ற பெற்றோரும் மக்களும் வருங்காலத்தில் இருக்கப்போவதில்லை. ஆனால் இன்றைய குழந்தைகள் வருங்காலத்திற்குரிய மக்களாக இருப்பார்கள். எனவே வருங்காலத்திற் குரியவர்கள்நாங்கள் அல்ல எமது குழந்தைகளே என்பது நன்றாக புலனாகின்றது.

எதிர்கால உலகம் எவ்வாறு உருவாக வேண்டும் என நினைக்கின்றோமோ (நல்லதாகவோ/கெட்டதாகவோ) அவை குழந்தைகளிடத்தில் பிரயோகிக்கப்படுகின்றபோது நிறைவேற்றப்படுகின்ற சந்தர்ப்பங்களையே வரலாறு எமக்கு கற்றுத் தருகின்றது. இன்றைய குழந்தைகளில் எவை விதைக்கப்படுகின்றனவோ அவைதான் வருங்கால விளைவுகளாக அமைந்து விடுகின்றன. வருங்காலம் வளரும் தலைமுறையினரால்தான் தீர்மானிக்கப்படுகின்றது. இன்றய கால குழந்தைகளுக்கு அல்லது சிறுவர்களுக்கு நல்ல சிந்தனைகள், நல்ல அறிவு, நல்ல மனப்பான்மை, காருண்யம், அன்பு, கீழ்ப்படிவு, நல்வழிகாட்டும் தன்மை, நேர்மை போன்ற விதைகள் விதைக்கப்பட வேண்டும். இந்த விதைகள் நல்ல ஒழுக்க முறையை சிறுவர்களிடத்திலேயே சிறந்த முறையில் முளைத்து எதிர்கால சமூகம் எனும் விளைச்சல் ஏற்படும்.நல்லொழுக்கமுடைய சிறுவர்களை எவ்வாறு உருவாக்கலாம் என்பதுதான் இன்றய எமது சவாலாகும். இச்சவாலை நாங்கள் எவ்வாறு எதிர்கொள்கின்றோம் எனபதுதான் மிக முக்கியமானதாகும். எமது வருங்கால செல்வங்களான சிறுவர்கள் பெற்றோர்களையும் தன்னைச் சுற்றியுள்ள ஏனைய மக்களின் நடத்தைக் கோலங்களையும் கவனித்து அவர்களைப் போலவே தாங்களும் நடந்து கொள்கின்றார்கள்.

நல்ல நடத்தைகளே ஒழுக்கமாகும். குழந்தைகளுக்கு நல்ல நடத்தைகளை போதிப்பதற்குரிய சிறந்த வழி பெற்றோர்களாகிய நாமும் நமது சமூகமும் நல்வழியில் நடக்க வேண்டும். நடைமுறையில் நல்லொழுக்கம் முன்மாதிரியாக அமைய வேண்டும். நாம் நல் வழியில் நடப்பதற்கு எம்மை தைரியப்படுத்திக் கொள்வதோடு சக்தியுள்ள வீரர்களாகவும் வாழ வேண்டும். நேர்மை என்னும் ஆயுதமும் உழைப்பு என்னும் நோக்கமும் நீதி என்னும் கவசமும் இவ்வீரர்களாகிய எமக்கு இருக்க வேண்டும். சக்தியற்ற அறிவாளிகளும், மூடர்களும் சமுதாயத்திற்கு பிரயோசனம் அற்றவர்கள். மனிதத்தன்மையையும் நேர்மையையும் ஆயுதங்களாக தரித்த வீரமுள்ள அறிவாளிகளாக நாம் நடந்து காட்ட வேண்டும். அப்போது நிச்சயமாக எமது சிறுவர்களும் அதை பின் தொடர்வார்கள். பறவைகளையும், மிருகங்களையும் உற்று கவனித்துப் பார்ப்போமானால் எவ்வளவு நேர்த்தியாக தமது குஞ்சுகளுக்கும், குட்டிகளுக்கும் பயிற்சியளிக்கின்றன. வருங்காலத்தை எதிர்கொள்வதற்காக தன்னம்பிக்கையை ஊட்டுகின்றன. ஆனால் மனித சமூகமோ தமது அறிவாற்றலை இயற்கையை அழிப்பதற்காகவும், எதிர்காலத்தை சீரழிப்பதற்காகவும்பிரயோகித்து விட்டு தமது இனத்துக்குள்ளேயே சிலரை மிருகங்கள் என வசைபாடுகின்றாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையின் சமநிலை, கலாசாரம், பண்பாடு, நல்லொழுக்கம், மனுஷிகம் என்பன சீரற்று போவதற்கு மனிதன் மாத்திரமே காரணமாகின்றான்.இன்றைய மனித சமுதாயத்தின் சீரழிவுக்கு மிக முக்கிய காரணம் சுயலாபமும் பேராசையும், பண மோகமும் தெளிவற்ற ஆத்மீக நடத்தையுமே ஆகும். "பணம் பாதாளம் வரைக்கும் பாயும்" என்று சொல்வார்கள். பாதாளம் என்றால் "நரகம்" என்று ஆகமங்கள் கூறுகின்றன. "பணமோகம் கொண்டு அலைபவர்கள் என்னுடைய இராஜ்ஜியத்துக்குள் பிரவேசிப்பது கடினமானது" என்று வேதங்களினூடாக இறைவன் தெளிவுபடுத்துகின்றான். எனவே எமது சிறார்களை பாதாளம் நோக்கித் தள்ளுவதை நிறுத்துவதற்கான முன்மாதிரி எம்மிடத்தில் இருக்க வேண்டும்.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அது நல்லவராவதும் கெட்டவராவதும் அன்னை வளர்ப்பினிலே" என்று ஒரு கவிஞர் அழகாக கூறுவதைக் கேட்டிருக்கின்றோம். இது முற்றிலும் உண்மையானது நாட்டின் சரித்திரத்தையே மாற்றி அமைத்த மகாத்மா காந்தி, தாகூர், ஐன்ஸ்டின், சிவாஜி, ஆபிரகாம்லிங்கள், போன்ற மகா புருஷர்கள் எல்லாம் தமது சுயசரிதைகளில் தாம் செய்த நற்செயல்களுக்கெல்லாம் தங்களது தாய்மார்களின் நடத்தைகளும் அறிவுரைகளுமே காரணம் என கூறியிருக்கின்றார்கள். அன்பு, இரக்கம், பரிவு, பாசம், அரவணைப்பு, மிருதுவான தன்மை இவற்றின் முழு உருவம் தாயாவாள். இவளே சிறார்களின் நல்லொழுக்கத்திற்கும், அறக் கருத்துக்களை போதித்து அவர்களுடாக சிறந்த எதிர்கால கலாசாரத்தை உருவாக்குவதற்கும் பெரும்பங்காற்றுகின்றாள்.

இன்றைய காலம் மிகவும் மோசமாக இருப்பதை நாம் பார்க்கின்றோம். இனம், மொழி, சாதி, சமயம், பணக்காரன், பிச்சைக்காரன், போன்ற முரண்பாடுகளும் ஏற்றத்தாழ்வுகளும் சிறார்களை எவ்வாறு வருங்கால நல்லொழுக்க சமுதாயத்திற்கு வழிநடத்தப் போகின்றது? நிச்சயமாக நாங்கள் மாற வேண்டும். குறிப்பாக தாய்மார்கள் மாற வேண்டும். தலைவர்கள் மாறவேண்டும். இவர்களின் மனங்களில் இருக்கின்ற தேவையற்ற எண்ணங்கள் நீக்கப்பட்டு நல்வழிப்படுத்துகின்ற கலாசார நிகழ்வுகளும் அறிவுரைகளும் வழங்கப்பட வேண்டும்.நாம் மாறுகின்ற போது எமது சிறார்களும் நிச்சயம் மாறுவார்கள். நாம் எமது சிறார்களுக்கு உண்மையான அன்பு, நலலொழுக்கங்கள், உண்மையான இறைபக்தி, காருண்யம், நற்கடமைகள் போன்றவற்றை எமது நடத்தைகளுடாக வழங்கினால் அவை வருங்கால சமூகத்திற்கு அவர்களால் நடாத்திக் காட்டப்படும் என்பதே உண்மை. இதனூடாகவே ஒரு சமுதாயத்தில் சிறந்த ஆரோக்கியமான கலாசாரத்தை உருவாக்க முடியும்.



**திரு. மா. இராமக்குட்டி**
நிருவாக உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்
நாவிதன்வெளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை மாணவர்களது கையெழுத்துப் பிரதிகளில் இருந்து பெறப்பட்ட ஆக்கங்கள்.



# கல்வியின் சிறப்பு




இந்த உலகில் இருவகை செல்வங்கள் உள்ளன ஒன்று கல்விச் செல்வம் மற்றையது பொருட்செல்வம். பொருட்செல்வம் பிறருக்கு கொடுக்கும் போது குறைவுபடும். நீராலும் நெருப்பாலும் அழியக் கூடியது பிறரால் கவரக்கூடியது. ஆனால் கல்விச் செல்வம் அழிவற்றது. நீராலோ, நெருப்பாலோ, அழியாதது. கள்வரால் களவாட முடியாதது. பிறருக்கு கொடுக்கும் போது பெருகிக் கொண்டே செல்லும் இதனால்தான் கல்விச் செல்வத்துக்கு நிகரான செல்வம் வேறில்லை என்று நம் முன்னோர் போற்றி உள்ளனர்.மனிதனிடத்திலுள்ள அறியாமையை போக்கி அறிவு ஒளி ஊட்டுவது கல்வி கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்புண்டு கற்றறிந்தவனே கண்ணுடையவனெனக் கருதப்படுவான்.

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்என்று நம் முன்னோர் கூறியுள்ளனர். மனிதராக பிறந்த ஒவ்வொருவரும் கற்க வேண்டியவற்றைக் கற்று கற்றறிந்த படி ஒழுக வேண்டும் இதனையே திருவள்ளுவரும்

"கற்க கசடறக் கற்பவை கற்ற பின்
நிற்க அதற்கு தக"

கற்க வேண்டியவற்றை நாம் கருத்தூன்றிக் கற்க வேண்டும். இளமையில் கற்பதே நல்ல செயலாகும். இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்னும் முதுமொழியை நாம் மறக்கக் கூடாது. எல்லாவித அழகுகளிலும் ஒருவனுக்கு கல்வியின் அழகே சிறந்த அழகாகும்.




த. சிந்துஜன்
சது / அன்னமலை நாவிதன்வெளி
மகாவித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளமையிற் கல்வி



"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பது முதுமொழி நாம் கற்க வேண்டியவற்றை இளமைப்பருவத்திலேயே இந்த உண்மையை சகலரும் ஏற்றுக் கொள்வர். இளமைப் பருவம் கவலையற்ற பருவம் இப்பருவத்திலேயே கற்க வேண்டும். நாம் பெற்றுக் கொள்ளும் அறிவும் திறனும் அனுபவமும் நமது எதிர்கால வாழ்வுக்கு அடிக்கற்களாக அமைய உள்ளன. எனவேதான் பெரியோர்கள் இளமையிற் கல்வி என வலியுறுத்துகின்றனர். இளமை பருவத்தில் நாம் பெறும் கல்வி கல்லிற் பொறித்த எழுத்துப் போல இருக்கும். என்றும் அழியாது.

முதுமையிற் பெறும் கல்வியே நிலைத்து நிற்கும். இல்லையேல் பிற்காலத்தில் கற்பது கடினம். இதனையே "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?" என்ற பழமொழியும் நமக்கு அறிவூட்டுகின்றது. நாம் இளமைப் பருவத்திலேயே கல்வி அறிவை தேடிக் கொள்ள வேண்டும். என்பதற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. முக்கியமாக இளமைப்பருவமே கற்கும் கல்வியை மனதில் பதித்துக் கொள்வதற்கு ஏற்ற பருவம் என்று உளவியல் அறிஞர்கள் உரைக்கின்றனர்.

இப் பருவத்தில் மாணவர்களுக்குத் தொல்லை மிக்க உலகநடைச் சூழலில் நேரும் துன்பங்கள் துயரங்கள் தோன்றா, எல்லையற்ற ஆர்வம் தலைதூக்கி நிற்கும் காலம். இக் காலத்தை நல்ல முறையில் மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இக்கருத்துக்களை நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் பசுமரத்தாணிபோல் நம்மனதிற் பதியும் வண்ணம் அழகிய பாடலாகத் தந்துள்ளார்.

"கல்வி பெறும் மாணவனாய் பருவம் கண்டீர்
கவலையற்ற களி சிறந்த காலமாகும்
தொல்லை மிக்க உலக நடைச் சூழலில் நேரும்
துன்பங்கள் துயரங்கள் தோன்றாக்காலம்
எல்லையற்ற ஆர்வமுள்ள இக்காலந்தான்
எக்கலையும் பயில்வதற்கும் ஏற்ற காலம்
நல் வழியில் பயன்படுத்தும் மாணவர்க்கே
நாமகளின் திருவருளின் நலங்கள் கூடும்"

இளமையில் பெறும் கல்வி நம் உள்ளத்தைப் பண்படுத்த வல்லது. நல்லது எது? கெட்டது எது? என்பதை அறிந்து கொள்ள உதவுகின்றது. நமது வருங்கால வாழ்வினை வளம் நிறைந்ததாக அமைத்துக் கொள்ளப் பயன்படுகிறது.

**பே.கதிர்சன்**
சது / அன்னமலை நாவிதன்வெளி
மகாவித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனை உருவாக்குவதில் விளையாட்டின் பங்கு



இன்றுள்ள கல்வித் திட்டத்தில் விளையாட்டுக்கள் தனிச் சிறப்புடைய ஓரங்கமாக விளங்குகின்றன. ஏட்டுக்கல்வி, செயன்முறைக் கல்வி என்பவற்றுக்கு எத்துணை சிறப்புண்டோ, அத்துணைச் சிறப்பு விளையாட்டுக்களுக்கும் உண்டு என கல்வித்திட்டம் வலியுறுத்துகின்றது. அன்றியும் கல்விச்சாலைகளில் மாணவர்கள் மனதை கவர்ந்துள்ள துறையும் அதுவேயாகும். ஓடி விளையாடுவதில் நாட்டம் கொள்ளாத குழந்தைகளிடம் சில குறைபாடுகள் உள்ளன என்பது உளவியல் நூல் வல்லுனர்கள் கண்ட முடிவாகும். கல்விச் சாலைகளிலே விளையாட்டு நேரமே மற்றெல்லா நேரங்களையும் விட மனமகிழ்ச்சியும் சுறுசுறுப்பும் வாய்ந்ததோர் இன்பப் பொழுதாகக் அமைகிறது. விளையாட்டெனக் கூறும் போது அதற்குரிய சில சிறப்புப் பண்புகளை நாம் அவதானித்தல் வேண்டும். மனமலர்ச்சியோடு இலகுவாகச் செய்யப்படுவது மாத்திரமன்றி அது உடலுறுப்புக்களுக்கு ஊக்கமளிப்பதாகவும் அமைதல் வேண்டும். குழுமுறையிலோ அல்லது தனியாள் முறையிலோ போட்டியுணர்வு நிலவுதல் வேண்டும். இவ்வாறு நன்மைகள் நிறைந்து விதிகளினாலே நெறிமுறையாக அமைக்கப்பட்ட விளையாட்டுக்கள் எல்லா நாடுகளிலும் காணப்படுகின்றன. கிளித்தட்டு மறித்தல், கெந்தியடித்தல், கிட்டியடித்தல், சடுகுடு முதலிய சுதேச விளையாட்டுக்கள் நம் நாட்டில் பெருமையுடன் விளையாடப்படுகின்றன. கிரிக்கெட், உதைப்பந்தாட்டம், மென்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், என்பன மேலைத்தேய விளையாட்டுக்கள் மக்கள் மனதை கவர்ந்துள்ளன.

விளையாட்டுப் போட்டிகளில் ஒரு குழுஎதிர் குழுவை எதிர்ப்பதில் காட்டும் வேகமும், திறமையும், கணிக்கப்படுகின்றது. போட்டியிடும் போது ஒவ்வொரு குழுவுக்கும் வெற்றியே குறிக்கோள் அக்குறிக்கோளை அடைவதற்கு தப்புவழிகளை பின்பற்றுதல், மாற்றுக் குழுவினரை வெறுத்து பொறாமைப்பட்டு கோபங் கொள்ளுதலும் இழுக்காகும். குறிக்கோளின் சிறப்பு குறிக்கோளை அடையும் வழிகளின் சிறப்பிலேயே பெரிதும் தங்கியிருக்கின்றன. என்ற மேற்கோள் விளையாட்டுக்களுக்கும் பொருந்தும். வெற்றியே விளையாட்டின் குறிக்கோளாயினும் அது நேர்மையான வழியில் பெறப்பட வேண்டும்.

இவை மாத்திரமன்றி உடற்பயன்கள்,உளப் பயன்கள் என்பனவும் விளையாட்டுக்களால் விளைகின்றன. தன் திறமை வெளிப்பட வேண்டும். தான் பலரால் புகழப்பட வேண்டும். என்ற எண்ணம் ஒவ்வொரு மனிதனுக்கும் தோன்றுவது இயல்பே. தமது குழுவின் உயர்வுக்காக ஒவ்வொருவனும் தனது கொள்கைகள் எண்ணப்பாங்குகள் ஆகியவற்றைக் கூடத் தியாகம் செய்ய வேண்டி ஏற்படுகின்றது. இப்பண்பே வாழ்க்கையில் அவனை மேன்மை அடைய வழியமைக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றியைக் கண்டு மனம் மிகக்களித்து ஆரவாரித்தலும் தோல்வியைக் கண்டு துக்கத்தால் சோம்புதலும் மனத்தின் வேறுபட்ட தன்மையை காட்டும். வெற்றியையும் தோல்வியையும் சமனாக மதித்து இரண்டிலுஞ் சிரித்து மகிழ்பவனே உண்மையான வீரன். இவ்வித பண்பே வாழ்க்கையில் சகிப்புத் தன்மையுடன் வாழ வழிவகுக்கின்றது. எனவே உள்ளத்தை திருத்தி நற்பண்புகளை விதைத்து வளர்க்கும் நல்லொருவனாகவும் விளையாட்டுப் போட்டிகள் விளங்குகின்றன. விளையாட்டுக்கள் சமுதாயத்திலே பிரிக்க முடியாத ஓர் அங்கமாக அமைந்திருக்கின்றன. அது மனிதப் பண்புகளையும் சமுதாயப் பண்புகளையும் வளர்ப்பதோடு உறுதி பெற்ற உடலையும் தந்து ஒவ்வொருவரையும் முழு மனிதனாக்குகிறது. வளமான சீரிய வாழ்வுக்கு வேண்டிய நற்பண்புகளையும் தோற்றுவித்து பண்படுத்தும் நல்லதோர் ஆசானாகவும் அது விளங்குகிறது.

**சு.குகப்பிரியா**
சது / வேப்பையடி
கலைமகள் மகாவித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி பெற்ற தேசத்தை சிறுவர்களுக்காக கட்டியெழுப்புவோம்

வியத்தகு விஞ்ஞானம் விண்வெளியிலும் தனது ஆதிக்கத்தை செலுத்தியுள்ள இந்நூற்றாண்டு உலகத்தையே சுருக்கி வீட்டிற்குள் கொண்டு வந்து விட்டது என்றால் அது மிகையாகாது. தொழில்நுட்பமானது வீதி விளக்கிலிருந்து விண்வெளி வரை பரந்து விரிந்து நிற்கின்றது. தொழிநுட்ப வளர்ச்சிக்கேற்ப காலமும் மாறிக்கொண்டு செல்கின்றது. இக்கால ஓட்டத்திற்கு ஏற்ப மனித தேவைகளும் விருப்பங்களும் படிப்படியாக வளர்ந்து வருகின்றன. அது போல் அவற்றை நிறைவு செய்வதற்கான வழிகளும் விரைந்தே முன்னேறுகின்றன. இவ்வாறு சாதனை மேல் சாதனை படைத்து வரும் உலகம், வெற்றிகளை மாத்திரமன்றி தோல்விகளையும் சந்திக்கின்றது. மகிழ்ச்சிகளை மட்டுமன்றி கவலைகளையும் சுமக்கின்றன. கட்டுப்படுத்த முடியாத பல பிரச்சினைகள் தலைவிரித்தாடுகின்றன. இதில் முக்கியமானதொன்றுதான் பாதாளம் நோக்கிச் செல்லும் “சிறுவர் சமுதாயம்” “இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள்” நாளைய பூமி நெறி கொண்டு வாழ இன்றைய சிறுவர் சமுதாயம் சீர் தூக்கப்பட வேண்டும். ஆனால் இன்று இவர்களின் நிலை என்ன?

“எல்லா குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அவர் நல்லவர் ஆவதும் தீயவர் ஆவதும் அன்னையர் வளர்ப்பினிலே” இது யாவருமறிந்த கூற்று. ஒரு குழந்தை பெற்றோரின் அரவணைப்பிலும், கண்காணிப்பிலும் இருக்குமாயின் அக் குழந்தை தவறு செய்வது அரிதாகும். ஆனால் இன்று எத்தனை குழந்தைகளுக்கு இவ்வன்பும், அரவணைப்பும் கிடைக்கின்றது. இறந்த உடலைப் புதைக்கும் ஆறடி நிலத்தைக் கூட பணம் கொடுத்து பெற வேண்டிய இக் காலத்தில் சமுதாயத்தில் எதிர் நீச்சல் போட வேண்டுமாயின் தாய், தந்தை இருவருமே தொழில் புரிதல் வேண்டும். அவ்வாறு அன்றேல் தாயோ, தந்தையோ குடும்பத்தைக் காக்க பிற நாடுகளுக்கு பயணிக்க வேண்டும். ஆயினும் இதனால் தனிமைப்படுத்தப்படும் பிள்ளைகளின் நிலை விரக்தி உணர்வை மனதில் வளர்த்து கண்காட்டும் வழியில் எல்லாம் செல்லத் துணிய வைக்கின்றது. இதனை தடுக்க மேற்கொள்ளப் போகும் நடவடிக்கை என்ன?

வேலைக்கமர்த்தி பிள்ளைகளைப் பராமரிப்பது முட்டாள்தனம். பணத்தை நாடுபவர்களிடம் உண்மையான பாசம் கிடைப்பது அரிது. ஆதலால் பெற்றோர்களே இதில் முக்கிய கவனம் எடுத்து தங்கள் பிள்ளைகளுக்கு நேரத்தை ஒதுக்கி தங்கள் குழந்தைகளுடன் பரஸ்பர உறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லையேல் பிள்ளைகளின் தாய், தந்தையர் வீட்டில் இருந்து பிள்ளையின் வளர்ச்சியை முன்னெடுத்தல் வேண்டும் கூட்டுக் குடும்பமாக வாழ்தல் இதற்கான நல்ல தீர்வாகும். பலரின் கண்காணிப்பில் ஒரு குழந்தை வளரும் போது விரக்திக்குள்ளாகாது. தவறுகள் குறைக்கப்படுகின்றன. இவை எதிர்கால தேசத்தை குழந்தைகள் மூலம் கட்டியெழுப்ப பயன்மிக்க சில தீர்வுகளாகும். மேலும் கல்வி ஒரு மனிதனை முழு மனிதன் ஆக்குகின்றது. கண்களானது உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒன்றாகும். கண்களினாலே நன்மை தீமைகளை அறிந்து கண்டறிகின்றோம். அதுபோல எண்ணையும், எழுத்தையும் பயின்றவனே நாட்டு நடைமுறையில் நன்மையெது, தீமையெது என அறிந்து நடக்கின்றான். இவ் அரிய கல்வியானது இன்று எத்தனை சிறுவர்களின் கைகளுக்கு எட்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்களும் கற்காமல் கல்வியின் பயனை அறியாமல் தங்கள் பிள்ளைகளின் கல்விக்கும் ஊக்கமளிக்காமல் இருக்கும் பழப்பறிவு குன்றிய பெற்றோர்கள் கல்வியின் பயன் அறிந்து தங்கள் பிள்ளைகளை கற்பிக்க வேண்டும். எது எவ்வாறு இருப்பினும் குழந்தையின் உடல் வளர்ச்சி, அறிவு வளர்ச்சி, மொழிவளர்ச்சி, ஆளுமைவளர்ச்சி, சமூகவளர்ச்சி, என்பன விருத்தி பெற பிள்ளைப் பருவத்தில் பாடசாலைக் கல்வி அவசியமாகின்றது.

எனவே இக்கல்வியினை பெற்றுக் கொடுத்து பெற்றோர்கள் அயராது உழைத்தால் பிள்ளையின் எதிர்காலம் இலட்சியப் பாதையில் செல்லும். இளமையில் கற்கும் கல்வியே எதிர்கால வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைகிறது. உயர் பதவி வகிக்கவும் உயர் சமூக பண்பாட்டுடன் வளரவும் இளமையிற்கல்வி அவசியமாகின்றது.

*" சிறுவர்கள் சிறையில் அடைக்கப்பட வேண்டியவர்கள் அல்ல.*
*சிகரத்தில் வைத்து போற்றப்பட வேண்டியவர்கள். "*

**சா.சிலக்சனா**
சது / அன்னமலை நாவிதன்வெளி
மகாவித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டாம் வேற்றுமை



வேண்டாம் வேண்டாம்
இந்தக் கொடிய யுத்தம்
மாண்டது போதும் மாண்டது போதும்
மனித இனம்
வேண்டாம் இக்கொடிய யுத்தம்

வேண்டாம் வேண்டாம்
இந்த இன பேதம்
மாண்டது போதும் மனித இனம்
இறைவா! நீ படைத்த
மனித இனம்
அது ஒன்றே போதும்

வேண்டாம் வேண்டாம்
ஜாதி பேதம்
இறைவா! நீ படைத்த – இரு ஜாதி
அதுவே போதும்
ஆண் ஜாதி பெண் ஜாதி
அவ்விரண்டும் போதும்.


கு.அனோஜன்
சது / அன்னமலை நாவிதன்வெளி
மகாவித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேர்ந்து வாழ்வோம்.



தீபகற்பம் நம் நாடு

அது மகிழ்ச்சி தரும் ஒரு மனை

இனங்கள் இங்கே மூன்று

சேர்ந்து வாழ்ந்தால் சொர்க்க வீடு

அறிவில் விளைந்த பூமி

அதனை அழகு பண்ணும் மனிதர்

அறிவால் உலகை வெல்லு

அன்பால் பகையை கொல்லு

போர்க் கொடுமை அதிகம் – அதில்

அழுகிய பிணங்கள் யாரோ?

மானிடர் என்ற பேரு

மதமேன் என்று கேளு

சாதி பேதம் போக்கி – புது

வரலாற்றை ஆக்கு

காந்தி மாமா போல் – நீ

கண்ணியமாய் தினம் வாழு

**கிரிஜா**
சது / வேப்பையடி கலைமகள்
வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரின் கைத்தடி



போரென்னும் கிழவன் புறுபுறுத்து வலியாலே
கணமும் துடித்து
காயங்களால் இரத்தம்
பெருகிட கை, காலை இழுத்து இழுத்து தள்ளாடி
கண்ணிரெண்டால் கண்ணீர் வடியக்
களைத்த படி
போய்க் கொண்டிருக்கின்றான்
புழுதி படிந்த உடை
குருதி திட்டமாக உறைந்திருக்கும் காய உடல்
பசி மயக்கம்
வெயிலில் கிறுகிறுக்கும் நெற்றி கண்
இரண்டும்
பார்வை மங்கி நடக்கின்றான்
அவனுக்குத் துணையாய் அவன் பிடித்த கைத்தடியே
அவன் நடக்க உதவுகிறது
அவன் வழியை உரைத்திடுது
தான் செய்த பாவத்தை தானுணர்ந்தும் உணராதும்
ஊர்த் திட்டுப் பழியால் உருக்குலைந்தும்
கடலை நோக்கிப்
போய்க் கொண்டிருக்கின்றான்



இத்தனைக்குப் பின்னும்
தன்னால் சாதிக்க முடியுமென கைத்தடியை
நம்பி முணுமுணுத்து நகர்கின்றான்
கைத்தடி யார்?
அப்பாவி மக்கள் தான் அவன் பிடித்த கைத்தடியாம்!
எப்பாடு பட்டுமதைப் பயன்படுத்தி
தன் சுடலை
வாசலில் அதை எறிந்து விட்டு
அவன் போய் விடுவான்
மீள அதை எடுத்து வந்து
அஹிம்சை வாதி வாழவைப்பான்

**டிலாந்தினி**
சது / ராணமடு இந்து மகா வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பும் நவீன தொழில் நுட்பமும் - (வீதி நாடகம்)

வடிவேலு வயலில் வேலை செய்து விட்டு களைப்புடன் வீடு திரும்புகிறார். அப்போது அவர் மனைவி காமாட்சி புத்தகம் வாசிப்பது போல் போலச் செய்கிறாள். வடிவேலு நீண்ட நேரமாக மலைப்பாக அதையே பார்த்துக் கொண்டிருக்கிறார். அத்தோடு பக்கத்தில் உள்ளவர்களின் கவனத்தையும் திசை திருப்புகிறார்.

**இனி**

*வடிவேலு:* எடியேய் காமாட்சி. என்ன.. புதுசா படிக்கிற பழக்கமேதும் வந்துத்தா ஒனக்கு அதுகும் ஒன்ட புரிசன் வந்ததைக் கூடக் கவனிக்காம.. ஆ.. (ங்) எப்பயிலருந்து இந்தப் பழக்கம்.

*காமாட்சி:* ஏன்?.. நான் ஏதும் வேலைகளைப் போட்டுத்தா சும்மா இருக்கனென்டு நெனச்சிங்களா? அது சரி என்னக் கல்யாணம் கட்டக்குள்ள மட்டும் எத்தனையாம் வகுப்பு படிச்சிருக்கா எண்டு ஏன் கேட்டயள்.

*வடிவேலு:* எல்லாருங் கேக்கிற மாதித்தானே நானும் கேட்டன்

*காமாட்சி:* எல்லாரும் ஏன் அப்படி கேக்கிறாங்கண்டு தெரிஞ்சா கேட்டயள்

*வடிவேலு:* இல்ல.. கொஞ்சமென்டான படிச்சிருந்தாத்தானே நாலு பேரோடையும் நல்லாப் பழகுவாண்டு.. அதான்

*காமாட்சி:* இன்னுங் கொஞ்சம் படிச்சா நாப்பது பேரோட நல்லாப் பழகலாமெண்டு ஏன் நினைக்கிறயளில்ல

*வடிவேலு:* நானிப்ப என்ன கேட்டுப்பொட்டனெண்டு இப்படிக் கதைக்கா நீ

*காமாட்சி:* நானிப்ப என்னதான் கதைச்சிப்பொட்டன்

*வடிவேலு:* எடியேப் இந்தக் காலத்தில படிக்க வேண்டிய புள்ளைகளே ஒழுங்காகப் படிக்குதுகளில்ல.. நீ இனியென்ன படிச்சி உத்தியோகமா பாக்கப்போறா

*காமாட்சி:* நானிப்ப எங்க படிச்சநான்?

*வடிவேலு:* அப்ப.. இப்ப கொஞ்ச நேரத்துக்கு முதல் என்ன செஞ்சி கொண்டு இருந்த நீ?

*காமாட்சி:* அய்யோ.. நான் படிக்கல்ல.. வாசிச்சிக் கொண்டிருந்த நான்

*வடிவேலு:* படிக்கிறதும் வாசிக்கிறதும் பாக்கக்குள்ள ஒண்டுபோலத்தானே தெரியும்?

*காமாட்சி:* அது.. படிச்சவங்களுக்கு அப்படி தெரியாது.

*வடிவேலு:* அப்பண்டா.. நான் படிக்கலண்டா சொல்றா? நானும் நாலாம் வகுப்பு வரைக்கும் படிச்ச நான்தான் தெரியுமா?

*காமாட்சி:* அதும் நாலுதானா? ஒங்களுக்கு நாலு நல்ல ராசியான நம்பர் போல.. நல்லா வேலெய்து பாருங்க

*வடிவேலு:* ஒனக்கிட்ட வாயத் தந்தா பெரிய லெச்சரிச்சிட்டுதான் இருப்பா. செரி எனக்குப் பசிக்கிது வா போய் சாப்பிர்ற வழியைப் பாப்பம்.

(இருவரும் அரங்கைவிட்டு வெளியேறுகிறார்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலாவும் நந்தினியும் பழைய நண்பிகள். வரும் வழியில் சந்தித்துக் கொள்கிறார்கள். கமலாவின் கையில் ஒரு நாவல் இருக்கிறது. நந்தினியின் கையில் மரக்கறி கூடை ஒன்று இருக்கிறது.

*கமலா* : என்ன.. கன காலமா ஆளயே காணல்ல..?

*நந்தினி* : நாங்க ஊரிலதான் இருக்கம். உன்னக் காண்றதெண்டால் பொறயக் காணற மாதிக் கெடக்கு. அது சரி அதென்ன கையில ஏதோ புத்தகம்?

*கமலா* : நான் நம்மட ஊரு Libraryல போய் Story book ஒண்டு எடுத்துத்து வாறன்

*நந்தினி* : அதெல்லாம் பொடியனுகள் போய் வாசிக்கிற இடம். நான் தெரியாமத்தான் கேக்கன் வீட்டில உனக்கு வேற வேலயே இல்லையா? Story book அது இதெண்டு தெரிஞ்சயெண்டா வீட்டில புருஷன ஒழுங்கா கவனிக்கிறது எப்படி?

*கமலா* : புருஷன ஒழுங்கா கவனிக்கிறதெப்படியெண்டெல்லாம் இதுபோலப் புத்தகங்களிலயெல்லாம் சொல்லியிருக்காங்கடி

*நந்தினி* : இதுகளயெல்லாம் வாசிச்சுத்தான் செய்யனுமெண்டு இருக்கா என்ன

*கமலா* : நீ நினைக்கிற மாதிரி இல்ல.. நான் வீட்டில வேலெய்களயெல்லாம் முடிச்சிப் பொட்டு லீவா இருக்கக்குள்ளதான் ஒரு பொழுது போக்குக்காக Story book குகள் வாசிப்பன்.

*நந்தினி* : சரி.. சரி.. நான் கொஞ்சம் அவசரமாப் போகனும். வீட்டில் சமயல் வேலைகளயெல்லாம் இனித்தான் கவனிக்கனும். நம்ம எப்படித்தான் சமச்சிப் போட்டாலும் அந்த மனிசனுக்கு வர வர நாக்கில ருசி இல்லாமப் பொயித்து. அதுவும் சமையல் பிந்தித்தெண்டா அதே கெதிதான்.

*கமலா* : அது சரி.. நீ வரிச கணக்கில எத்தின நாளெக்குத்தான் அதையே திரும்பத் திரும்ப சமச்சித்தித்து இருப்பா? புதிசா ஏதும் சமைக்கனுமெண்டு நினைச்சிருக்கயா?

*நந்தினி* : புதிசு புதிசா சமைக்கிறதெண்டா அதென்ன புது உடுப்புப் போடுறமாதரியெண்டு நினச்சித்தயா?

*கமலா* : நீயும் நானும் கடைசி வரைக்கும் ஒண்டாத்தானே படிச்சம். படிச்சத்துக்கு தொழில் கெடைக்கல்ல என்றத்துக்காக நான் அந்தப் பழக்கத்த இன்னும் விடல்லத்தானே. நீ நம்மட Library பக்கம் போய்ப் பாத்திருக்கயா? சமையல் குறிப்பு எண்டு எவ்வளவோ புத்தகமெல்லாம் வந்திருக்கு. அதுகள எடுத்துக் கொண்டு வாசிச்சுப் பாத்தாவது புதுப்புது சமையல்களெல்லாம் பழகலாந்தானே. ஒரே சமயல எத்தின நாளெய்க்குத்தான் அலுப்பிலாம சாப்பிர்றது?

*நந்தினி* : நீ சொல்றதும் நல்ல ஐடியாதான். அடுத்த தரம் Libraryக்கு போகக்குள்ள என்னயும் கூப்புடு வாறன் சரியா?

*கமலா* : சரி..சரி..நீபோய் சமைக்கிற வழியப்பாரு. நம்ம இன்னொரு நாளைக்குச் சந்திப்பம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவி கணனியில் வலைத்தொடர்பின் ஒரு பக்கத்தை பார்த்துக் கொண்டு இருப்பது போல பாவனை செய்கிறான். அவன் தாத்தா அப்போது வீட்டில் நுழைகிறார்

*தாத்தா* : என்னடா மனே கன நேரமா அதயே பாத்தித்து இருக்கா? அப்படிமதில என்னதான் பாக்கா?

*ரவி* : இல்ல தாத்தா நான் Net இல கட்டுர ஒண்டு வாசித்துத்து இருந்த நான்

*தாத்தா* : என்னடா மனே சொல்றா? Net இல கட்டுரையா? அப்படியெண்டா என்னடா மனே?

*ரவி* : ஓம் தாத்தா Computer ல Internet வசதியெண்டு ஒண்டு இருக்கு அந்த வசதிய இந்தக் Computer க்கு எடுத்தமெண்டா நம்ம விரும்பின விசியமெல்லாம் பார்க்கலாம் தாத்தா.

*தாத்தா* : அப்படியாடா மனே. எங்கட காலத்திலயெல்லாம் ஏடுகள வாசிக்கிறதும் சிலேடுகளில எழுதிப்படிக்கிறதுந்தாண்டா மனே. இப்படி இருக்கெக்க வெள்ளக்காரனுகள் அதுஇதெல்லாம் எண்டு என்னவெல்லாம் கண்டு புடிச்சத்துக்குப் பொறகுதான் பேப்பர் வந்ததும், அதில எழுதத் தொடங்கினதும், அச்சடிக்கத் தொடங்குனதும்டா மனே. என்னவோ அவனுகள் செஞ்ச புண்ணியத்தாலதான் மகாபாரத, ராமாயாணப் புத்தகங்களையெல்லாம் லேசா வாசிக்கேலுதடா மனே. இல்லாட்டி இப்ப ஏடுகளயெல்லாம் இவ்வெளவு காலத்துக்கு வெச்சிருக்கலாமா?

*ரவி* : ஏன் தாத்தா இப்ப அந்த புத்தகங்களையெல்லாம் Internet இல கூடப் பார்க்கலாம். ஏன் அந்தக் கதைகளைக் கூட Video படமாகக் கூடப் பார்க்கலாம் தாத்தா.

*தாத்தா* : ஓ.. அப்படியா? இந்தக் காலத்தில விஞ்ஞானம் அவ்வெளவு கெதியா முன்னேறித்ததாடா மனே?

*ரவி* : என்ன தாத்தா. இதெல்லாம் எவ்வளவு காலம் வந்தது.

*தாத்தா* : இப்படியெல்லாம் இருக்கெண்டு எனக்கு இன்டைக்குத்தாண்டா மனே தெரியும்.

*ரவி* : ஏன் தாத்தா பேப்பரெல்லாம் வாசிக்கிறல்லயா?

*தாத்தா* : எங்கடா மனே பேப்பரெல்லாம் வாசிக்கிற. அத வாசிக்கிறதெண்டா நம்ம ஊரு வாசிக சாலைக்குத்தானேடா மனே போகனும். அதுக்கெல்லாம் எவ்வளவு தூரம்.. என்னால இந்த வயதுல நடக்கேலாடா மனே. எனக்கு இந்த மகாபாரத புத்தகமெல்லாம் எண்ட மகள் நந்தினிதான் எடுத்துக் கொண்டு தாறவள்.

*ரவி* : தாத்தா நீங்க பேப்பரெல்லாம் வாசிக்காட்டியும் மகாபாரதம், ராமாயணம், போன்ற கதைகளயாவது வாசிக்கிறதால உலகத்தில நடக்கிற நீதி. அநீதி போன்ற பல விசியங்களயெல்லாம் அனுபவமா அறிஞ்சி கொள்றீங்கதானே. அதுவே எவ்வளவு பெரிய விசயம் தாத்தா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தாத்தா:* ஓண்டா மனே. இந்தக் காலத்தில மனிசனா வாழனுமென்டா நல்ல நல்ல விசயங்கள வாசிக்கப் பழகனும். வாசிப்புத்தான் ஒரு மனுசன மழு மனிதனாக்குமெண்டு நாங்க பள்ளிக் கூடத்தில படிக்குள்ள எங்கட வாத்தியார் சொல்லித் தந்தது எனக்கு இன்னும் ஞாபகம் இருக்குடா மனே.

*ரவி:* எங்கட தமிழ் ரீச்சரும் எங்கள புத்தகங்கள் வாசிக்கனுமெண்டு சொல்றவ தாத்தா.

*தாத்தா:* ஓண்டா மனே.. நான் அந்தக் காலத்தில கொஞ்சமாவது படிக்காம இருந்திருந்தா, வாசிப்பு பழக்கம் இல்லாம இருந்திருந்தா இந்த வயதில பொழுது போறெண்டா எனக்கு கஷ்ரமாத்தான் இருந்திருக்கும். நான் இப்ப இந்த மாதிரிப் புத்தகங்கள் வாசிக்கிறதால மனதிக்கும் கொஞ்சம் நிம்மதியா இருக்கிதுடா மனே. எனக்கும் இப்படியான கதைகளயெல்லாம் படமா பாரக்கனுமெண்டு ஆசயா இருக்கிடா மனே. எனக்கு ஒரு நாளைய்க்கு இதிகள ஒண்ட கொம்பியூட்டறில போட்டுக் காட்டுவாயா?

*ரவி:* ஓம் தாத்தா. நிங்க எப்ப பாக்கனுமெண்டு சொல்லுங்க நான் உங்களுக்கு அதுகள Net இல இருந்து எடுத்து போட்டுக் காட்டுறன்.

தாத்தா: செரிடா மனே. நான் போயிற்று இன்னொரு நாளைக்கு வாறன்.

*ரவி:* ஓம் தாத்தா நானும் இனி Library க்கும் போகனும். போயிற்று வாங்க.

(இருவரும் பேசுகிறார்கள்)

பின் “எடுத்துக் கூறி” அரங்கத்திற்கு வந்து மக்களை விழித்து வாசிப்பின் தேவை பற்றியும் நவீன தொழில்நுட்பத்தின் வளரச்சி பற்றியும் பேசுகிறார்.

திரு. கோ. மகேஸ்வரன் (B.A.Hons)
ஆசிரியர்,
சது/ராணமடு இந்து மகாவித்தியாலயம்
மத்தியமுகாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலங்கொழிக்கும் நாவிதன்வெளி



இயற்கை தந்த செல்வங்கள்
இயல்பாய் அமைந்து சிறப்பூட்டும்
வளமிகு நிலங்கள் சூழ்ந்துள்ள
வனப்புடன் மிளிரும் பூமியிது

வளைந்து நெளியும் வாய்க்காலும்
வடிவாய் அமைந்த வரம்புகளும்
பார்ப்போர் நெஞ்சை ஈர்த்து விடும்
பழம் பெரும் நாவிதன்வெளியுமிது

கழனிகள் உழுது பதமாக்கி
காலங்கண்டு விதைவிதைத்து
உரமும் நீரும் உவந்தூட்டும்
உழவர் வதியும் தேசமிது

நெற்றியின் வேர்வை நிலமதிலே
நித்தமும் சிந்தி நனைத்திடவே
ஊக்கமாய் என்றும் உழைக்கின்ற
உரவோர் வாழும் மண்ணுமிது

மக்கள் வாழ்வு மலர்ந்திடவே
மகிழ்வுடன் என்றும் விளங்கிடவே
பொதுப்பணி செய்வோர் பலர்கொண்ட
பொலிவுடன் திகழும் தலமுமிது

மூவின மக்களும் ஓரினமாய்
முழுமனதுடனே ஒற்றுமையாய்
பேதங்கள் ஏதும் இல்லாத
பெரியோர் வாழும் வாசலிது

வழிபடும் நல்ல ஆலயங்கள்
வளர்ந்திடும் கல்விக் கூடங்கள்
பயன்மிகு சேவைப் பணிமனைகள்
பாங்காய் அமைந்த பாருமிது

கண்டதும் நாவினில் தேனூறும்
கனிவகை எங்கும் காட்சி தரும்
பலவகையான காய்கறிகள்
பரந்தே செழிக்கும் பதியுமிது

நாட்டுக் கூத்தும் நாட்டியமும்
நயம்பட உரைக்கும் நாவலரும்
பாவலர் பாடகர் நிறைந்துள்ள
பல்சுவைக் கலைகளின் கூடமிது

பரந்து விரிந்த பாதைகளும்
பயன் மிகு நல்ல வீடுகளும்
அனைத்து வளமும் நிறைந்துள்ள
அழகிய நாவிதன்வெளியிதுவே

மருதமுனை கலீல்
பிரதேச செயலகம்,
நாவிதன்வெளி




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை தேசம்



அன்னியர் ஆட்சிக்கெதிராக
அன்று நாங்கள் கிளர்த்தெழுந்து
சிங்கள தமிழர் பேதமின்றி
சேர்ந்தே சுதந்திரம் பெற்றிட்டோம்

ஆங்கிலேயர் சென்றதன் பின்
ஆர்வத்துடன் நாம் ஒன்றாகி
ஆட்சி நடத்த எண்ணையிலே
ஆளும் பேதம் வந்ததையா

இனமத பேதம் கொண்டே நாம்
இரண்டுபட்டுப் போனதால்
ஒருவர்க் கொருவர் எதிராக
ஓராயிரம் சண்டையிட்டோமே

இனத்துவ ஆட்சியாளர்களால்
இலங்கையர் நாம் வேறாகி
இடர்கள் பலவோ தினம் கண்டு
இருண்ட யுகத்தில் வாழ்ந்திட்டோம்....

சாத்வீக போராட்டம் முதல் பின்
ஆயுதவடிவம் பெற்றதினால்
முப்பது ஆண்டுகள் மாண்டிழுந்தோம்
முடிவு எதுவும் கணாமல்.....

கொடிய யுத்தம் இலங்கையிலே
கோரத்தாண்டவம் ஆடியதால்
நெடிய பிணியை எமக்களித்து
நேராய் ஓடி மறைந்தது காண்.....

புதிய உலகம் பிறந்தது போல்
போரும் ஓய்ந்து போனதுகாண்
இலங்கை தேசம் இனிமீண்டும்
இன்ப லோகம் ஆகிடுமா..???..

யுத்தம் ஓய்ந்து போனதுவே
அளப்பெரிய சாதனைதான் – இனி
மீண்டும் வந்து சேராமல் – எமை
ஆண்டால் என்றும் பேரின்பம்.....

இனிய காலம் புலர்ந்ததென்று
எண்ணி நாமும் குதூகலிக்க
புதிய அரசு தந்திடுமா
புரியா புதிராம் சமாதானம் ???.....

எம் விழிநீர் இன்னும் காயல்ல
எமை விடுமோ இங்கு
பெரும்பான்மை
எப்போ எமக்கு சமாதானம்
என்று ஏங்குது இங்கே சிறுபான்மை.....

சாம்(பகீ)
தம்பலவத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கல்முனை மாநகரில்

# வெல்டெக்ஸ்


நாளைய டிசைன்களை இன்றே அறிமுகப்படுத்தும் ஸ்தாபனம்,
சிறுவர்,சிறுமியர்களுக்கான அனைத்து ஆடைகளுக்கும்,
பெண்களுக்கான சகலவிதமான ஆடைத் தெரிவுகளுக்கும்,
ஆடவருக்கான அனைத்து ஆடைவகைகளையும்,
எண்ணம்போல் தெரிவு செய்திட நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

**Well Tex**

17, Main Street,
kalmunai.
Tel: 067-3691099


**வெல் டெக்ஸ்**

இல:17,பிராதன வீதி,
கல்முனை.
தொ.பே:067-3691099


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NEW LANKA



## DISTRIBUTORS

DISTRIBUTORS FOR ALL ITEMS OF WOODEN & STEEM HOUSEHOLD FURNITURE , OFFCE EQUIPMENTS, STATIONERIES, BUILDING MATERILAS, ELECTRIC & ELECTRONIC MATERIALS, LUXURIES ITEMS, AGRICULTERAL ITEMS, TIMBER, STEEL & PLASTIC ITEMS, HOUSEHOLD GOODS, SCHOOL ITEM, BOOKS ,PRINTING ITEMS, BAND ITEMS, ITEMS OF LIGHT & SOUND PRODUCTS ETC......



**NO:5, MAIN STREET,**
**AMMAN KOVIL ROAD, COUNER,**
**KALMUNAI.**

| | |
|---|---|
| **TEL** | **:067-2229869,2221342** |
| **FAX** | **:067-2221342** |
| **MOBILE** | **:077-3052310** |






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவிதன்வெளி பிரதேச செலகப்பிரிவின் அபிவிருத்தியில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பு

ஒரு பிரதேசத்தின் அபிவிருத்தியில் பலரது பங்களிப்பும் இன்றியமையாததாகும். அப்பிரதேச மக்கள், அவர்களது நிர்வாக ரீதியான தேவைகளை நிறைவு செய்யும் அரச திணைக்களங்கள், அப்பிரதேசத்தில் காணப்படும் பிரதேச அபிவிருத்திக் குழுக்கள், சமூக தொண்டர் அமைப்புகள் மற்றும் அரசுடன் சாராத அரசுடன் இணைந்து செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

கடந்த 2004ம் ஆண்டின் சுனாமி அனர்த்தத்தின் பின்னர் ஒப்பீட்டளவில் இலங்கையில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பு(சுனாமிக்கு முன்னரான காலங்களை விட) அதிகம் என்றே கூறவேண்டும். மக்களின் பௌதீக மற்றும் உளவியல் சாரந்த அனைத்து தேவைகளையும் மிக விரைவாக சிறப்புற கட்டியெழுப்பியதில் இவற்றின் பங்களிப்பு முதன்மையானது என்பதில் இருவேறு கருத்திற்கு இடமில்லை. அந்தவகையில் நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கிராமங்களின் வளர்ச்சிக்கும் பல்வேறு அரசசார்பற்ற நிறுவனங்கள் தமது பங்களிப்பை தொடர்ந்தும் வழங்கி வருகின்றன. பிரதேசம் சாரந்து மிகவிரைவாக மக்களது பல்வேறு தேவைகளும் இவ்வரச சார்பற்ற நிறுவனங்களால் செய்து கொடுக்கப்படுகின்றன.

## நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவில் வேல்ட்விஷன் லங்கா நிறுவனத்தின் அபிவிருத்தி செயற்பாடுகள்

World Vision

வேள்ட் விஷன் லங்கா நிறுவனமானது உலக சிறுவர்களின் நலனை மையமாகக் கொண்டு தன் பணிகளை முன்னெடுத்துச் செல்கின்ற ஓர் அரச சார்பற்ற நிறுவனமாகும். அந்தவகையில் நாவிதன்வெளி பிரதேச சிறார்களின் நலனை குறிக்கோளாகக் கொண்டு கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக தனது பிராந்திய அபிவிருத்தித் திட்டத்தினை ஜேர்மன் நாட்டின் அனுசரணையுடன் முன்னெடுத்துச் செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. அதிலும் குறிப்பாக இங்கு வாழ்கின்ற வறிய குடும்பங்களின் பொருளாதார, கல்வி, சுகாதார மேம்பாடுகளில் தனது கரிசனையைச் செலுத்தி தனது நீண்ட கால அபிவிருத்திப்பணிதனை முன்னெடுத்துச் செல்கின்றது. அந்தவகையில் 1500 இற்கும் அதிகமான சிறுவர்கள் அனுசரணைத் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றனர்.

### வேள்ட் விஷன் லங்கா தற்போது கடமையாற்றும் கிராமசேவகர் பிரிவுகள்:

**நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிலே 20 கிராமசேவகர் பிரிவுகள் காணப்பட்ட போதிலும் அதிலே குறிப்பாக பின்வரும்08 கிராமசேவகர் பிரிவுகளிலே தற்போது கடமையாற்றி வருகின்றது.**

1. சவளக்கடை
2. நாவிதன்வெளி – 01
3. அன்னமலை – 02
4. சாளம்பைக்கேணி – 05
5. சொறிக்கல்முனை – 02
6. மத்தியமுகாம் - 02
7. மத்தியமுகாம் - 03
8. மத்தியமுகாம் - 04

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**வேள்ட் விஷன் லங்கா நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டங்கள்:**

1. கல்வி
2. சுகாதாரம்
3. பொருளாதார அபிவிருத்தி
4. சமாதானமும், அதனைக்கட்டியெழுப்புதலும் -விஷேட திட்டம்
5. உணவுப் பாதுகாப்பு - விஷேட திட்டம்

**கல்வித் திட்டம்**

குறிப்பாக கல்வி திட்டத்தின் மூலம் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை மாணவர்களின் கல்வி தொடர்பான அபிவிருத்தி மேம்படுத்தப்படுகின்றது. அந்தவகையில் பாடசாலைகளின் உட்கட்டமைப்பு, பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயற்பாடுகள், ஆங்கில மொழி விருத்தி போன்ற பல்வேறுபட்ட நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது.

**“வாழ்க்கைக்கான ஆங்கிலம்”**



நாவிதன்வெளி சிறார்களின் ஆங்கில அறிவினை மேம்படுத்தும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட இத் திட்டத்தினூடாக இப்பிரதேசத்தின் 06 கிராமசேவகர் பிரிவுகளில் கிட்டத்தட்ட 90 இற்கும் அதிகமான பிள்ளைகள் இதன் மூலம் பயனடைகின்றனர். பாடசாலை வகுப்பறை முறையிலிருந்து முற்றிலும் வேறுபட்ட முறையில் இப்பயிற்சி நெறியானது பிள்ளைகள் ஆங்கிலத்தினை இலகுவாகவும், தெளிவாகவும் கற்றுக்கொள்வதற்கும்,பேசுவதற்கும் உறுதுணையாக அமைகின்றது.




அத்துடன் சிறுவர்கள் மத்தியில் ஆங்கில மொழியில் விருப்பினைத் தூண்டுவதற்கும் அவர்களின் திறமைகளை வெளிக்கொணர்வதற்குமாக “ஆங்கில தின” நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டு கிராம மட்டங்களிலும், பாடசாலை மட்டங்களிலும் நடாத்தப்பட்டு வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இவ் ஆங்கில பயிற்சி நெறியினை நடாத்துவதற்காகவும், வளவாளர்களை இப்பிரதேசத்திலேயே உருவாக்குவ தற்காகவும் நாவிதன்வெளி பிரதேசத்திலிருந்தே இளைஞர்கள் தெரிவுசெய்யப்பட்டு பயிற்சியளிக்கப்பட்டு கிராம மட்டங்களில் பிள்ளைகளுக்கு இப்பயிற்சி நெறிகளை நடாத்துகின்றனர்.



“வாழ்க்கைக்கான ஆங்கிலம்” திட்டத்தின் அடுத்த கட்டமாக தரம் 09 மாணவர்கள் உள்வாங்கப்பட்டு விசேட பயிற்சியினைப் பெற்று வருகின்றனர். இது அவர்களது மொழி விருத்திக்கு மென்மேலும் உறுதுணையாக அமைவதுடன் க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தி பெறுவதற்கும் பயனுள்ளதாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.



பாடசாலைகளில் சிறுவர் பூங்காக்கள் அமைக்கப்பட்டு மாணவர்களின் செயற்பாட்டு ரீதியான கல்வி நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மெல்லக்கற்கும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு உதவும் வகையில் ஊக்குவிப்பு கற்கை நெறிகளும் கல்வி உபகரணங்களும் அனைத்து வறிய குடும்பத்தினைச் சேர்ந்த பிள்ளைகளுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.



பிரதேசத்தின் கலாசார, பாரம்பரியங்களை வெளிப்படுத்தும் நோக்குடன் கலாசார நிகழ்வுகள் இந்நிறுவனத்தின் அனுசரணையுடன் சிறுவர் கழகங்களினால் ஒழுங்குபடுத்தப்பட்டு நடாத்தப்படுகின்றன.




சமூகத்தின் கல்வியறிவினை மேம்படுத்தும் பொருட்டு மத்திய முகாம்- 02 இல் பொது நூலகமொன்று அமைக்கப்பட்டு புத்தகங்கள் வழங்கப்பட்டன. இதன்மூலம் அப் பகுதியிலே காணப்படுகின்ற சிறுவர்கள், மற்றும் இளைஞர்கள் பெரும் பயனடைகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நாவிதன்வெளி பிரதேசத்தின் சிறுவர் கழகங்களை இணைத்து சிறுவர் முகாம்கள் நடாத் தப்படுகின்றன. இதன்மூலம் அவர்களுக்கான வாழ்க்கைத்திறன் பயிற்சிகள் வழங்கப் படுகின்றன.

**<u>சுகாதாரத் திட்டம்</u>**


சுகாதாரத் திட்டத்தின் மூலம் நோய்த்தடுப்பு, போஷாக்கு, மது ஒழிப்பு போன்ற பல்வேறுபட்ட தலைப்புக்களில் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடாத்தப்படுதுடன் மலசல கூடங்கள், பொதுக்கிணறுகள், விழிப்புணர்வு பதாகைகள் என்பனவும் அமைக்கப்பட்டு வருகின்றன.



குறிப்பாக 70 மலசல கூடங்களுக்கு மேல் தனிப்பட்ட குடும்பங்களுக்கும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

மது பாவனை சம்பந்தமான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் சமூக மட்டத்திலே ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என பல்வேறு பிரிவினரையும் உள்ளடக்கி நடாத்தப்பட்டது. இது குறிப்பாக கல்முனை ஆதார வைத்தியசாலையின் உளவள பிரிவினரின் ஒத்துழைப்புடன் நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அனைத்து சிறுவர்களுக்கான பற்சிகிச்சை முகாம்களும், பற்சுகாதாரம் சம்பந்தமான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளும் நடாத்தப்படுகின்றன. இதிலே பிரதேசத்தைச் சேர்ந்த 525 இற்கும் அதிகமான பிள்ளைகள் இங்கு சிகிச்சையளிக்கப்பட்டு பயனடைந்தமை குறிப்பிடத்தக்கது.



பொதுச்சுகாதார உத்தியோத்தர்களின் உதவியுடன், போஷாக்கு நிறைந்த உணவுகளை தயாரித்துக் காண்பிக்கும் நிகழ்வுகள் 08 வேள்ட்விஷன் கிராமங்களிலும் அனைத்து தாய்மாருக்கும் நடாத்தப் பட்டது.



சுகாதார மற்றும் வைத்திய சேவையில் வறிய மக்கள் முழுமையாக பெறும் நோக்கில் மத்திய முகாம் - 02ல் உள்ள மாவட்ட வைத்திய சாலையின் நோயாளர் பிரிவிற்குத் தேவையான தளபாடங்கள், மற்றும் மருத்துவ உபகரணங்கள் கொடுக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நாவிதன்வெளி-01 மற்றும் மத்தியமுகாம்-03 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த இரண்டு இதய நோய் சிறார்களுக்கு இருதய சத்திர சிகிச்சைக்கு ரூபா. 7 லட்சம் செலவில் முழுமையான அனுசரணை செய்யப்பட்டு குணப்படுத்தப்பட்டது. இதன் மூலம் அவர்கள் பூரண குணமடைந்து ஆரோக்கியமாக தங்கள் கல்வியினை தொடர்கின்றார்கள்.




உலக புகைத்தல் எதிர்ப்பு தினத்தினை முன்னிட்டு வீதி நாடகங்கள் மூலம் சமூக விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சிகள் கிராமத்து இளைஞர்களின் முழுமையான ஈடுபாட்டுடன் அனைத்து கிராமங்களிலும் நிகழ்த்தப்பட்டன. இதன் மூலம் விழிப்புணர்வினைப் பெற்றோர், மேலதிக ஆலோசனைக்காகவும், சிகிச்சைக்காகவும் கல்முனை ஆதார வைத்தியசாலையின் உளவள பிரிவிற்கு செல்வது குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும்.



சிறார்களின் உடல் நலத்தினைக் கருத்திற் கொண்டு பொது மருத்துவ முகாம்கள், அனைத்து திட்ட கிராமங்களிலும் நடாத்தப்படுகின்றன. இதன் மூலம் 700 இற்கும் அதிகமான சிறார்கள் இம்முறை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மக்களை இயற்கை அழிவுகளிலிருந்து பாதுகாப்பதற்காகவும், முன் ஆயத்தங்களினை மேற்கொள்வதற்காகவும் அனர்த்த முகாமைத்துவம் சம்பந்தமான விழிப்புணர்வு பயிற்சிக்கருத்தரங்குகளும், கிராமங்களிற்கான அனர்த்த முகாமைத்துவத் திட்டங்கள் தயாரித்தலும் அனைத்துத் திட்ட கிராமங்களிலும் நடாத்தப்பட்டன.

## பொருளாதார அபிவிருத்தித் திட்டம்

நாவிதன்வெளி பிரதேச மக்களின் பொருளாதாரத்தினை மேம்படுத்தும் நோக்குடன் பல்வேறுபட்ட செயற்பாடுகள், வேள்ட் விஷன் பிராந்திய அபிவிருத்தித் திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக உள்ளூர் வளப்பிரயோகம் மற்றும் சிறுகைத் தொழில் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன் ஒருங்கிணைந்த பண்ணைத் திட்டத்தின் மூலமாகவும் விவசாய உள்ளீடுகள் பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்றன.



உள்ளூர் வளங்களைக் கொண்டு இயற்கை முறையில் வளமாக்கிகளை தயாரிக்கும் பயிற்சிக் கருத்தரங்குகள் பிரதேசத்தின் விவசாயிகளுக்காக நிபுணத்துவம் பெற்ற வளவாளர்களால் நடாத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரதேசத்தின் விவசாயிகளின் விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக வெளிக்களப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.



உள்ளூர் வளங்களைக் கொண்டு இயற்கையான முறையிலே பயிர்களுக்குத் தேவையான உரம் தயாரிக்கும் பயிற்சி முன்னெடுக்கப்படுகின்றது.



கால்நடை வைத்திய அதிகாரியின் மூலம் கால்நடை வளர்ப்பு சம்பந்தமான பயிற்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமாதானமும், அதனைக் கட்டியெழுப்புதலும் (Peace Building Project)

மேற்படி விஷேட திட்டமான சமாதானமும், அதனைக் கட்டியெழுப்புலும் என்னும் திட்டமானது நாவிதன்வெளி பிரதேசத்திலே காணப்படுகின்ற தமிழ், முஸ்லிம், சிங்கள இன மக்கள் மத்தியிலே நல்லிணக்கத்தை உண்டுபண்ணுவதற்காக ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலம் குறிப்பாக சிறுவர் மற்றும் இளைஞர் கழகங்களை ஒன்றிணைக்கும் வகையில் பயிற்சிக் கருத்தரங்குகள், பாசறைகள், வெளிக்கள சுற்றுலாக்கள், விளையாட்டு நிகழ்வுகள் என்பன நடாத்தப்படுகின்றன.

இந்நிறுவனத்தின் பணிகளை விட வேறுபல அரசசார்பற்ற நிறுவனங்களும் இப்பிரதேசத்தின் மக்களது அடிப்படைத் தேவைகளைக் கட்டியெழுப்புவதில் ஆர்வம் காட்டி வருகின்றன.

Care, ZOA, Oxfam, World Coneern, SWOAD, Help Age Srilanka, Palm foundation (Partner of Mery Groups), Sewalanka foundation, MWRAF, Solidarites's, Helvetas, Joint with AEDO, Sareeram, RHESDO, Samaritan's Purse, Gafso, Women Deve.centre, Rural Develop foundation, Lanka Rain water H.F, IOm, ILO, UNDP, Swedovision,

இந் நிறுவனங்கள் ஒவ்வொன்றும் தத்தமது அடிப்படை நோக்கங்களுக்கு அமைய இப்பிரதேசத்தின் அபிவிருத்தியில் பல்வேறு பங்களிப்புக்களையும் செய்துவருகின்றன.

1) மக்களது வாழ்வாதார அடிப்படைத் தேவைகளை கண்டறிந்து அவற்றுக்கு உதவுதல்.

2) அதனூடாக அவர்களது பொருளாதார நிதிநிலைமைகளை உயர்த்துதல்.

3) சிறுவர்களுக்கான அடிப்படைக் கல்விக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

4) விவசாயிகளுக்கான பயிர்ச்செய்கை வசதிகளை உருவாக்கிக் கொடுத்தல் மற்றும் கால்நடைவளர்ப்பு அதனோடு தொடர்புடைய தொழில் வழிகாட்டல்களை செய்து கொடுத்தல்.

5) பொதுநோக்கு கட்டட நிர்மாண பணிகளை செய்து அதனூடாக சமூக சேவைக்கான ஊக்குவிப்புக்களை வழங்குதல்.

6) விளையாட்டு மைதானங்கள், வீதிபுனரமைப்பு, பொதுக்கிணறு, மலசலகூட வசதிகள், போன்றவற்றை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் அடிப்படை சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

7) பிரதேசத்தின் முக்கிய பிரச்சினையான நீர்ப்பிரச்சினைக்கு இயன்றவரை உதவிகளை செய்து வருதல் மற்றும் நீர் சுத்திகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

9) சமாதான ஒன்று கூடல்கள், உளவியல் விருத்தி செயற்பாடுகள், மருத்துவ சேவைகள், போன்றவை தொடர்பான சிறந்த செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

என பலவகையான சேவைகளை இந்நிறுவனங்கள் இப் பிரதேச மக்களுக்கு வழங்கி வருகின்றன. இவ்வாறான சேவைகளை சரிவர நிறைவேற்றுவதற்கு இப்பிரதேசத்தின் அரச திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள் கிராமசேவகர்கள், சமூர்த்தி உத்தியோகத்தர்கள், பிரதேச அபிவிருத்திக் குழுக்கள், போன்றவர்களின் ஒத்துழைப்புடன் மக்களது பிரச்சனைகளை இனங்கண்டு அவர்களுக்கான தேவைகளை அறிந்து திட்டமிட்டு நிறைவேற்றுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை நலன் பாராட்டு பெறுபவர்கள் விபரம்

## அருட்தந்தை சேவியர் ரஜீவா இருதயராஜ் (அருட்தந்தை)



நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட சொறிக்கல்முனைப்பங்கில் கடந்த 2006 ஆம் ஆண்டிலிருந்து கிறிஸ்தவ சமயம் சார்ந்தும், சமூகத்தின் அபிவிருத்தி சார்ந்ததும் பல அளப்பரிய சேவைகள் ஆற்றியமைக்காக எமது செயலகத்தினால் அருட்தந்தை சேவியர் ரஜீவா இருதயராஜ் அவர்கள் சிறப்புப் பெறுகின்றார். மேலும் சொறிக்கல்முனை பங்கில் உள்ள கிழக்கிலங்கையில் மிகவும் சிறப்புப் பெற்று விளங்கும் சொறிக்கல்முனை ஹொலிகுரூஸ் தேவாலயத்தினை திருத்தலமாக வளர்ச்சி பெற செய்வதில் இவரது பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும்.

**முழுப்பெயர்** :- அருட்தந்தை சேவியர் ரஜீவா இருதயராஜ்

**பிறந்த இடம்** :- மூதூர்

**கல்வித்தகைமை** :- மெய்யியல் பட்டதாரி, இறையியல் பட்டதாரி

## ஜனாப். அப்துல் சத்தார் முகம்மது முஜாஹித் (ஊடகவியலாளர்)



நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவில் கடந்த 2002 ஆம் ஆண்டிலிருந்து ஊடகவியலாளராக சேவையாற்றி பிரதேசத்தின் நிறை குறைகள் அனைத்தையும் ஊடகங்கள் ஊடாக வெளிக்கொணர்ந்து உரிய அதிகாரிகளின் கவன ஈர்ப்பினூடாக பிரதேச அபிவிருத்திக்கு தன்னால் இயன்ற துறைசாரந்த சேவையினை சிறப்பாக மேற்கொண்டு வருவதையிட்டு ஜனாப்அப்துல் சத்தார் முகம்மது முஜாகித் அவர்கள் பிரதேச செயலகத்தின் சிறப்பினை பெறுகின்றார்.

**முழுப்பெயர்** :- அப்துல் சத்தார் முஹம்மது முஜாஹித்

**முகவரி** :- இல:08, V.H.வீதி.
நற்பிட்டிமுனை - 01

**துறை சார்ந்த சேவை** :- 2002ல் இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாப். முகம்மது ஹனி முகம்மது ஹுசைன் ( ஆயுர் வேத வைத்தியர்)



நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவில் சுமார் 28 வருடங்களாக (1980களில் இருந்து) ஆயுர்வேத வைத்திய துறைசார்ந்து தமது சேவையினை வழங்கி வரும் முகம்மது ஹனி முகம்மது ஹுசைன் அவர்கள் தொடர்ந்தும் சிறப்புற சேவையாற்ற வேண்டும் எனும் நோக்கில் எமது பிரதேச செயலகப் பிரிவால் சேவை் நலன் பாராட்டு பெறுகின்றார்.

| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | :- | முகம்மது ஹனி முகம்மது ஹுசைன |
| முகவரி | :- | 06ம் கொலனி, சொறிக்கல்முனை - 03 |
| துறைசார்ந்த சேவை | :- | 1980 களிலிருந்து |

## திரு. முருகேசு நவரெத்தினம் (பிறப்பு இறப்பு பதிவாளர்)



நாவிதன்வெளி பிரதேச செயலகப்பிரிவில் நீண்டகாலமாக பிறப்பு இறப்பு பதிவாளராக சேவையாற்றியமைக்காக அதாவது 1963ம் ஆண்டிலிருந்து சுமார் 37 வருடங்களாக தமது சேவையை சிறப்புற ஆற்றியமைக்காக எமது பிரதேச செயலகம் சார்பில் இச் சேவை பாராட்டு வழங்கப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | :- | முருகேசு நவரெத்தினம் |
| முகவரி | :- | தோம்புதுார் வீதி<br>நாவிதன்வெளி - 01 |
| பிறந்த திகதி | :- | 1938 - 03 - 02 |
| துறைசார்ந்த சேவை | :- | 1963 களிலிருந்து |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாப். உமறுகத்தா மொகம்மட் இஸ்ஹாக் (ஊடகவியலாளர்)



கடந்த 2004ம் ஆண்டிலிருந்து ஊடகவியலாளராக தனது சிறந்த சேவையை மேற்கொண்டுவரும் ஜனாப் உமறுகத்தா மொகம்மட் இஸ்ஹாக் அவர்கள் எமது நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவின் பல்வேறு குறை நிறைகளையும் அவ்வப்போது ஊடகங்களுடாக வெளிக்கொணர்ந்து உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு இட்டுச்செல்கின்றமையினை சிறப்பிக்கும் முகமாகவும் எமது பிரதேச கலாசார விழாவில் சிறப்புப் பெறுகின்றார்.

| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | :- | **உமறுகத்தா மொஹமட் இஸ்ஹாக்** |
| **முகவரி** | :- | **259A, பள்ளிவாசல் வீதி, நற்பிட்டிமுனை,கல்முனை.** |
| **துறைசார்ந்த சேவை** | :- | **2004ல் இருந்து** |
| **ஊடகத்துறை விருதுகள்** | :- | **மக்கள் சேவைக்கான ஊடக விருது, சாமஶ்ரீ கலாஜோதி விருது** |

## ஜனாப். அப்துல் ஜப்பார் முகம்மட் ஹனீபா



1987ல் இருந்து ஊடகத்துறையில் பணியாற்றிவரும் ஜனாப்.அப்துல் ஜப்பார் முஹம்மட் ஹனீபா நாவிதன்வெளி பிரதேசம் சார்ந்து ஆற்றிவரும் ஊடக சேவையினை கௌரவிக்கும் வண்ணம் எமது கலாசார விழாவில் சிறப்பு பெறுகின்றார்.

| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | :- | **சாமஶ்ரீ,தேசகீர்த்தி அப்துல் ஜப்பார் முகம்மட் ஹனீபா** |
| **முகவரி** | :- | **$238^{B}$, 05ம் குறுக்குத்தெரு, சம்மாந்துறை - 11** |
| **ஊடக சேவை** | :- | **1987களில் இருந்து** |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச கலை இலக்கிய போட்டி முடிவுகள் – 2009

**01) கனிஷ்ட பிரிவு :-**

**கட்டுரை:**

| | | |
|---|---|---|
| 1ம் இடம்: | யோகநாதன் சமிர்தா | - சது/விவேகானந்தா மகா வித்தியாலயம், 15ம் கிராமம், நாவிதன்வெளி. |
| 2ம் இடம்: | வன்னிய சிங்கம் சஞ்சிகா | - சது/நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயம், நாவிதன்வெளி. |
| 3ம் இடம்: | சண்முகநாதன் சரண்யா | - சது/நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயம், நாவிதன்வெளி. |

**கவிதை**

| | | |
|---|---|---|
| 1ம் இடம்: | கோணேசன் கருணா | - சது/நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயம், நாவிதன்வெளி. |
| 2ம் இடம்: | க. கோபிஷாலினி | - சது/றாணமடு இந்து மகா வித்தியாலயம், நாவிதன்வெளி. |
| 3ம் இடம்: | அ. பிரதீஸ்ஜெகன் | - சது/சொறிக்கல்முனை ஹொலிக்றோஸ் மகா வித்தியாலயம், சொறிக்கல்முனை. |

**02) சிரேஷ்ட பிரிவு**

**கட்டுரை:** :

| | | |
|---|---|---|
| 1ம் இடம்: | விக்னராசா ராதிகா | - சது/விவேகானந்தா மகாவித்தியாலயம், 15ம் கிராமம், நாவிதன்வெளி. |
| 2ம் இடம்: | பு. சிவப்பிரியா | - சது/றாணமடு இந்து மகா வித்தியாலயம், நாவிதன்வெளி. |
| 3ம் இடம்: | இ. கீர்த்திகா | - சது/றாணமடு இந்து மகா வித்தியாலயம், நாவிதன்வெளி. |

**கவிதை**

| | | |
|---|---|---|
| 1ம் இடம்: | வே. வினோஜா | - சது/நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயம், நாவிதன்வெளி. |
| 2ம் இடம்: | கோ. மாலதி | - சது/நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயம், நாவிதன்வெளி. |
| 3ம் இடம்: | கோ. சசிவதனி | - சது/நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயம், நாவிதன்வெளி. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச கலை இலக்கிய போட்டி முடிவுகள் – 2010

**01) சிரேஷ்ட பிரிவு :-**

கட்டுரை:

| | | |
|---|---|---|
| 1ம் இடம்: | செல்வி. யோ.பிரியந்தி | -சது/றாணமடு இந்து மகா வித்தியாலயம் |
| 2ம் இடம்: | செல்வி. ஜெ.பிரதீபா | -சது/றாணமடு இந்து மகா வித்தியாலயம் |

சிறுகதை:-

**01) சிரேஷ்ட பிரிவு :-**

| | | |
|---|---|---|
| 1ம் இடம்: | செல்வி. க.தாரணி | -சது/றாணமடு இந்து மகா வித்தியாலயம் |
| 2ம் இடம்: | செல்வி. கி.சுலோஜனா | -சது/றாணமடு இந்து மகா வித்தியாலயம் |

கவிதை

**01) சிரேஷ்ட பிரிவு :-**

| | | |
|---|---|---|
| 1ம் இடம்: | செல்வி. யோ.பிரியந்தி | -சது/றாணமடு இந்து மகா வித்தியாலயம் |
| 2ம் இடம்: | செல்வி. ஜெ.பிரதீபா | -சது/றாணமடு இந்து மகா வித்தியாலயம் |

**02) கனிஷ்ட பிரிவு :-**

| | | |
|---|---|---|
| 2ம் இடம்: | செல்வி. கி.நிறோசினி | -சது/றாணமடு இந்து மகா வித்தியாலயம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

# நவில்கின்றோம்

நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவில் இரண்டாவது முறையாக நடாத்தப்படும் கலாசார விழா சிறப்பாக நடைபெறும் பொருட்டு பலரும் பல்வேறு வகைகளில் எமக்கு உதவிகளை வழங்கி இருந்தனர். அவர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகள் உரித்தாகும் அவ்வகையில்......

- எமது கலாசார விழாவின் சிறப்புக்களுள் ஒன்றான கலாசார சாகித்திய விழாசிறப்பாக நடைபெறுவதற்கு பொருட்டு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வழி நடத்திய பிரதேச செயலாளரும், கலாசாரப் பேரவையின் தலைவருமான திரு.கலாநிதி.மு.கோபாலரெத்தினம் அவர்கள்,
- பக்கபலமாய் நின்று நெறிப்படுத்திய உதவிப் பிரதேச செயலாளரும்,கலாசாரப் பேரவையின் உப தலைவருமான திரு.க.கரன் அவர்கள்,
- விழா சிறப்புறுதற் பொருட்டு விழாவிற்கான ஏற்பாடுகள் ஆரம்பித்த காலம் முதல் விழா நிறைவு பெறும்வரை திட்டமிட்டு ஆலோசனைகள் வழங்கி பக்கபலமாய் நின்றுதவிய கலாசாரப் பேரவை உறுப்பினர்கள்,
- விழா சிறப்புற நடைபெறுவதற் பொருட்டு அனுசரணையாளர்களாக நிதி உதவிகள் மற்றும் ஏனைய உதவிகளை வழங்கிய அரச சார்பற்ற நிறுவனங்கள்,தனி நபர்கள்,விளம்பரதாரர்கள், மற்றும் நிதியுதவியளித்து சிறப்புற மலர் வெளிவருவதற்கு உதவிய றூழசடன எளைவழர லங்கா நிறுவனத்திற்கும் அதன் முகாமையாளர் திரு.இருதயம் மைக்கல் அவர்களுக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
- விழா சிறப்புற உதவிய கிராம சேவை உத்தியோகத்தர்கள்,சமுர்த்தி உத்தியோகத்தர்கள், செயலக உத்தியோகத்தர்கள்,
- பிரதேச கலை இலக்கிய போட்டிகள் நடாத்துவற்கு ஆதரவு வழங்கிய கல்வித் திணைக்களம், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கலைஞர்கள்,கலா மன்றங்கள்,
- போட்டிகள் நடாத்துவற்கு இடம் தந்துதவிய பாடசாலை அதிபர்கள்,
- கட்டுரைகள்,கவிதைகள்,சிறுகதைகள் போன்றவற்றை திருத்தி வெற்றியாளர்களை தெரிவு செய்த ஆசிரிய வள ஆலோசகர்கள்
- விழாவில் கலந்து சிறப்பித்த பிரதம,சிறப்பு விருந்தினர்கள்,சிறப்பு சொற்பொழிவாளர்கள், கலை,இலக்கிய ஆர்வலர்கள்,பத்திரிகையாளர்கள்,
- மலருக்கான வாழ்த்துச் செய்திகள் வழங்கிய பெருந்தகைகள், ஆக்கங்கள் தந்துதவிய கட்டுரையாளர்கள்,கவிஞர்கள்,
- ஆலோசனைகள் வழங்கிய நண்பர்கள்,மலர்க்குழு உறுப்பினர்கள்,
- ஆர்வலர்கள் மற்றும் பல வகைகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Our Vision for**
**Every child life in all its fullness,**
**Our Prayer for every heart the will to make it so.**

World Vision

# ஒருங்கிணைந்த நோக்கு

சிறுவர்களை, மிக முக்கியமாக அதிக பாதிப்புக்குள்ளான,
அதி வறுமையில் வாடுகின்ற சிறுவர்களை முன்னுரிமைப்படுத்தலும்,
அவர்கள் நலனை மேம்படுத்துவதற்கு, அவர்களையும் அவர்கள் சார்ந்த
குடும்பங்களையும் சமூகத்தையும் கட்டியெழுப்புதலும்.



**அனைத்து சிறுவர்களும்**

- முழுமையான தேகாரோக்கியத்தை அனுபவித்தல்
- வாழ்க்கைக்கான கல்வியறிவைப் பெறல்
- இறைவனை அன்பு செய்வதோடு, அயலவரையும் அன்பு செய்தல்
- அக்கறை கொள்ளப் படுவதோடு, பாதுகாக்கப்படுவதும், பங்களிப்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PRINT : GREATEST OFFSET PRINTERS, KALMUNAI. 0775 000 675